

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மார்ச் 01, 2012 | புரட்சி 11 | முழக்கம் 07 | விலை: ரூ.2.50


## ‘இடிந்தகரை’ மக்கள் குரல் தமிழகத்தின் போர்க்குரலானது

# அணுசக்திக்கு எதிராக ஆர்ப்பரித்த மக்கள்

***இடிந்தகரை பொது மக்கள் கூடங்குளம் அணுஉலைக்கு எதிராக கடந்த பல மாதங்களாக நடத்தி வந்த போராட்டம் தமிழக மக்களின் ஒருமித்த உரிமைப் போராட்டமாக உருவெடுத்துள்ளது. ஜனவரி 26 ஆம் தேதி தலைநகர் சென்னையில் திரண்ட மக்கள் சக்தி இதை உறுதி செய்துவிட்டது.***

அணுமின் சக்திக்கு எதிராக நடக்கும் போராட்டம் கூடங்குளம், இடிந்தகரை கிராம மக்களின் போராட்டமல்ல; தமிழக மக்களின் போராட்டம் என்பதை சென்னையில் பிப்.26 ஆம் தேதி நடந்த எழுச்சி மிக்க கருத்தரங்கம், மாபெரும் பேரணி, கடலலைபோல் மக்கள் திரண்டிருந்த திறந்த வெளி மாநாடு - ஆட்சியாளர்களுக்கு உணர்த்தியது.

நாட்டில் பணபலம், அதிகார பலத்துடன் உலா வரும் தேர்தல் அரசியல் பகாசுர கட்சிகளின் பங்களிப்பின்றி வெகு மக்கள் இயக்கங்களுடன் இணைந்து மக்கள் நடத்திய இந்த அணுஉலை எதிர்ப்பியக்க மாநாடு, உலகம் முழுதும் நடந்து வரும் அணுஉலை எதிர்ப்பு இயக்கத்தில் குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்வாகும். பல்லாயிரக்கணக்கில் பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் பல்வேறு சுமைகளை இடர்ப்பாடுகளையும் ஏற்று மாநாட்டில் பங்கேற்றார்கள். பல்லாயிரக்கணக்காக திரண்ட மக்கள் கூட்டத்தில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் இளைஞர்கள் என்பது சமூகத்துக்கு நம்பிக்கையூட்டும் செய்தியாகும். காலை 10.30 மணியளவில் சென்னை, அண்ணா கலையரங்கில் மனோ, தங்கராசு தலைமையில் நடந்த கருத்தரங்கில் அரங்கம் நிரம்பி வழிந்தது. உட்கார இடமின்றி நின்று கொண்டே மக்கள் கருத்துகளைக் கேட்டனர்.

வழக்கறிஞர் பானுமதி தமது உரையில், “மக்கள் வாழ்வாதாரங்களை மறுத்து, இந்தியாவை வல்லரசாக்க விரும்புகிறார்கள். இந்திய ஆட்சியாளர்கள், தேசியத்தை உயர்த்திப் பிடிக்கும் ஆட்சியாளர்கள், அவர்கள் காங்கிரசானாலும், பா.ஜ.க.வானாலும், தேசிய இனங்களின் உரிமைகளை மறுத்து, பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஏகாதி பத்திய நாடுகளுக்கும் இந்திய இறையாண்மையை அடகு வைத்து விட்டார்கள். அதை மீட்போம்; அந்த மீட்புப் போராட்டம், இந்தியாவிலிருந்து தமிழ்நாடு மட்டுமல்ல, அனைத்து தேசிய இனங்களின் விடுதலையில் தான் அடங்கியிருக்கிறது” என்று குறிப்பிட்டார்.

‘பூவுலகின் நண்பர்கள் இயக்கம்’ சார்பில் பேசிய பிரபாகரன், சில அழுத்தமான கேள்விகளை எழுப்பினார். “மின்சாரப் பற்றாக்குறையை கூடங்குளத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்தால் மட்டுமே போக்க முடியும் என்று கூறுவதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். எந்த ஒரு அணுமின் நிலைய உற்பத்தியிலும், அதன் உற்பத்தித் திறன் என்று அறிவிக்கப்படுவதில் 40 சதவீத மின்சாரம் மட்டுமே பெறப்பட்டு வருகிறது.

கூடங்குளம் உற்பத்தித் திறன் 1000 மெகாவாட் என்று கூறப்பட்டாலும், தமிழகத்துக்குக் கிடைக்க போவது 200 மெகாவாட்டுக்கும் குறைவாகவே இருக்கும்” என்றார். தற்போது, தமிழக அரசு நியமித்துள்ள விஞ்ஞானிகள் குழு சில மணி நேரங்களை மட்டும் செலவிட்டு, பார்வையிட்டு விட்டு, அணுஉலை பாதுகாப்பானது என்று கூறி விட்டது.

சில வாரங்களுக்கு முன்பு சென்னையில் சேப்பாக்கத்திலுள்ள தலைமைச் செயலகம் (காசா மகால்), தீ விபத்துக்குள்ளான போது, அது பற்றி ஆராய, தமிழக அரசு நியமித்த குழு, கட்டிடப் பகுதிகளை பார்வையிட்டுவிட்டு, இக்கட்டிட அமைப்பு முறையிலுள்ள கோளாறுகள் பற்றி ஆராய குறைந்தது ஒரு வாரகாலம் வேண்டும் என்று கூறியதை, சுந்தர்ராசன் சுட்டிக் காட்டினார்.

அண்மையில் உடல்நலம் பாதிக்கப்பட்ட சோனியாகாந்தி, இந்திய மருத்துவத் துறையை நம்பாமல், சிகிச்சைக்கு அமெரிக்கா சென்றார். இந்திய மருத்துவத் துறையை நம்ப இயலாது என்று சோனியாவே கருதும்போது, கூடங்குளம் விபத்து நேரிட்டால் மக்களை இந்திய விஞ்ஞானிகள் சில மணி நேரங்களிலேயே காப்பாற்றி விடுவார்கள் என்று மக்களை நம்பச் சொல்வது நியாயம்தானா? கூடங்குளத்தை சுற்றியுள்ள 10 பஞ்சாயத்துகள் தீர்மானம் போட்டு எதிர்ப்பதாலேயே ஒரு ஆட்சி, தனது திட்டத்தைக் கைவிட வேண்டுமா என்று காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் கே.எஸ். அழகிரி கேட்கிறார். இந்த பஞ்சாயத்துகள்தான் உண்மையான மக்கள் பிரதிநிதிகள். அவர்கள்தான் முடிவெடுக்கும் அதிகாரம் படைத்தவர்கள் என்று, அவர்களின் தலைவர் ராஜீவ்காந்தி கொண்டுவந்த பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் உருவானவைகளே இந்த பஞ்சாயத்துகள் என்பதை அவருக்கு நினைவுபடுத்துகிறோம். அவர்களின் தலைவர் கொண்டுவந்த சட்டத்தையே ஏற்க மறுக்கிறார்களா? ஒரு அன்னிய நாட்டுடன் உருவாக்கிய ஒப்பந்தத்தை செயல்படுத்த,

4 ஆம் பக்கம்

### குடங்களில் மக்கள் குவித்த நிதி ரூ.42,000

மாநாட்டில் மாநாட்டுச் செலவுக்கு நிதி கேட்டு திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில், பெண்கள், தொண்டர் அணி தோழர்கள் குடங்களை ஏந்தி நிதி கேட்டனர். மக்கள் அளித்த நன்கொடை ரூ.42,000/-.

“வெளிநாட்டுப் பணத்தைப் பயன்படுத்தி அணு உலைக்கு எதிர்ப்பைத் தூண்டி வருவதாக பிரதமரும், காங்கிரசாரும் செய்து வரும் பொய்யுரைகளுக்கு மக்கள் தந்த பதிலடியே இந்த நிதி” – என்று மாநாட்டுத் தலைவர் கொளத்தூர் மணி தனது உரையில் பலத்த கரவொலிக்கிடையே குறிப்பிட்டார்.

### சங்கரன்கோயில் இடைத்தேர்தல்: ம.தி.மு.க. வேட்பாளருக்கு கழகம் ஆதரவு

சங்கரன்கோயில் இடைத்தேர்தல் குறித்து கழகத்தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் பெரியார் திராவிடர் கழகம், களத்தில் நின்ற எந்த அணியையும் ஆதரிக்க இயலாத நிலையில் தேர்தலில் விலகி நின்றது. இப்போது சங்கரன்கோயில் இடைத் தேர்தலில் பல்வேறு கட்சிகளும் தனித்தனியாக களம் இறங்கியுள்ளன. போட்டியிடும் கட்சிகளில் முல்லைப் பெரியாறு உரிமை, கூடங்குளம் எதிர்ப்பு, ஈழத் தமிழர் பிரச்சனை, தூக்குத் தண்டனை எதிர்ப்பு போன்ற தமிழர் உரிமைகளுக்காக முனைப்புடன் போராடி, வாதாடி வரும் அமைப்பான ம.தி.மு.க., தனது கட்சியின் வேட்பாளரை (தோழர் சதன் திருமலைக்குமார்) நிறுத்தியுள்ளது.

தமிழர்களின் உரிமைக்கான களங்களில் உறுதியுடன் முனைப்பாகப் போராடிவரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் நிறுத்தியுள்ள வேட்பாளரை ஆதரித்து வெற்றிப் பெறச் செய்ய வேண்டுமாய் சங்கரன்கோயில் தொகுதி வாக்காளர்களை பெரியார் திராவிடர் கழகம் கேட்டுக் கொள்கிறது. ம.தி.மு.க.வுக்கு அளிக்கும் வாக்கு தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டங்களுக்கான ஆதரவை வெளிப்படுத்தும் ஒரு நல்வாய்ப்பு எனக் கருதி செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– கொளத்தூர் மணி, தலைவர், பெரியார் திராவிடர் கழகம்**

# ஓடுகிறார்.... ஓடுகிறார்... நாராயணசாமி ஓடுகிறார்

கூடங்குளம் மக்கள் போராட்டத்தின் தலைவர் எஸ்.வி. உதயகுமாருக்கு வெளிநாட்டுப் பணம் ரூ.150 கோடி வந்துள்ளது என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தொடர்ந்து ஊடகங்களுக்கு பேட்டி அளித்து, பொதுக் கூட்டங்களிலும் பேசி வந்தார். அமைச்சர் நாராயணசாமியின் இந்த அவதூறுக்கு எதிராக உதயகுமார், மத்திய அமைச்சர் நாராயணசாமிக்கு தனது வழக்கறிஞர் இராதாகிருட்டிணன் வழியாக தாக்கீது அனுப்பியிருந்தார். உயர்நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு ஏற்றுள்ளது. இந்த நிலையில் அமைச்சர் நாராயணசாமி, தொண்டு நிறுவனங்கள் வழியாக உதயகுமாருக்கு பணம் வருவதாகத் தாம் கூறவே இல்லை என்றும், தான் கூறாத ஒன்றை கூறுவதாக உதயகுமார் கூறி, தன்னை களங்கப்படுத்துவதாகவும், தனது வழக்கறிஞர் வழியாக பதில் அனுப்பியுள்ளார். இதன் மூலம் 'வீரம்' பேசிய நாராயணசாமி, தலைகுப்புற சரணடைந்துள்ளார்.

"உங்களுடைய கட்சிக்காரர் உதயகுமார் கூறியிருப்பதுபோல், அமைச்சர் நாராணசாமி, அவருக்கு எதிராக, எந்தப் புகாரையும் கூறவில்லை. அவர் நடத்தும் தொண்டு நிறுவனம் வரியாக ரூ.150 கோடி பெற்றதாக அமைச்சர் நாராயணசாமி ஒரு போதும் கூறவில்லை. இது அமைச்சர் நாராயணசாமிக்கு எதிரான தவறான குற்றச்சாட்டு" (My client denies that he had made totally a false allegation against your client that NGO run by your client recieved foreign funds to the tune of 1.50 crores.") என்று நாராயணசாமி தனது பதில் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க ஆதரவு கொண்ட நிறுவனங்களும், சில அய்ரோப்பிய தொண்டு நிறுவனகளும் கூடங்குளம் எதிர்ப்புப் போராட்டத்துக்கு நிதி வழங்குவதாக 'சயின்ஸ்' என்ற இதழுக்கு அளித்த பேட்டியில் குற்றம் சாட்டியிருந்தார். அதையே நாராயணசாமியும் இப்போது உதயகுமாருக்கு பதிலாக அனுப்பியுள்ள 'நோட்டீசில்' கூறியுள்ளார். மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டிய பிரதமர், இப்படி தங்களுக்கு சாதகமான கருத்துகளை தேடிப் பிடிப்பது கூடாது; மக்களை திருப்திப்படுத்த வேண்டும் என்று, 'இந்து' நாளேடு இது குறித்து தலையங்கம் தீட்டியுள்ளது.

சுவீடன் நாட்டில் செயல்படும் 'அய்டியா' என்ற தொண்டு நிறுவனம், 'பாதிப்பிலிருந்து மீட்டெடுக்கும் ஆதார மய்யம்' (Reconciliation Resource Centre) என்ற அமைப்பை நடத்தி வருகிறது. இந்த அமைப்பு, தெற்காசியாவில் பாதிப்புற்ற மக்களுக்கான மீட்டெடுப்பு முயற்சிகள் குறித்து 2005 ஆம் ஆண்டு மார்ச் 17-19 தேதியில் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்க உதயகுமாருக்கு அழைப்பு அனுப்பியது. மீண்டும் 2006 ஆம் ஆண்டு சுவீடனில் நடந்த ஆய்வுக் கூட்டத்திலும் அவர் பங்கேற்றார். இது தவிர, தமக்கும் அந்த நிறுவனத்துக்கும் நிதி தொடர்பான எந்த தொடர்பும் இல்லை என்று உதயகுமார் திட்டவட்டமாக மறுத்துள்ளார். 'அய்டியா' அமைப்பு இது தொடர்பாக தனக்கு அனுப்பிய கடிதங்களையும், தாம் அனுப்பிய பதிலையும் ஆவணங்களோடு செய்தியாளர்களிடம் உதயகுமார் வழங்கினார்.

இப்போது நாராயணசாமி, வழக்கறிஞர் வழியாக அனுப்பிய மனுவில், நார்வே நாட்டின் 'அய்டியா' நிறுவனத்தின் உதவியோடு தமிழ்நாட்டில் செயல்படும் 'அய்டியா' தொண்டு நிறுவனத்துக்கு 2006-11 ஆம் ஆண்டுக்குள் ரூ.30 லட்சம் பணம் வந்துள்ளதாகவும், இந்த 'அய்டியா' அமைப்புக்கு வேறு வழிகளில் பணம் வந்துள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். தமிழ்நாட்டில் இயங்கும் 'அய்டியா' தொண்டு நிறுவனத்தை உதயகுமார் நடத்தவில்லை. 'பாதிக்கப்பட்டோர் பாதிப்பிலிருந்து மீட்டெடுக்கும்' ஆய்வு விவாதங்களில் பங்கேற்றதைத் தவிர பணம் தொடர்பாக தமக்கும் 'அய்டியா'வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று உதயகுமார் சான்றுகளுடன் மறுத்து விட்டார்.

கூடங்குளம் பிரச்சனையோடு செயற்கையாக உயிரூட்டப்படும் 'பி.டி. கத்தரிக்காய்' எதிர்ப்புக்கும், வெளிநாட்டுப் பணம் வருவதாக அதே பேட்டியில் மன்மோகன் சிங் குற்றம்சாட்டியிருந்தார். பிரதமர் குற்றச்சாட்டை அவரது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளவரும், சுற்றுச்சூழல் பொறுப்பை ஏற்கனவே நிர்வகித்தவருமான ஜெய்ராம் ரமேஷ் மறுத்துள்ளார். 2010 ஆம் ஆண்டு 'பி.டி. கத்தரிக்காய்' உற்பத்திக்கு தாம் தடை விதித்தது, நியாயமான காரணங்களுக்கே தவிர, தொண்டு நிறுவனங்கள் வற்புறுத்தலால் அல்ல என்று மன்மோகன் கூற்றை மறுத்துள்ளார்.

உதயகுமாருக்கு 150 கோடி ரூபாய் பணம் வந்தது என்று சவால்விட்ட சண்டியர் நாராயணசாமியோ, "நான் அப்படி கூறவே இல்லை, என் மீது அபாண்டமாக பழி போட வேண்டாம்" என்று தப்பி ஓடுகிறார். போகிற போக்கில் 'சுவீடனி'லிருந்து பணம் வருகிறது என்கிறார். அதற்கும் உதயகுமார் ஆப்பு வைத்து விட்டார்.

பிட்டி கத்தரிக்காயை தடை செய்யும் போராட்டத்துக்கும் வெளிநாட்டுப் பணம் தொண்டு நிறுவனங்கள் வழியாக வருகிறது என்ற பிரதமரின் புலம்பலுக்கு அவரது கட்சியைச் சார்ந்த அமைச்சரே ஆப்பு வைத்து விட்டார்.

பிரதமரே! நீங்களும் நாராயணசாமி தரத்துக்கு இறங்கி விட்டீர்களா அய்யா!

# பெருமாள் மலையில் பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம்

பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம் கருப்புச் சட்டைகளின் வரலாற்றில் அழியா புகழ் கொண்ட பெருமாள் மலையில் நடந்தது. பெருமாள் மலைக்கு ஒரு வரலாற்று சிறப்பு உண்டு என்பது 1985 ஆம் ஆண்டு பக்தர்கள் சிலரால் கடவுளின் சக்தி என்ற முழக்கத்தோடு சென்னிமலை கோவில் படிக்கட்டில் மாட்டுவண்டி ஏற்றினார்கள். அதே சென்னிமலையில் இது கடவுளின் சக்தி அல்ல; மனித சக்தி தான் என்று கூறி பெரியாரிஸ்டுகள் மாட்டு வண்டி ஏற்ற முயன்றபோது காவல்துறை தடுத்தது. அதன் பின்னர் சென்னிமலையைவிட செங்குத்தான படிகளைக் கொண்ட பெருமாள்மலையில் தோழர்கள் மாட்டுவண்டி ஏற்றி கடவுள் சக்தி என்ற புரட்டை முறியடித்தனர். அத்தகைய சிறப்பு மலை பெருமாள் மலை பகுதிக்கு உண்டு.

கூட்டத்திற்கு பொ.இராசண்ணா தலைமையேற்க, மாவட்ட தலைவர் நாத்திகசோதி, அங்கு அமைக்கப்பட்டிருந்த கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். கிருட்டிணகுமார் வரவேற்புரை நிகழ்த்த, ஈசுவரமூர்த்தி, பகுத்தறிவாளர் பேரவை ப. சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். காவை. இளவரசன், 'மந்திரமல்ல தந்திரம்!' என்ற நிகழ்ச்சியினை நடத்தி சாமியார்களின் மோசடிகளை விளக்கி உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து இரத்தினசாமி (தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர்) உரையாற்றினார். மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் - 'சாதி ஒழிப்பே சமூக விடுதலை' என்ற தலைப்பில் சாதிகளின் இழிநிலை குறித்தும் அதன் மூலம் மக்கள் அடிமைப்பட்டுக் கிடப்பதையும் விளக்கினார்.

தொடர்ந்து தலைமை கழக பேச்சாளர் கோபி வேலுச்சாமி உரை நிகழ்த்தினார். சோதிடர்களின் புரட்டுகளையும், கடவுளின் பெயரால் நடக்கும் மூட நம்பிக்கைகளையும் விளக்கினார். மேலும் பெண்கள் சமூக சிந்தனை இல்லாமல் சின்னத் திரையில் அடிமைப்பட்டு கிடப்பதையும், அய்யப்ப பக்தர்களின் முட்டாள்தனத்தையும் விளக்கினார். இறுதியில் இராமமூர்த்தி நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஒன்றிய கழகத் தோழர்கள் மற்றும் ஈரோடு ஒன்றிய கழகத் தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். கூட்டத்தினை அப்பகுதி பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு கடைசி வரை கேட்டனர். கழக வெளியீடு புத்தகங்கள் ரூ.2500-க்கு விற்பனை ஆனது.

# பன்னாட்டு நிறுவனங்களை கொழுக்க வைக்க தமிழக மக்கள் மீது மின் கட்டணச் சுமையா? (2)

மத்திய அரசின் தனியார் மயக் கொள்கையை 1990 ஆம் ஆண்டுகளில் கொண்டு வந்த காங்கிரஸ் - மன்மோகன் கூட்டணியும், மத்திய அரசால் உருவாக்கப்பட்ட மின்சார ஒழுங்குமுறை வாரியத்தின் (மின்சார வாரியத்திற்கான நீதிமன்றம்) நடவடிக்கையே இதற்குக் காரணமாகும். தனியார் மின் உற்பத்தி நிறுவனங்கள் தமக்கு மின் உற்பத்தியில் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று கேட்கும் போதெல்லாம் அந்தத் தொகையையும், சில சமயங்களில் அதற்குக் கூடுதலான தொகையையும் மின்சார ஒழுங்குமுறை வாரியம் நம் மினசாரத் துறையிடமிருந்து வாங்கிக் கொடுக்கும் செயலில் ஈடுபட்டு வருகிறது. இந்த நடவடிக்கை பெரும்பாலான நமது நலனுக்குப் புறம்பாகவே அமைந்துள்ளது. நம்மைக் கடன் சுமையில் ஆழ்த்தும் செயலையே அது செய்திருக்கிறது. அதோடு நிற்காமல், பன்னாட்டு நிறுவனங்களுக்குப் போதுமான மின்சாரம் அளிப்பதாலும், மிகச் சலுகை விலையில் தடையில்லா மின்சாரம் வழங்குவதாலும் ஏற்படும் நட்டம் அனைத்தையும் நம்மிடமிருந்து வசூலிக்கும் செயலிலும் அது ஈடுபட்டு வருகிறது. வேறு எவருக்காகவோ சலுகை அளிக்க வேண்டி நம்மிடம் பணம் வசூலித்தது போதாதென்று, அவர்களுக்காகத் தங்குதடையின்றி மின்சாரம் வழங்குவதற்காக நம் உடைமையையும், உயிரையும், நிலத்தையும், சந்ததிகளையும் அழிக்கவல்ல கூடங்குளம் மற்றும் கல்பாக்கம் அணுமின் நிலையங்கள் போன்ற மின் நிலையங்களை அமைப்பதற்கும் இந்த வாரியமும், அதனை அமைத்த மத்திய அரசும் முழு முயற்சி செய்து வருகின்றன.

2010 ஆம் ஆண்டில் மென்பொருள் நிறுவனங்களுக்கு (சாஃப்டுவேர் நிறுவனங்கள்) யூனிட் ஒன்றுக்கு 2.50 ரூபாய் சலுகையை இந்த வாரியம் அளித்தது. இவ்வாறு குறிப்பிட்ட சில துறைகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சலுகைகளை வாரி வழங்கியே நம் மாநிலத்தின் மின்சாரத் துறையை அது மீளாக் கடனில் தள்ளியுள்ளது. உலகமயமாக்கல், தனியார் மயம், தொழில்துறையில் 10% வளர்ச்சி என்று பேசி பேசியே இன்று பிறரின் சுமையை இந்த வாரியம் நம் தலையில் ஏற்றி வைத்துள்ளது.

இந்த வாரியத்தை அமைத்த மத்திய அரசோ, கூடங்குளம், கல்பாக்கம் அணு மின் நிலையங்களை நம் தலைமுறையை அவை அழிக்கும் என்று தெரிந்தே தனியாருக்கு மின்சாரம் வழங்க வேண்டுமென்பதற்காக நம் மீது திணிக்கின்றது. அணு மின்சார உற்பத்தி விலை அதிகமானது. அதனை சரி செய்ய வேண்டுமென்றால் இந்தக் கட்டண உயர்வு செய்யப்பட்டேயாக வேண்டும். இது கற்றறிந்தோரின் அறிவுரை. அவர்களின் அறிவுரை நியாயமானது, உண்மையானது.

இதையெல்லாம் எதிர்த்து நாம் விளக்கங்களையும், கேள்விகளையும கேட்க வேண்டாமா?

அடுத்த சில மாதங்களிலேயே வீடுகள், சிறு கடைகள், சிறு வணிகங்கள், தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணம் இரண்டு மடங்கிற்கும் அதிகமாக உயரவிருக்கிறது. இதன் மூலம் நமது வருமானம் சுரண்டப்படுவதும் நமது தொழில் முடங்குவதும், விலைவாசி ஏறுவதும் நடக்கும். மேலும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு மின்சாரம் சலுகை விலையில் அளித்து அவர்களின் உற்பத்தியை அதிகரித்து நமது தொழிலை முடக்கப் போகிறார்கள். மின்சார கட்டணத்தைக் கட்ட இயலாமல் ஏழைகள் மின் தொடர்பை துண்டிக்கும் நிலை வெகு விரைவில் வர உள்ளது. இதன் காரணமாக அவர்கள் குழந்தைகளின் கல்வியும் பாழ்படப் போகும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

தற்போது ஹூண்டாய் மோட்டர், போர்டு, நோக்கியா போன்ற வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்காக நம்மிடம் மின்சாரத் தடையை அமல்படுத்தி வருகிறார்கள். இனிவரும் காலங்களில், மின்சாரக் கட்டணம் பயங்கரமாக ஏறப் போகிறது. அப்போது மின்சாரக் கட்டணத்தைக் கட்ட முடியாமல் நமது மின் இணைப்புகள் துண்டிக்கப்படும் நிலை உருவாகும். துண்டிக்கப்பட்ட நம் இணைப்புகளில் இருந்து கிடைக்கும் உபரி மின்சாரத்தை சேமித்து, அதனைப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு சலுகை விலையில் மகிழ்ச்சியாக வழங்கப் போகிறார்கள். இப்படியாக நம் எதிர்காலம் விடிய இருக்கிறது. ஆகவே, விழிப்புடன் இருப்பதற்கான தருணம் இது!

**'கீற்று' இணையதளத்திலிருந்து**

# அணுஉலை எதிர்ப்பு இயக்க மாநாட்டுத் தீர்மானங்கள்

# தனியார் மின் உற்பத்தியை அரசுடைமையாக்குக!

அணுஉலை எதிர்ப்பு இயக்க மாநாட்டில் மக்கள் பேராதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

- மனித குலத்திற்கு எதிரான அணுசக்தி எனும் பேராபத்திற்கு எதிராக கூடங்குளம் திட்டம் அறிவிக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து போராடும் கூடங்குளம் மக்களின் போராட்டத்தை இம்மாநாடு உயர்த்திப் பிடிக்கிறது. கூடங்குளம் அணுஉலையைத் திறக்க விடாமல் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ள அனைத்து இயக்கங்களும் உறுதியாகத் துணை நிற்கும். இப்போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து, பொய்ப் பிரச்சாரத்திற்கு பலியாகாமல் அணுஉலைக்கு எதிரான போராட்டத்தை ஆதரித்து அணி திரள வேண்டும் என தமிழக மக்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.
- நிலவி வரும் கடும் மின்தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு பொது மக்களின் அளவற்ற சுமையைக் குறைக்கத்தக்க வகையில் மத்திய தொகுப்பில் இருந்து கூடுதல் மின்சாரத்தை தமிழக அரசு கோரிப் பெற வேண்டும் எனவும், நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் தமிழகத்திற்கு முன்னுரிமை வழங்கி கூடுதல் மின்சாரத்தைப் பெறவும் தமிழக அரசை இம்மாநாடு வேண்டுகிறது.
- அதிகரித்து வரும் மின் தேவையை நீக்க சூரிய ஒளி, காற்றாலை, சிறிய மின்னுற்பத்தித் திட்டங்கள் மற்றும் இயற்கை வளம் சார்ந்து ஆபத்தில்லா மின்சாரம் தயாரிக்கும் வழிமுறைகள் இருந்தும் அணு வல்லரசுகளின் நிர்ப்பந்தத்திற்கு பணிந்து தமிழக மக்களை பலிகொடுக்க துணிந்த மத்திய காங்கிரஸ் அரசை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.
- சமரசமற்ற கூடங்குளம் மக்கள் போராட்டத்தை தொடர்ந்து தொய்வின்றி ஆதரித்துவரும் அரசியல் கட்சிகளுக்கும் பல்வேறு அமைப்பு களுக்கும் இம்மாநாடு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் பிற கட்சி களும் அணுஉலையை எதிர்த்து நிற்கும் கொள்கையைத் தங்களது செயல் திட்டத்தில் இணைத்து மக்களை ஒருங்கிணைக்குமாறு இம்மாநாடு கோருகிறது.
- தமிழகத்தில் மின்உற்பத்தி போதுமான அளவு இருந்தும், தமிழகத்தில் செயற்கையான மின் தட்டுப்பாட்டை உருவாக்கி கூடங்குளம் அணு உலைக்கு ஆதரவாக மக்களின் மனப்போக்கை தந்திரமாக திசை திருப்பும் காங்கிரசு மற்றும் இந்துத்துவ சக்திகளை வன்மையாகக் கண்டிப்ப தோடு உண்மைகளையும் ஆதாரங்களையும் மக்கள் மன்றத்தில் முன் வைத்து இச்சதியினை முறியடிக்கவும் இம்மாநாடு சபதமேற்கிறது.
- தற்பொழுது தனியாரிடம் விடப்பட்டுள்ள மின் உற்பத்தி, இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு இயங்கி வருவதால், மக்களின் அடிப்படை சேவை எனும் கோட்பாட்டிற்கேற்ப மின் உற்பத்தியை முழுமையாக அரசுடைமை ஆக்க வேண்டும். அதன் மூலம் மக்களுக்கு மிகுந்த பலன் ஏற்படும். எடுத்துக்காட்டாக காற்றாலை மின் உற்பத்தியை தனியாரிடமிருந்து அரசுடைமை ஆக்கினால் கூடங்குளம் மூலம் கிடைக்கும் மின்சாரத்தைவிட பனிரெண்டு மடங்கிற்கும் அதிகமான மின்சாரத்தைப் பெற முடியும். எனவே மின் உற்பத்தியாளர் தனியார் ஆதிக்கத்தை முற்றாக ஒழிக்க வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.
- மாநில உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் தமிழக அரசு, தமிழக மக்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருக்கும் மின் உற்பத்தி மற்றும் வினியோக உரிமையை மாநில உரிமையாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம்மாநாடு தமிழக அரசை வேண்டுகிறது. மேலும் தமிழகத்திலிருந்து மத்திய மின் தொகுப்பிற்கு அளிக்கப்படும் மின்சாரத்தைக் காட்டிலும் குறைவான மின்சாரமே மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு வழங்கப்படு வதால் தமிழகத்திலுள்ள மத்திய மின்உற்பத்தி நிலையங்கள் தமிழகத்தின் உடைமை ஆக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.
- தனியார் பெரு நிறுவனங்களுக்கு அளித்துவரும் தடையற்ற மின்சாரத்தை தடுத்து, பொது மக்கள், சிறு/குறு தொழிற்கூடங்கள், விவசாயம், பள்ளி, மருத்துவமனை போன்ற மக்கள் தேவை களுக்காக மின்சாரத்தை அதிக அளவு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேலும் சிறு, குறு உற்பத்தி யாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஜெனரேட் டருக்கான டீசலையும், சூரிய ஒளி மின் உற்பத்தி சாதனங்களையும் குறைவான மானிய விலையில் தமிழக அரசு வழங்க வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.
- 1994 திருத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், கூடங்குளத்தின் முதல் மற்றும் இரண்டாம் அணுஉலை அமைப்பது குறித்து அப்பகுதி மக்களிடம் கருத்துக் கேட்பு கூட்டாயம் நடத்தப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது. மத்திய, மாநில அரசுகளின் குழுக்கள், கூடங்குளம் மக்களையும் போராட்ட குழுவினரின வல்லுநர் குழுவையும் சந்தித்து அவர்களின் கருத்தைக் கேட்காமல், தன்னிச்சை யாக அறிக்கை சமர்ப்பிப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.
- கூடங்குளம் அணுஉலை குறித்து தற்பொழுது ஏற்படுத்தப்பட்ட ஆய்வுக் குழு, மக்கள் விரோதப் போக்கோடு செயல்படுவதோடு, மக்களின் கேள் விகளை எதிர்கொண்டு அவர்களது அச்சத்தைப் போக்காமல், அரசுக்குத் தவறான வழிகாட்டுதல் கொடுப்பதால் இக்குழுவை உடனடியாக கலைத்திட ஜனநாயக சக்திகள் குரல் கொடுக்க வேண்டும் என இம்மாநாடு வேண்டு கிறது.
- கூடங்குளம் அணுஉலை குறித்த 3, 4, 5, 6 ஆகிய ஆலோசனைக் கூட்டத்தில் அப்பகுதி மக்கள் அணுஉலை கூடவே கூடாது என வலியுறுத்திய பிறகும், அங்குள்ள கிராம சபைகள் அணு உலைக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றிய பிறகும், மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு சிறிதளவும் மதிப்பளிக்காமல் தன்னிச்சையாக கூடங்குளத்தை இயக்க மத்திய அரசு தீர்மானித் திருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.
- போராட்டக் குழுக்களின் மீது உண்மைக்குப் புறம்பாக போடப்பட்டுள்ள வழக்குகளை தமிழக அரசு உடனடியாக திரும்ப பெற வேண்டும். மேலும் போராடும் மக்களுக்கு எதிரான அவதூறுப் பிரச்சாரம், ஆதாரமற்ற குற்றச்சாட்டு மற்றும் உண்மைக்குப் புறம்பான அரசு விளம் பரங்கள் ஆகியவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.
- மத்திய அரசின் பாதுகாப்புப் படைகள் மற்றும் மத்திய நிறுவனங்களுக்கான பாதுகாப்புப் படை ஆகியவற்றைப் பயன்படுத்தி போராடும் மக்கள் மீது வன்முறைத் தாக்குதல் நடத்தக் கூடாது என இம்மாநாடு வற்புறுத்துகிறது.
- கல்பாக்கம் அணுஉலைப் பகுதியில் அம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து நேர்மையான, வெளிப்படையான மருத்துவ ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வெள்ளை அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

# களப்பணிகளில் கழகத் தோழர்கள்

### திருச்சியில் கழகக் கூட்டம்

கழக சார்பில் திருச்சியில் 21.01.2012 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பார்ப்பன இந்தியாவின் துரோகம், தமிழீழத்தில், முல்லைப் பெரியாறில், கூடங்குளம் அணு உலையில் - என்ற தலைப்பில் பொதுக் கூட்டம், சத்திரம் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். முன்னதாக புதியவன் (மாவட்ட இணைச் செய லாளர்) வரவேற்புரை ஆற்றினார். துரை தாமோதரன் ‘மந்திரமல்ல தந்திரமே’ என்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சியும் நடத்தினார். பால் பிரபாகரன் உரை யாற்றினார். மாவட்ட பொருளாளர் மனோகரன் நன்றி கூறினார். மாவட்ட அமைப்பாளர் மீ.இ. ஆரோக்கியசாமி தலைமையேற்று நடத்தி வைத்தார்.

கூட்டத்திற்கு முன்பு தமிழீழ இனப்படுகொலை, அணு உலையால் ஏற்படும் பாதிப்பு மற்றும் முல்லைப் பெரியாறு உரிமைகளை விளக்கும் புகைப்படங்கள் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. கொட்டும் பனியை பொருட் படுத்தாமல் பொது மக்கள், கழகத் தலைவரின் நீண்ட ஆழமான உரையை ஆர்வமாக கேட்டனர்.

மாவட்ட தலைவர் டாக்டர் எஸ்.எஸ். முத்து, முத்துச் செழியன், இளந்தாடி துரையரசன், மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார், அசோக் உள்ளிட்ட மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

### மாடு – மதம் – மனிதன் விளக்கக் கூட்டம்


11.02.2012 அன்று ஊரப்பாக்கம் இரயில் நிலையம் அருகில் காஞ்சிபுரம் மாவட்டம் சார்பில் ‘மாடு-மதம்-மனிதன்’ என்ற தலைப்பில் விளக்கக் கூட்டம் நடைபெற்றது. பொன். விசயகுமார் தலைமையில் ஆ. முருகன், விபாபு முன்னிலையில் சிற்பி இராசனின் ‘மந்திரமா தந்திரமா’ அறிவியல் விளக்க பகுத்தறிவு நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ரவி பாரதி, டேவிட் பெரியார், மகேசு (காஞ்சி மக்கள் மன்றம்), கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், வழக்கறிஞர் குமாரதேவன் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். மரே. ராசகுமார் நன்றியுரை கூறினார். நிகழ்ச்சி முடிவில் அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது.

### சென்னையில் கழகம் நடத்திய காதலர் நாள் கூட்டம்

16.2.2012 அன்று சென்னை தேனாம்பேட்டை திரு வள்ளுவர் சாலையில் காதலர் தினம் கூட்டம் நடைபெற்றது. இரா. பரணிகுமார் தலைமை தாங் கினார். சிற்பி இராசனின் ‘மந்திரமா தந்திரமா’ அறி வியல் விளக்க பகுத்தறிவு நிகழ்ச்சியைத் தொடர்ந்து மருத்துவர் எழிலன், சைதை அன்பரசு சிறப்புரை யாற்றினர். மு.மணிகண்டன் நன்றி கூறினார்.

### பெரியார் பொன்மொழிப் பதாகை திறப்பு

மொழிப்போர் ஈகியர் தினத்தை முன்னிட்டு கழகத்தின் சார்பில் குமார பாளையம் நகராட்சி எதிரில் பெரியாரின் பொன்மொழிப் பதாகை திறந்து வைக்கப்பட்டது. தண்டபாணி வரவேற்புரையாற்றினார். காசிநாதன் தலைமையேற்க, கேப்டன் அண்ணா துரை பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.



PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பிரதமரே! கேரளாவில் அணுமின் நிலையத்தை நிறுவ முடியுமா?

முதல் பக்கத் தொடர்ச்சி

நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவரையே களத்தில் இறக்கிவிடலாமா? இது குடியரசுத் தலைவர் பதவிக்குக் காட்டும் மரியாதையா? என்ற கேள்விகளை எழுப்பினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், "இது மின்சாரத்துக்கு எதிரான போராட்டமல்ல; இந்திய அரசின் அணுசக்திக் கொள்கைக்கு எதிரான போராட்டம்; ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம்; கம்யூனிஸ்ட் கட்சிகள் நடத்த வேண்டிய போராட்டம்; ஆனால், அவர்கள் போராடாமல் ஒதுங்கி நிற்கிறார்கள்" என்றார். அணு உற்பத்தித் திட்டங்கள் வழியாகக் கிடைக்கும் புளூட்டோனியம் தான் அணுகுண்டு தயாரிப்புக்கு தேவைப்படுகிறது. எனவே, இவர்கள் நோக்கம் அணுகுண்டு தயாரிப்புதான் என்று கூறிய திருமாவளவன், அணுமின் உற்பத்திக்குத் தேவையான யுரேனியத்தை அமெரிக்கா பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறதே தவிர, தனது நாட்டில் ஒரு அணுமின் நிலையத்தைக்கூட அங்கே நடந்த 'மூன்று மைல் தீவு' விபத்துக்குப் பிறகுத் தொடங்கவில்லை என்பதை சுட்டிக்காட்டினார்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகன் பேசுகையில், "தானே புயலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 3 மாதங்களுக்குப் பிறகும் வாழ்வுரிமையை மீட்டுத் தராத 'பேரிடர் மேலாண்மை' மய்யம் – கூடங்குளத்தால் பாதிப்பு ஏற்படும்போது, உடனே மக்களைக் காப்பாற்றி விடுமா என்ற கேள்வியை எழுப்பினார். நெய்வேலி மின் திட்டத்துக்காக தங்கள் வாழ்விடங்களை விட்டுத் தந்த ஏழை எளிய மக்களுக்கு உரிய நிவாரணம் இன்னும் வழங்கப்படவில்லை. தமிழக மக்களின் உழைப்பில் உருவாகும் மின்சாரம் தமிழர்களுக்கும் கிடைப்பதில்லை. ஏனைய மாநிலங்களுக்கு டெல்லிக்காரன் பங்கு வைக்கிறான். தமிழர்களின் தேசிய உரிமைகளை எவன் எவனிடமோ பறிகொடுதது விட்டு நிற்கிறோம். தமிழர்கள் உரிமைகளைப் பேசினாலே, கொளத்தூர் மணி, பழ. நெடுமாறன், சீமான்களை எல்லாம் தேச விரோதிகள் என்று கூறி, தேசியப் பாதுகாப்பு சட்டத்தைப் போடுகிறார்கள். எங்கள் இனத்தின் உரிமைகளைப் பேசினால் இந்த நாட்டில் தேச விரோதி என்றால், இந்த இந்திய தேசத்தை நாங்கள் எப்படி ஏற்க முடியும்?" என்று கேள்வி எழுப்பினார்.

"இந்தியாவின் வளங்களான கனிமப் பொருள்களை வெளிநாட்டு நிறுவனங்கள் சுரண்டு வதற்கு ஒப்பந்தம் போடுகிறார்கள். அலைக்கற்றை ஊழலில் கோடி கோடியாக கொள்ளை அடிப்பவர்கள் தேசபக்தர்களாம்! மக்களை அழிக்கும் கூடங்குளம் வேண்டாம் என்று கூறுகிற நாங்கள் தேச விரோதிகள் என்றால், நாங்கள் தேச விரோதிகளாகவே இருக்க விரும்புகிறோம்" என்றார், மக்கள் சிவில் உரிமைக் கழகத் தலைவர் வழக்கறிஞர் சுரேஷ். இந்தியாவில் சுரண்டிய பணம் ரூ.25 லட்சம் கோடியை வெளிநாட்டு வங்கிகளில் முடக்கி வைத்திருப்பவன் "தேச பக்தன்", நாங்கள் தேச விரோதியா? அந்த 'தேச பக்தர்' களின் பட்டியலை, பிரதமர் மன்மோகன் சிங் ஏன் வெளியிடத் தயங்குகிறார்? இந்தப் போராட்டத்துக்கு தலைமை ஏற்றுவரும் உதயகுமார் மீதும் புஷ்பராயன் மீதும் தேச விரோத குற்றச் சாட்டின் கீழ் பல வழக்குகளைப் பதிவு செய்துள்ளது காவல்துறை. இன்னும் கைது செய்யாமல் இருக்கிறார்கள். எந்த நேரத்திலும் கைது செய்வார்கள். கல்பாக்கத்தில் அணுஉலைக் கதிர் வீச்சால் ஏற்படும் ஆபத்துகளை மக்களிடம் விளக்கி வரும் மருத்துவர் புகழேந்தியை 'என் கவுண்டர்' செய்து சுட்டுத் தள்ளுவோம் என்று போலீசார் நேரில் மிரட்டியுள்ளார்கள் என்பதையும், இந்த கூட்டத்தில் நான் அறிவிக்க வேண்டும்.

கூடங்குளம் மக்களுக்குச் சொல்கிறோம், உங்களுடன் நாங்கள் நிற்கிறோம். நீங்கள் மட்டும் தனித்துப் போராடவில்லை; நாங்களும் உங்களுக்காகப் போராடுகிறோம். அறிவியல் சார்ந்த விழிப்புணர்வை மக்களிடையே உருவாக்குவது ஒவ்வொரு குடிமகனின் கடமை என்று இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது. அந்தக் கடமையைத் தான் நாங்கள் செய்து வருகிறோம். அணுமின் திட்டங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை அறிவியல் அடிப்படையில் மக்களிடம் பரப்பி வருகிறோம். "இது அரசியலமைப்பு வழங்கியுள்ள அனுமதி. இதைத் தடுக்க நினைப்பவர்களே தேசத்தின் விரோதிகள்" என்றார், வழக்கறிஞர் சுரேஷ்.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசுகையில், "மின்சாரம் கண்டுபிடித்தது அணுஉலை தயாரிப்புக்கு மட்டுமல்ல; அது மனித குலத்தின் வளர்ச்சிக்காக; அழிவுக்கு அல்ல. அணுஉலையை எதிர்ப்பதே தேச விரோதமா? தேசப் பற்றை அணுஉலைக்குள் கொண்டு போய் வைத்து விட்டார்கள். அப்படியானால், தேசப் பற்றை வளர்க்கக்கூடிய அணுஉலைகளை நாடாளு மன்றத்தைச் சுற்றிலும் கேரளாவிலும் அமைத்து தேசபக்தியை வளர்க்கலாமே– தமிழர்களாகிய நாங்கள் தமிழனாகப் பிறந்து விட்டதால், அடிமை தேசிய இனங்களாகிக் கிடக்கிறோம். ஈழத்திலே எனது சொந்தங்கள் கொன்று குவிக்கப்பட்டபோது நாம் வேடிக்கைப் பார்க்கத்தான் முடிந்தது, தடுக்க முடியவில்லை. இன்று நமது தலையிலே அணுஉலையைத் திணிக்கிறான். காங்கிரஸ் ஆட்சி நடக்கும் கேரளத்திலே ஒரு அணுஉலையைக்கூட அனுமதிக்க மாட்டோம் என்று மலையாளிகள் மறுக்கிறார்கள். அங்கே அணுஉலையைக் கொண்டு போகும் தெம்பு, திராணி, மன்மோகன் சிங்குக்கு உண்டா? மேற்கு வங்கத்தில் மம்தா எதிர்க்கிறார். எனவே அங்கு அணு உலை இல்லை. என்னடா, தமிழன் மட்டும் இளிச்சவாயனா? வெளி நாட்டுப் பயணம் வருகிறது என்கிறான். உதயகுமார் அவர்களே, அப்படி வெளிநாட்டுப் பணம் வந்தால், வாங்கிக் கொள்ளுங்கள். போராட்டத்தை தீவிரப் படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவை வெளிநாட்டு கம்பெனிகளிடம் விலை பேசிக் கொண்டு அதில் பங்கு வாங்கிக் கொண்டிருப்பவர்கள், இப்படி எங்கள் மீது குற்றம்சாட்ட எந்த உரிமையும் கிடையாது. இந்த அணுஉலைகளை இழுத்து மூடும் வரை போராட்டம் ஓயாது" என்று எச்சரித்தார்.

கருத்தரங்கிற்கு தலைமையேற்ற மனோ. தங்கராஜ் பேசுகையில், "இது ஒரு வெற்றி மாநாடு. தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே மக்களே ஒன்று திரண்டு, மக்களே அழைப்பு விடுத்து நடத்தும் மாநாடு. இந்த மாநாடு, அணுமின் சக்திக்கு எதிர்ப்பான அனைத்து இயக்கங்களையும் ஒன்றிணைத்துள்ளது. அதன் வலிமையை ஆட்சியாளர்களுக்கு உணர்த்தியிருக்கிறது. இந்த ஒருங்கிணைந்த மக்கள் சக்தி வெற்றி வெற்றிப் பெறும். மக்களுக்கு எதிரான அணுமின் உலைகளை இழுத்து மூடும்வரை போராடுவோம்" என்றார்.

2.30 மணியளவில் கருத்தரங்கு முடிவுற்றது. பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் கருத்தரங்கில் உரையாற்றினர். தொடக்கத்தில் சமர்பா குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

## பேரணி

மாலை 4.30 மணியளவில் எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கிலிருந்து தோழர் சுந்தரி தலைமையில் பேரணி தொடங்கியது. காஞ்சி மக்கள் மன்றம், நாகர்கோயில் முரசு கலைக் குழுவினர் பறை முழக்கத்தோடு அணுசக்தி எதிர்ப்பு இயக்கக் கொடிகள் மற்றும் கருத்துகளை விளக்கும் பதாகைகளுடன் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களும் ஆண்களும் ஒலி முழக்கங்களுடன் பேரணியில் பங்கேற்றனர். சிறு குழந்தைகளும் பெண்களும் பேரணியில் பங்கேற்று முழக்கமிட்டு வந்த காட்சி அனைவரையும் கவர்ந்தது. பேரணியை கோ. திருநாவுக்கரசு (தாளாண்மை உழவர் இயக்கம்) தொடங்கி வைத்தார்.

பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் பேரணியை வாழ்த்தி உரையாற்ற, பேரணி தொடங்கியது. மாநாட்டை ஒழுங்குபடுத்தும் தொண்டர்படையினர், எதிர்ப்பு முழக்கங்கள் அச்சிடப்பட்ட 'டி' சட்டைகளை அணிந்து, பேரணியை ஒழுங்குபடுத்தி வந்தனர். மிக நீண்ட பேரணி 6 மணியளவில் எழும்பூர் பாந்தியன் சாலையில் நிறைவடைந்தது.

## திறந்தவெளி மாநாடு

மாலை 7 மணியளவில் தியாகராயர் நகர் முத்துரங்கன் சாலையில் முரசு கலைக் குழுவினரின் பறை இசையைத் தொடர்ந்து, 'அணுசக்திக்கெதிரான மக்கள் இயக்கத்தின்' திறந்தவெளி மாநாடு தொடங்கியது. மாநாட்டின் முதன்மை ஒருங்கிணைப்பாளரும், பெரியார் திராவிடர் கழகத் தலைவருமான கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். மாநாட்டில் செல்வி (மக்கள் ஜனநாயகக் குடியரசு கட்சி), பூ. சந்திரபோசு (தியாகி இம்மானுவேல் பேரவை), அரங்க. குணசேகரன் (தமிழக மக்கள் புரட்சிக் கழகம்), நிலவன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), தெகலான் பாகவி (எஸ்.டி.பி.அய்.), வடிவேல் இராவணன் (பா.ம.க.), இரஜினி காந்த் (சாதி ஒழிப்பு முன்னணி), மீ.த. பாண்டியன் (இ.ச.க.(மா.லெ) மக்கள் விடுதலை), சி. வெங்கட் ராமன் (தமிழ்த் தேசப் பொதுவுடைமை கட்சி), ஆண்டன்கோமங் (அணுஉலை எதிர்ப்புக் கூட்டமைப்பு), தியாகு (தமிழ்த்தேச விடுதலை இயக்கம்), ஜவாஹிருல்லா (மனிதநேய மக்கள் கட்சி), பழ. நெடுமாறன் (உலகத் தமிழர் பேரமைப்பு), நாஞ்சில் சம்பத் (ம.தி.மு.க.), சீமான் (நாம் தமிழர் கட்சி) ஆகியோர் உரையாற்றினர்.

## 'நாங்கள் தமிழ்ப் புலிகள்'

சுப. உதயகுமார், எழுச்சியான தொடக்க உரை நிகழ்த்தினார். தமிழ்நாட்டில் அணுமின் உலைகள் இழுத்து மூடப்படும் வரை போராட்டம் ஓயாது என்று உறுதியுடன் அறிவித்தார். வெளிநாட்டுப் பணம் வருவதாக தம்மீது குற்றம்சாட்டிய பிரதமர் மன்மோகன்சிங் மீதும் மத்திய அமைச்சர் நாராயணசாமி மீதும் அவதூறு பேசிய காங்கிரஸ் பிரமுகர் ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் மீதும் வழக்கு தொடரப்படும். 'நாங்கள் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை. எங்கள் மடியில் சுமையில்லை; எனவே வழியில் பயமில்லை' என்று பலத்த கரவொலிக்கிடையே தெரிவித்தார். 'கூடங்குளம், இடிந்தகரை பகுதி மக்கள் போராட்டமல்ல; ஒட்டுமொத்த தமிழர்களின் போராட்டம் என்று இந்த மாநாடு காட்டியுள்ளது. இது ஏதோ அணுஉலைக்கு எதிராக மட்டுமல்ல, தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டம். நாங்கள் தமிழ்ப் புலிகள்; எந்த மிரட்டலுக்கும் அஞ்ச மாட்டோம்' என்று அறிவித்தார். 'சேவ்ஸ்' தமிழ் அமைப்பைச் சார்ந்த செந்தில் நன்றி கூற, இரவு 11.30 மணியளவில் மாநாடு நிறைவடைந்தது. முத்துரங்கம் சாலை முழுதும் மக்கள் கடலாகவே காட்சியளித்தது. மாநாடு நிறைவடையும் வரை அனைத்து இருக்கைகளும் நிரம்பி வழிந்தன. கடந்த சில ஆண்டுகளில் தலைநகரில் நடந்த மாநாடுகளில் இவ்வளவு பெரிய கூட்டம் திரண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**– நமது செய்தியாளர்**

**(மாநாட்டுத் தீர்மானங்கள் தனியே)**


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 1st March 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மார்ச் 08, 2012 | புரட்சி 11 | முழக்கம் 08 | விலை: ரூ.2.50



## ராஜபக்சேவுக்கு எதிராக சர்வதேசப் பிடி இறுகுகிறது

# போர்க்குற்றங்கள்: அய்.நா. விவாதிக்குமா?

சுவிட்சர்லாந்து நாட்டில் ஜெனிவாவிலுள்ள அய்.நா. அவையில் (அமெரிக்காவின் நியுயார்க்கிலும் அய்.நா. மன்றம் உள்ளது) தற்போது நடைபெற்று வரும் மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தில் இலங்கையில் தமிழர்கள் மீதான போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலிமை பெற்று வருகிறது. மனித உரிமைக் குழுவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வரலாம் என்று தெரிகிறது. அய்.நா.வில் எந்த நேரத்திலும் எந்த மாற்றமும் நிகழலாம் என்பதால் அந்தத் தீர்மானம் கொண்டு வரப்படும்போதுதான் அது உறுதியாகும். ஆனாலும், அமெரிக்கா கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தின் நகல், மனித உரிமைக் குழுவில் இடம் பெற்றுள்ள 47 உறுப்பு நாடுகளுக்கும் சுற்றுக்கு விடப்பட்டுள்ளது. இந்த தீர்மானம் கூட இலங்கை மீது சர்வதேச போர்க் குற்ற விசாரணையை கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் நகல் தீர்மானம் கூறுவது என்ன? இலங்கை அரசு, தனக்குத் தானே நியமித்துக் கொண்ட ‘கற்ற படிப்பினை மற்றும் பாதிப்பிலிருந்து மீட்டல்’ என்ற (எல்.எல்.ஆர்.சி.) விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு செயல்படுத்த வேண்டும் என்பது ஒன்று. மற்றொன்று, இலங்கை அரசு நியமித்த ஆணையத்தின் அறிக்கையில் சர்வதேச மனித உரிமை சட்டங்கள், மீறப்பட்டது குறித்து போதுமான கவனம் செலுத்தப்படாததால் அது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். இரண்டு கோரிக்கையுமே இலங்கை அரசிடம் முன் வைக்கப்பட்டதுதான். குற்றவாளிகளிடமே விசாரணை நடத்தும் வாய்ப்புகளை வழங்கும்போது நீதி கிடைக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? இதைக்கூட இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. போர் முடிந்து 3 ஆண்டுகளாகியும் தமிழர்களின் மறு வாழ்வுக்கு சிங்கள ஆட்சி தமிழர்களின் அரசியல் உரிமைக்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காதது தான். இப்போது, உலகநாடுகளின் கவனத்தை, இலங்கைக்கு எதிராகத் திருப்பியுள்ளது.

இந்த நிலையில் இந்தியா, மீண்டும் இனப் படுகொலைக்குத் துணை போகும் துரோகத்தையே செய்கிறது. மனித உரிமைக் குழு கூட்டத்தில் இந்தியாவின் சார்பில் மார்ச் 1 ஆம் தேதி ஒரு அறிக்கை வாசிக்கப்பட்டது. அதில், “குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கு எதிரான தீர்மானங்கள், மனித உரிமைக் குழுவின் ஆக்கபூர்வமான பேச்சுகளையும் அனைத்துத் தரப்புகளில் ஒத்துழைப்புடனான அணுகுமுறையையும் வலுவிழக்கச் செய்துவிடும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த ஒரு நாடு போர்க் குற்றங்களைச் செய்தாலும் இனப் படுகொலை செய்தாலும் அந்த நாட்டை எதிர்க்கக் கூடாது என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மீண்டும் ஈழத் தமிழர்களுக்கு துரோகம் இழைத்தால் தமிழ் நாட்டில் காங்கிரஸ் அடியோடு துடைத்தெறியப்பட்டுவிடும் என்ற அச்சத்தினாலும் கூடங்குளத்துக்கு ஆதரவாக காங்கிரசார் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாதிக்கப்பட்டு விடலாம் என்பதாலும் மத்திய அமைச்சர்கள் நாராயணசாமியும், ஜி.கே. வாசனும், அமெரிக்காவின் தீர்மானத்தை, இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளதாகவும், பிரதமரும் பரிசீலிப்பதாகக் கூறியுள்ளதாகவும், தமிழ்நாட்டில் பேட்டி அளித்துள்ளனர். இது உண்மையாக நடக்குமா என்பது விரைவில் தெரிந்துவிடும். அமெரிக்காவின் தீர்மானமே அய்.நா.வில் வராமல் போகும் வாய்ப்புகள் இருப்பதும் இவர்கள் இப்படிப் பேட்டி அளிப்பதற்கான காரணமாக இருக்கலாம். காரணம், அய்.நா.வில் இப்போது நடக்கும், மனித உரிமைக் கவுன்சில் செயல் திட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலில் இலங்கை மீதான தீர்மானங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவது பற்றி குறிப்பிடப்படவில்லை.

இந்த நிலையில் அய்ரோப்பா முழுதுமிருந்தும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தனிப் பேருந்துகளிலும் சிறப்பு இரயில்களிலும் அய்.நா. அவை முன் குவிந்து வருகிறார்கள். இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை கோரி, ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். சர்வதேசப் பிரச்சினையாக விவாத அரங்கிற்கு இலங்கையின் போர்க் குற்றங்கள் நகர்த்தப்பட்டிருப்பதே தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். நாடு கடந்த தமிழீழ அரசு, உலகத் தமிழர் மய்யம் என்ற சர்வதேச தமிழர் அமைப்புகள் - தங்கள் கருத்து மாறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, ஜெனிவாவில் ஒன்றாக திரண்டு நிற்பது வரவேற்கத்தக்க மகிழ்ச்சியான செய்தியாகும்.

சென்னையில் கடந்த 28.2.2012 அன்று ‘நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மய்யம் ‘போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை’ தொடர்பான ஆவண நூலை வெளியிட்டது. இலங்கை மீதான சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதற்கான குறிப்புகள் பல்வேறு ஆணையங்களின் பரிந்துரைகளிலிருந்து தொகுக்கப்பட்டு, நூலாக வெளியிடப்பட்டுள்ளது. நாடு கடந்த தமிழீழ அரசின் வல்லுனர் குழு உலகம் முழுதும் இந்த நூலை வெளியிட்டுள்ளது. மய்யத்தின் அமைப்பாளர் பேராசிரியர் சரசுவதி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தியாகு, மனித நேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, பேராசிரியர் தீரன், வழக்கறிஞர் பாண்டிமாதேவி, பேராசிரியர் இராணி செந்தாமரை, இயக்குநர் சாத்தப்பன், ஊடகவியலாளர் டி.எஸ்.எஸ். மணி ஆகியோர் உரையாற்றினர். வெளியிடப்பட்ட ஆவணத்தில் இடம் பெற்றுள்ள சில குறிப்புகள்:

### எல்.எல்.ஆர்.சி.

இலங்கை அரசு தனக்குத் தானே நியமித்துக் கொண்ட ஆணையத்தின் (எல்.எல்.ஆர்.சி.) முக்கிய பரிந்துரைகள்:

1. 2002 ஆம் ஆண்டு நார்வே முயற்சியால் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே உருவான போர் நிறுத்த உடன்பாடு தோல்வி அடைந்தமைக்கு நார்வேயும் இலங்கை அரசும் காரணமாக இருந்துள்ளது.
2. இறுதிக் கட்டப் போரில் சிறிலங்கா ராணுவத்தின் நடவடிக்கைகள் மக்களைக் காப்பாற்றுவதாகவே இருந்தது மிகவும் திருப்தி தருகிறது.
3. போரில்லாத பகுதியில் ராணுவம் மக்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்குமானால், அது திட்டமிட்டு நடத்தப்பட்டதல்ல; தவிர்க்க இயலாத சூழ்நிலையின் காரணமாகவே அப்பகுதியில் திரண்ட பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம். மருத்துவமனையில் ஷெல் வீசப்பட்டது உண்மைதான். அதனால் சிவிலியன்கள் உயிரிழந்ததும் உண்மைதான். ஆனால், இந்தத் தாக்குதலை நடத்தியது யார் என்பதற்கு திட்டவட்டமான ஆதாரம் இல்லை. எந்தத் தரப்பிலிருந்து ஷெல் வீசப்பட்டது என்பது தெரியவில்லை.
4. போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருந்து உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டன. ஆனாலும் மருந்துகளும், மருத்துவ உதவிகளும் தேவையான அளவு கிடைக்கவில்லை என்றே தெரிகிறது.
5. சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு எதிராக பொது மக்களை கேடயங்களாக விடுதலை புலிகளே பயன்படுத்தினர். போரில் இறந்தவர்கள் எண்ணிக்கையை சரியாக கணக்கிட முடியவில்லை. முறையான சரிபார்ப்பு ஏற்பாடுகள் இல்லாமையே காரணம்.
6. ‘சேனல் 4’ தொலைக்காட்சி ஒளிபரப்பிய ‘கொலைக்களம்’ (ராணுவம் நடத்திய பாலியல் வன்கொடுமை - படுகொலை காட்சிகள்) காட்சிகள் உண்மையானதா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.
7. ஆணையத்தின் முன், ஆள் கடத்தல், காணாமல் போனவர்கள் பற்றி ஏராளமான புகார்கள் கூறப்பட்டன. அது தொடர்பாக அரசு எந்த நடவடிக்கையும் அதிகாரபூர்வமாக எடுக்கப்படவில்லை.
8. இந்த இனமோதலுக்கு தமிழர்களின் தீர்க்கப்படாத பிரச்னைகள்தான் காரணம்.
9. சட்டம் ஒழுங்கை திறமையாக அமுல்படுத்த ஒரு சுதந்திரமான காவல் ஆணையம் தேவைப்படுகிறது.
10. தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியமாகிறது. அதற்கான கடமை இலங்கை அரசுக்கு இருக்கிறது.

### பரிந்துரை

ஆணையம் அரசுக்கு வழங்கியுள்ள முக்கிய பரிந்துரைகள்:

1. ராணுவம் நடத்திய கொலை தொடர்பாக நான்கு முக்கிய சம்பவங்களில் மேலும் அரசு விசாரணை நடத்த வேண்டும்.
2. சரணடைந்த பிறகோ அல்லது கைது செய்யப்பட்ட பிறகோ,’காணாமல் போய்விட்டதாக’க் கூறப்படும் குறிப்பிட்ட புகார்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும்.
3. சரணடைந்த விடுதலைப் புலிகள் மீது ஏதேனும் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இருக்கிறதா என்பதை விசாரிக்க வேண்டும்.
4. பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் நேரில் சென்று வீட்டில் கொல்லப்பட்டவர்கள்; காயமடைந்தவர்கள்; மற்றும் சொத்து இழப்பு பற்றி முறையான கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.
5. ‘சேனல்-4’ தொலைக்காட்சி காட்சிகள் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.
6. காணாமல் போய்விட்டதாகக் கூறப்படுவோர் குறித்து விசாரிக்க சிறப்பு ஆணையர் நியமிக்கப்பட வேண்டும். தேவைப்படும் கிரிமினல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவியாக அரசு வழக்கறிஞருக்கு தேவையான ஆவணங்களைத் தரவேண்டும்.
7. மரணமடைந்தோருக்கு முறையான இறப்புச் சான்றிதழ் மற்றும் இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும்.
8. தடுப்புக் காவல் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க சுதந்திரமான ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.
9. கட்டாய வன்முறைகள் - முறைகேடாக காணாமல் போகுதல் போன்றவற்றைத் தடுக்க சட்டம் ஒன்றைக் கொண்டு வரவேண்டும்.
10. கைது செய்து காவலில் வைக்கப்பட்டோர் குறித்த தகவல்களைத் திரட்டி, கணினியில் பதிவு செய்து, நெருங்கிய உறவினர்களுக்கு இத்தகவல்களை கிடைக்கச் செய்யவேண்டும்.

4 ஆம் பக்கம்

## மார்ச் 8 – மகளிர் நாள்

# பெண்ணுரிமையை மறுக்கும் தனியுடைமை

இப்போது இங்கு பெண்ணுக்குத் தாலி கட்டப்பட்டது. இதற்கு என்னதான் தத்துவார்த்தம் சொல்லப்பட்டாலும் இந்தத் தாலி கட்டுவதானது, "இந்தப் பெண் இந்த மாப்பிள்ளையினுடைய சொத்து" என்கின்ற அறிகுறிக்கு ஆகத்தான். இந்தத் தத்துவம் சுலபத்தில் மாறிவிடும் என்று நான் கருத முடியவில்லை. தாலி கட்டாத கல்யாணம் நடந்தபோதிலும் மணப்பெண் மணமகனுடைய சொத்து என்பது மாறிவிடும் என்று நான் நினைக்க முடியவில்லை.

ஏனெனில், இத் திருமணத்துக்குச் சம்மந்தப் படாத கற்பு என்பது ஒன்று பெண்கள் மீது மாத்திரம் சுமத்தப் பட்டிருக்கிறது. கற்பு என்பதைச் சுகாதாரத்தையும், சரீரத் தத்துவத்தையும், பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன் என்றாலும் இன்று அந்த முறையில் கற்பு கையாளப்படுவதில்லை. உதாரணம் என்னவென்றால் கற்பு ஆண்களுக்கு வலியுறுத்தப்படுவதில்லை என்பதிலிருந்தே உணர்ந்து கொள்ளலாம். அதற்கு உதாரணம் என்னவென்றால் இந்துக் கடவுள்கள் என்பவற்றிற்கும்கூட ஆண் கடவுள்களுக்குக் கற்பு வலியுறுத்தப்படுவதில்லை. ஆதலால், அந்த – அதாவது ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கின்ற கற்பு முறை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

இந்தத் தனி உடைமை தேசத்தில் இது ஒழிக்கப் படுவது என்பது சுலபத்தில் ஏற்படக்கூடிய காரியமா என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், பெண்களுக்குத்தான் கற்பு; ஆண்களுக்கு வலியுறுத்தக் கூடாது என்கின்ற தத்துவமே தனி உடைமைத் தத்துவத்தைப் பொறுத்தது.

ஏன் என்றால், பெண் ஆணுடைய சொத்து என்பதுதான் இன்றைய மனைவி என்பவர்களின் நிலைமை.

எப்படி எனில், "புருஷன் சம்பாதிக்கிறவன். சம்பாதித்த பொருளுக்கு அவனே சொந்தக்காரன்; மனைவிக்குச் சோறு போட்டுச் சேலை கொடுத்துக் காப்பாற்றுகிறவன்; மனைவி பெற்ற குழந்தைக்குத் தன் சொத்துக்களைக் கொடுக்கிறவன்; குடும்பப் பாரமும், குடும்பப் பொறுப்பும் ஏற்றுக் கொள்ளுகிறவன். ஆகவே, அவனுக்கு – அவனால் காப்பாற்றப்படுகிற – அவன் மீது பொறுப்பு விழுந்த மனைவியை அடக்கி ஆள உரிமை உண்டு" என்பது இன்றைய சமுதாய முறைச் சட்டமாய் இருக்கிறது. இதை எப்படி ஒருவன் மறுக்க முடியும்?

சம்பாதனை, குடும்பப் பொறுப்பு, குழந்தைகள் பெற்றால் அதைக் காப்பாற்றும் திறமை ஆகியவைகள் ஒரு பெண்ணுக்கு ஏற்பட்டு இத்திறமைகள் இல்லாத ஒரு புருஷனைக் கட்டிக் கொள்வதாய் இருந்தால் மாத்திரம் ஆண்களைப் பெண்கள் அடக்கியாள முடியும்; முடியாவிட்டாலும் சம சுதந்தரமாகவாவது இருக்க முடியும். இதில்லாமல் எவ்வளவு சுயமரியாதையும், சம சுதந்தரமும் போதித்தாலும் பெண்களுக்குச் சம சுதந்தரமும், சம கற்பு என்பதும் ஒரு நாளும் முடியக் கூடிய காரியமல்ல என்பதே எனது அபிப்பிராயம். அன்றியும் அப்படிப்பட்ட திறமை அற்றவர்களுக்குச் சமசுதந்தரம் அளிப்பதும் ஆபத்தான காரியம்தான்.

ஆதலால், பெண்கள் சுதந்தரம், இந்த மாதிரி கல்யாண காலங்களில் பேசி விடுவதாலோ, "சுத்த" சுயமரியாதை முறையில் திருமணம் செய்து விடுவதாலோ ஏற்பட்டு விடாது.

தனி உரிமை உலகில் பெண்கள் சுதந்தரம் வேண்டுமென்பவர்கள் பெண்களை நன்றாய்ப் படிக்க வைக்க வேண்டும். தங்கள் ஆண் பிள்ளைகளை இலட்சியம் செய்யாமல் பெண்களுக்கே செலவு செய்து படிக்க வைக்க வேண்டும். ஜீவனத்துக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்க வேண்டும்.

தாய் தகப்பன்மார் பார்த்து ஒருவனுக்குப் பிடித்துக் கொடுப்பது என்று இல்லாமல் – அதுவாக (பெண்ணாகவே பார்த்து) தகுந்த வயதும், தொழிலும் ஏற்பட்ட பிறகு ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படிச் செய்ய வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் கன்னிகாதானம், கல்யாணம், தாரா முகூர்த்தம் என்கின்ற வார்த்தைகளே மறைந்து – அகராதியில்கூட இல்லாமல் ஒழிய வேண்டும். அன்றுதான் பெண்கள் சுதந்தரம் அனுபவிக்க இலாயக்குள்ளவர்களாவார்கள்.

**பெரியார், 'குடிஅரசு' 1.3.1936**

# மதுரைப் பகுதியில் சட்டவிரோத 'பால்ய' திருமணங்கள்

மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறுமிகளுக்குத் திருமண வயது வரும் முன்பே 'பால்ய விவாகம்' நடத்தும் கொடுமை தொடர்ந்து கொண்டிருக்கிறது. சில குறிப்பிட்ட சாதிப் பிரிவைச் சார்ந்தவர்கள், பள்ளிப் படிப்பு படிக்கும் போதே, பெண்கள் 'காதலில்' சிக்கி விடுவார்கள் என்று அஞ்சியும் அதனால் தங்களின் குடும்ப கவுரவம் பாதிக்கப்படும் என்றும், அதைத் தவிர்க்கவே இளம் வயதில் திருமணம் செய்து வைத்து விடுவதாகவும் கூறுகிறார்கள்.

உசிலம்பட்டி அருகே வி.கல்லுப்பட்டியைச் சார்ந்த 8வது படிக்கும் 13 வயது சிறுமிக்கு அவரைவிட 17 வயது அதிகமுள்ள மணமகனுக்கு அடுத்த சில வாரங்களில் திருமணம் நடைபெற உள்ளது. இது தங்களின் சாதி வழக்கமாகத் தொடர்ந்து வருகிறது என்கிறார்கள். பெண்ணின் தாய்க்கு 11 வயதிலும், பெண்ணின் மூத்த சகோதரிக்கு 12 வயதிலும் திருமணம் நடந்ததாம். 'எங்களுக்கு குடும்ப கவுரவமும் உறவுகளுமே முக்கியம்' என்கிறார், 70 வயது மூதாட்டி கருப்பாயி. தாய்மாமனுக்கு பெண் கேட்க முழு உரிமை உண்டு. "எனக்கு பெண் குழந்தை பிறந்தவுடன், அவள்தான் என் மூத்த மருமகள் என்று என் அண்ணன் கூறிவிட்டார்" என்கிறார் பழனியம்மாள்.

"கடந்த வாரம் என் வீட்டுக்கு வந்த அண்ணன், என்னுடைய மகனுக்குத்தான் உன் மகள்" என்று மீண்டும் உறுதிப்படுத்தினார். "அப்படியே நான் மறுத்தால் வேறு எந்த உறவுக்காரரும் திருமணம் செய்து விடாமல், என் அண்ணன் தடுத்து விடுவார்" என்கிறார் பழனியம்மாள். கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் மதுரை புறநகர் காவல்துறை மூன்று சட்டவிரோத சிறுமிகள் திருமணங்களை தடுத்து நிறுத்தியுள்ளது. "எனது மகள் திருமணத்தை அப்படி போலீஸ் தடுத்தால், எனது மகளை காவல் நிலையத்திலேயே விட்டுவிடுவேன். சட்டபூர்வ வயது வந்த பிறகு, போலீசே மணமகன் பார்த்து திருமணம் செய்யட்டும் என்று கூறி விடுவேன்" என்கிறார் பழனியம்மாள்.

தமிழ்நாட்டில் சிறுமிகள் சட்டவிரோத திருமணங்கள் சாதிய வழக்கமாக மாறி நிற்கிறது. சாதியம் பெண்ணடிமையையும், மூடநம்பிக்கைகளையும், வலிமைப்படுத்தி வருகிறது என்பதற்கு இந்தச் செய்திகள் சாட்சியங்களாகும். 'மகளிர் நாள்' நிகழ்ச்சிகள் நடத்தும் இயக்கங்கள், தொண்டு அமைப்புகள், இந்த சமூகச் சீர்கேடுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு (மார்ச் 5) இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

# திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி

1912 பார்ப்பன ஆதிக்கம் கொடி கட்டிப் பறந்த காலம் இது! நூற்றுக்கு மூவராக மட்டுமேயிருந்த பார்ப்பனர்கள் அரசு உயர் பதவிகள் அனைத்திலும் மிகப் பெரிய அளவில் இடம் பெற்று ஆதிக்கம் செலுத்தினர். உதாரணமாக, ஒரு கணக்கெடுப்பின்படி டிப்டி கலெக்டர்களில் 55%, சப்ஜட் களில் 83%, மாவட்ட முன்சீப்களில் 72% பார்ப்பனர்களாகவே இருந்தனர். உயர் பதவியிலுள்ள பார்ப்பனர்கள் தமக்குக் கீழ் உள்ள பார்ப்பனரல்லாதாரைப் பாரபட்சமாக நடத்துதல், பதவி உயர்வு பெறவிடாமல் அமுத்தி வைத்தல், சுய ஜாதி அபிமானத்துடன் அவர்களை இழிவுபடுத்துதல் ஆகிய கொடுமைகளைப் புரிந்து வந்தனர். இக்கொடுமைகளையும், தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் வெளியில் எடுத்துச் சொல்லக்கூட திராணி அற்றவர்களாகப் பார்ப்பனரல்லாத அரசு அலுவலர்கள் இருந்தனர். இந்த நிலையில் சென்னை ரெவின்யூபோர்டு அலுவலகத்திலும், மற்றும் சில அரசு அலுவலகங்களிலும் பணி புரிந்த சில பார்ப்பனரல்லாத எழுத்தர்களும் அலுவலர்களும் தங்கள் குறைகளை வெளியிடவும் பார்ப்பன ஆதிக்கத்தால்தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிலிருந்து விடுபடவும், "சென்னை அய்க்கிய சங்கம்" என்ற பெயரில் ஒரு சங்கத்தைத் தொடங்கினர். இவர்களில், பின்னாளில் தஞ்சை டிப்டி கலெக்டராகப் பணி ஆற்றிய திரு.சரவணப் பிள்ளை, பொறியியல் துறையில் பணியாற்றிய திருவாளர்கள் ஜி.வீராசாமி நாயுடு, துரைசாமி முதலியார், ரெவின்யூ போர்டு அலுவலகத்தில் பணிபுரிந்த திரு.எஸ்.நாராயணசாமி நாயுடு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்கள் உள்ளிட்ட ஏனைய அரசு அலுவலர்கள் அந்நாளில் சென்னையில் சிறந்து விளங்கிய மருத்துவரும், பொதுநலப் பண்பும், தயாள சிந்தையும் உடையவருமான டாக்டர் சி.நடேச முதலியாரை அணுகி, தக்க உதவியும் ஆலோசனையும் வழங்கி ஆதரிக்குமாறு வேண்டியதற்கு இணங்க, அவரும் இம்முயற்சியைப் பாராட்டி, அனைத்து உதவிகளையும் அளித்ததோடு தாமே செயலாளராகவும் இருந்து அச்சங்கத்தை நடத்திச் சென்றார்.

சென்னை அய்க்கிய சங்கத்தின் கூட்டங்கள், சென்னை திருவல்லிக்கேணி பெரிய தெருவில் டாக்டர் சி.நடேசனாரின் மருத்துவமனை முன்பகுதியில் இருந்த தோட்டத்தில் நிகழ்ந்து வந்தன. இச்சங்கத்தின் முதல் சமூகப் பணி, முதியோர் கல்விக்கான வகுப்புகளை நடத்தியதே ஆகும். இரவு நேரங்களில்நடந்த இவ்வகுப்புகளில் அரசு அலுவலர்களே ஆசிரியர்களாக அமைந்து பாடம் நடத்தினர். நாளடைவில் இச்சங்கத்தில், அரசு அலுவலரோடுகூட, பொதுநல உளப்பாங்குடையோரும் உறுப்பினராகச் சேர்ந்து சமூகப் பணி ஆற்றினர். இச்சங்கம் தொடங்கி ஓராண்டுக்குள் 300 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்து பணி ஆற்றினர். நடேசனாரின் மருத்துவமனைக்கு அருகில் சில வீடுகள் தள்ளி, குடியிருந்தவரும் 'தி ஸ்டாண்டர்டு' என்ற ஆங்கில நாளிதழின் ஆசிரியருமான திவான் பகதூர் கருணாகர மேனன், இராமராய நிங்கர் என்னும் பெயரைஉடைய பனகல் அரசர் ஆகியோர் இச்சங்கக் கூட்டங்களில் அவ்வப்போது கலந்து கொண்டதோடு தக்க ஆலோசனைகளையும் வழங்கி வந்தனர்.

அரசுப் பொதுப்பணி குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ராயல் கமிஷன் முன் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சர்.பி.தியாகராயர் உட்பட பல்வேறு பிரமுகர்களும், மாநில அரசு நிர்வாகத்தில் பார்ப்பன ஆதிக்கம் நிலவுவதை விளக்கியும், எல்லா வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டியதின் தேவை குறித்தும் தெரிவித்தனர். சென்னை நகராட்சி மூலம் டி.மாதவன் (நாயர்) சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணி ஆற்றி வந்தார்.

(அடுத்த இதழில் - 1913)

**கழக வெளியீடான 'திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம்' நூலிலிருந்து**

# அணுஉலை ஆபத்து விளக்கக் கூட்டம்




வடசென்னை பெ.தி.க. சார்பில் கடந்த 22.2.12 அன்று புரசைவாக்கம் பகுதியில் அணுஉலை ஆபத்து என்ற தலைப்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கழக தலைவர் கொளத்தூர் மணி, துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சார்ந்த வழக்கறிஞர்கள், சுந்தரராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். வடசென்னை மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் குமாரதேவன் வரவேற்புரையாற்ற, மாவட்ட தலைவர் எ.கேசவன் தலைமையேற்க சமர்பா குமரன் மற்றும் நாத்திகன் இன எழுச்சிப் பாடல்கள் நிகழ்ச்சி தொடங்கியது.

# உண்மைகளை மறைக்கும் இலங்கை விசாரணை ஆணையம்

இலங்கை தனக்குத் தானே ஒரு விசாரணை ஆணையத்தை அமைத்துக்கொண்டதற்குக் காரணம் சர்வதேச அளவில் உருவான அழுத்தம்தான். டப்ளின் நகரில் செயல்படும் மக்கள் 'நிரந்தரத் தீர்ப்பாயம்' - அதைத் தொடர்ந்து பான்கி மூன் நியமித்த மூவர்குழு விசாரணை அறிக்கைகள் - இலங்கை அரசின் போர்க் குற்றத்தை உறுதிப்படுத்தின. அய்ரோப்பிய நாடுகளின் மனித உரிமை அமைப்புகள் கண்டனக் குரல் எழுப்பின. இதைத் தொடர்ந்து வேறு வழியின்றி இலங்கை அரசு ஒரு விசாரணை ஆணையம் அமைக்கும் நிலைககு தள்ளப்பட்டது.

ஏற்கனவே இலங்கை அதிபர் நியமித்த பல ஆணையங்கள் உருப்படியாக எந்த விளைவுகளையும் ஏற்படுத்தாத நிலையில், மீண்டும் இலங்கை ஒரு விசாரணை ஆணையத்தை அமைத்தது கண் துடைப்பு என்றே சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கூறின.

இந்த விசாரணை ஆணையத்தின் தலைவரான சி.ஆர். டி.சில்வா, இலங்கை அரசின் தலைமை சட்ட அதிகாரியாவார். 2006-2009 ஆம் ஆண்டில் இலங்கை அதிபர் ராணுவத்தின் அத்துமீறல்கள் குறித்து விசாரிக்க ஒரு ஆணையத்தை அமைத்தார். இந்தியாவின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.என். பகவதி தலைமையில் சர்வதேச பிரமுகர்களைக் கொண்டு ஒரு சர்வதேச குழு அமைக்கப்பட்டது. இலங்கை அரசின் விசாரணை ஆணையத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காக அக்குழுவை ராஜபக்சே அமைத்தார். கொழும்பு வந்த அந்த குழு, இலங்கை அரசு மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிக்க தகுதியில்லாத அளவுக்கு குற்றங்களை செய்து வருகிறது என்று கூறி, குழுவைக் கலைத்துவிட்டு, கொழும்பை விட்டு வெளியேறின. இந்த சர்வதேச குழுவால் குற்றம் சாட்டப்பட்டவர்தான் டிசில்வா. ராணுவத்தினரை குற்றங்களிலிருந்து காப்பாற்ற அரசு தலைமை வழக்கறிஞரான டி.சில்வா தலையிட்டார் என்று நீதிபதி பகவதி குழு கூறியது. அந்த சில்வாதான், இப்போது இலங்கை அரசு நியமித்த விசாரணை ஆணையத்தின் தலைவர். குழுவின் மற்றொரு உறுப்பினர். சர்வதேச பயங்கரவாத ஒழிப்புக்கான அய்.நா. துணைக் குழுவில் இடம் பெற்றவர். (இலங்கை அரசு விடுதலைப் புலிகளை மட்டுமல்ல, ஒட்டு மொத்த தமிழர்களையே பயங்கரவாதிகளாக கூறி வந்தது) இவர்களை ஒழிப்பதற்காக அய்.நா. குழுவில் இடம் பெற்ற பிரதிநிதி, தமிழர்களுக்கான இறுதி யுத்தத்தில் இலங்கையில் நிரந்தர பிரதிநிதியாக அய்.நா.வில் இடம் பெற்றிருந்த எச்.எம்.ஜி.எஸ். பலிஹாக்கரா என்பவர் இந்த ஆணையத்தின் மற்றொரு உறுப்பினர். இலங்கையில் ராணுவத் தாக்குதல்களை அய்.நா.வில் நியாயப்படுத்திப் பேசியவர். இந்த ஆணையத்தில் இடம் பெற்றிருந்த எட்டு உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் இப்படி அரசின் நம்பிக்கைக்கு உரியவர்கள்; போர்க் குற்றங்களை ஆதரித்தவர்கள்.

18 மாதம் செயல்பட்ட இந்தக் குழு, வன்னிப் பகுதிக்கு சென்று விசாரணை நடத்தியது, 6 நாட்கள் மட்டுமே! 17 நாட்களில் கள ஆய்வுகளை முடித்து விட்டது. ஆணையத்தின் அலுவலகம் கொழும்பில் இருந்தது. அவர்களின் முன்னால் பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியமளிக்கும்போது அவர்களுக்கு உதவக் கூடிய வழி நடத்துவோர் எவரும் இல்லை. பாதிக்கப்பட்ட பெண்கள் சாட்சியமளிக்கும்போது, மன உளைச்சலுக்கும் அழுத்தத்துக்கும் உள்ளாகும் நிலையில் உதவக்கூடியவர் எவரும் இல்லை. பெண்கள் பாலுறவு வன்முறை உட்பட தங்களின் பாதிப்புகளை ஆணையத்தில் ஆண் உறுப்பினர்களிடையே எப்படி விரிவாக கூற முடியும்? 8 ஆணைய உறுப்பினர்களில் பெண் ஒருவர் மட்டுமே. ஆணையத்தின் செயல்பாடுகளும் வெளிப்படையாக இல்லை. ஆணையத்தின் பரிந்துரையை செயல்படுத்த வேண்டும் என்ற சட்டபூர்வ உரிமையும் ஆணையத்துக்கு வழங்கப்படவில்லை. சாட்சிகளுக்கு பாதுகாப்பும் இல்லை; ராணுவத்துக்கு எதிராக சாட்சி கூறிவிட்டு, மீண்டும் ராணுவத்தின் பாதுகாப்பு கீழ்தான் அவர்கள் வாழ வேண்டும். தமிழர் வாழும் பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன.

போரில் கொல்லப்பட்ட பொது மக்கள், காணாமல் போனவர்களின் எண்ணிக்கைப் பற்றி ஆணையம் எந்த புள்ளிவிவரத்தையும் தரவில்லை. ஆணையத்தின் செயல்பாடுகளிலேயே இதுதான் முதன்மையானது.

2008 ஆம் ஆண்டு அக்டோபர் நிலவரப்படி முல்லைத் தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் வன்னிப் பகுதியிலும் அரசு பதிவேடுகளின் கீழ் பதிவாகியிருந்த மக்கள் தொகை 429,059. போருக்குப் பிறகு அரசு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட மக்கள் எண்ணிக்கையோ 282,380. இது அய்.நா. தயாரித்த புள்ளி விவரம். (2009, 10 ஜூலை நிலவரம்) 146,679 பேர் என்ன ஆனார்கள்? இலங்கை அரசு ஆணையத்தின் முன் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் டாக்டர் இராயப்பு ஜோசப் எழுத்துப்பூர்வமாக, இதைத் தாக்கல் செய்தார். போருக்குப் பிறகு தமிழர் பகுதியில் நில பறிப்பு, ராணுவ மயமாக்குதல், சிங்களர் குடியேற்றம், புத்தமயமாக்குதல், மனித உரிமை மீறல் குற்றங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். ஆணையம் இதுபற்றி எதுவுமே கூறவில்லை.

'உயர் பாதுகாப்பு வளையம்' என்று இராணுவம் அறிவிக்கும் பகுதிகளில் மக்கள் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். இதனால் வீடுகளை இழந்த யாழ்ப்பாணத் தமிழர்கள், 60000 பேர் இந்த பகுதியில் மீன் பிடிக்கச் செல்வதற்கு கடும் கட்டுப்பாடு. 24 இலங்கை அதிகாரிகளின் கையொப்பம் பெற்றே மீன் பிடிக்கச் செல்ல முடியும்.

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதிப்பிலிருந்து விடுபடவும், தொழில் பயிற்சி அளிக்கவும் தடைபோடப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்களோ, சர்ச்சுகளோ, இந்த நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அய்.நா.வின் குழு நடத்திய விசாரணை அறிக்கையில் இறுதி கட்டப் போரிலும் போருக்குப் பிறகும் இராணுவம் நடத்திய பாலுறவு வன்முறைகளைக் குறிப்பிடுகிறது. பல சம்பவங்கள் வெளியே தெரிந்தால் அவமானம் என்று கருதி, பாதிக்கப்பட்ட பெண்கள் மூடி மறைத்து விட்டார்கள். பெண்களின் நிர்வாண உடலையும், சிதைக்கப்பட்ட உடலையும் 'வீடியோ' சான்றுகள் வெளிப்படுத்தின. தற்காலிக முகாம்களில் பெண்கள் இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதை, பல சர்வதேச தொண்டு நிறுவனங்களே வெளிப்படுத்தின. இந்தக் குற்றச்சாட்டுகள் எதையும் இலங்கை அரசு விசாரணை ஆணையம் கண்டு கொள்ளவே இல்லை.

ஆங்காங்கே தனி மனிதர்களாக சில இராணுவத்தினர் தவறு இழைத்திருக்கலாம் என்று கூறுகிறது ஆணையம். இராணுவமே ஒரு அமைப்பாக குற்றம் செய்யவில்லை என்று கூறுகிறது. போரில் 40,000 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அய்.நா. அறிக்கை கூறுகிறது. மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு, 146,679 பேர் கதி என்னவென்று தெரியவில்லை என்று ஆதாரங்களுடன் கூறியுள்ளார். ஆனால், இலங்கை அரசின் ஆணையமோ, நான்கு அத்துமீறல்கள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளது. அதுவும், இராணுவத்திலுள்ள தனி நபர்களால்தான் என்று கூறுகிறது. நான்கு ராணுவத்தினர் நடத்திய முறைகேடுகளால் 40000 பேர் கொல்லப்பட்டுள்ளார்களா? அய்.நா.வின் அறிக்கை வெளியிட்டுள்ள கடுமையான குற்றச்சாட்டிலிருந்து இலங்கை தன்னை காப்பாற்றிக் கொள்ளவே, இந்த ஆணையத்தை நியமித்திருக்கிறது.

இராணுவம் பாராட்டத்தக்க அணுகுமுறைகளை வகுத்து செயல்பட்டது என்றும், பொது மக்களுக்கு எந்த பாதிப்பும் வந்துவிடக்கூடாது என்பதற்கு முன்னுரிமை தந்தது என்றும், ஆணையம் இராணுவத்திற்கு புகழாரம் சூட்டுகிறது. ஆனால் ஆஸ்திரேலியா நீதிமன்றத்தில் இலங்கையைச் சேர்ந்த ஆஸ்திரேலிய குடிமகன் - இலங்கையில் 'குடியமர்வுத் துறை' அமைச்சருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில், இலங்கை பாதுகாப்புப் படை தமிழர்களை சித்திரவதை செய்து கொலை செய்ததை உறுதி செய்தது. அப்பாவி மக்களை ராணுவம் சுட்டு, வீதிகளில் வீசி எறிந்துள்ளதை மனுதாரர் நேரில் பார்த்ததையும் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

போர் நடந்தபோது 2008 செப்டம்பரில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள் வெளியேற்றப்பட்டன. ஊடகங்களுக்கும் தடை விதிக்கப்பட்டன. இதுபற்றி இலங்கை விசாரணை ஆணையம் எதையும் குறிப்பிடவில்லை.

வெள்ளை வேனில் கடத்தப்பட்டவர்கள்; ஊடகவியலாளர் படுகொலைகள்; அரசு ஆதரவு துணைப் படைகளில் சிறுவர்கள் சேர்க்கப்பட்டது; சித்திரவதைகள்; வடக்கு கிழக்கில் போரினால் கணவனை இழந்துவிட்ட 90000 பெண்கள்; குழந்தைகளின் கல்வி பாதிப்பு; அனாதைகளாகிவிட்ட சிறுவர்கள்; முள்வேலி முகாமான மானிக் முகாமில் 282,000 தமிழர்கள் சந்தித்த அவலங்கள்; தமிழர்கள் சுதந்திர நடமாட்டத் தடை போன்றவை பற்றி ஆணையம் எதையும் குறிப்பிடவில்லை.

ஒன்றரை ஆண்டுகாலம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, இலங்கை அதிபரைக் காப்பாற்றிய ஆணையம் இராணுவ முறைகேடுகளுக்கு வேறு சில ஆணையங்களை நியமிக்க பரிந்துரைத்துள்ளது. இதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து அதிபரை காப்பாற்ற ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

அய்.நா.வில் பான்கிமூன் நியமித்த குழு, அய்.நா. அலுவலகங்கள் மற்றும் அகதிகளுக்கு உணவு வழங்கும் மய்யங்களில் குண்டு வீசப்பட்டதை சுட்டிக்காட்டி, அய்.நா. இதை ஏன் வெளி உலகுக்குக் கொண்டு செல்லவில்லை என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது. இந்த குண்டு வீச்சுக்கு அய்.நா.வின் செயற்கைக் கோள் படங்களே சான்றுகளாக உள்ளன. இலங்கை அரசு ஆணையம் இதை மறுக்க முடியாது.

**அய்.நா. குழு அறிக்கை**

- அய்.நா.வின் முன்னாள் அதிகாரி கார்டன்வெய்ஸ் எழுதிய 'தி கேஜ்' எனும் நூல்;
- சேனல் 4 தொலைக்காட்சி தயாரித்த 'கொலைக்களம்'
- 'ஹெட்லைன்ஸ்' டுடே தொலைக்காட்சி படம் பிடித்த 'இனப் படுகொலைக்கு சாட்சியங்கள்'
- இந்திய தொலைக் காட்சிகள் தயாரித்த 'இலங்கையின் பொய்மை'

இந்த தொலைக்காட்சிகள் எதுவுமே இலங்கை அரசு ஆணையத்தின் அறிக்கையை ஏற்கவில்லை. அது ஒரு சார்பானது என்று புறந்தள்ளி விட்டார்கள்.

இலங்கை அரசு போரினால் கற்றுக் கொண்ட படிப்பினை என்ன? யாரிடமிருந்து எதை கற்றுக் கொண்டது? இதற்கு பதில் கிடையாது. சர்வதேச விசாரணை ஒன்றின் அவசியத்தையே இலங்கை அரசின் ஆணைய அறிக்கையின் ஓட்டைகளும் இருட்டடிப்புகளும் உறுதி செய்கின்றன. ✦

## திருப்பூரில் கழகம் நடத்திய பொங்கல் விழா

கழகம் சார்பாக திருப்பூர் மாஸ்கோ நகர் பெரியார் திடலில் மூன்றாம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தை பொங்கல் விழா 22.1.2012 காலை நடைபெற்றது. அலமேலு பாலாஜி மருத்துவமனை மருத்துவர் மனோகர் பொங்கல் வழங்கி விழாவைத் துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து சிறுவர் சிறுமியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

முல்லை பெரியாறு நாயகன் கர்னல் பென்னிகுயிக் படத்திற்கு சு. துரைசாமி (மாவட்ட தலைவர்) மாலை அணிவித்து துவக்கி வைத்தார். க. அகிலன் இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். இரவு 7 மணிக்கு முல்லைப் பெரியாறு சிக்கலும் தீர்வும் ஆவணப்படம் திரையிடப்பட்டது. தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றி, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார்.

கழகத் தோழர்கள் மாஸ்கோ நகர் சம்பூகன், விசயன், பாடகர் தியாகு, மாநகரச் செயலாளர் முகில்ராசு, கிளாகுளம் செந்தில், கோபிநாத், மாதவன், தம்பி, பாலு, நீதியரசன், சாமுண்டிபுரம் மூர்த்தி, தண்டபாணி, பெரியார் முத்து ஆகியோர் கலந்து கொண்டனர். பிரசாத் நன்றியுரையாற்றினார்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# டில்லியின் அதிகார ஆணவம்

'தேசிய பயங்கரவாத தடுப்பு மய்யம்' ஒன்றை உருவாக்க மத்திய உள்துறை அமைச்சகம் மேற் கொண்ட முயற்சிக்கு காங்கிரஸ் அல்லாத மாநில முதல்வர்கள் கடுமையாக எதிர்த்ததால் அது கிடப்பில் போடப்பட்டுள்ளது. மத்திய உளவு நிறுவனமே மாநிலங்களில் நேரடியாக தலையிட்டு பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மாநில முதலமைச்சர்களை கலந்து ஆலோசிக்காமலே 'சட்டாம் பிள்ளைத்'தனமாக மத்திய அரசு செயல்பட்டது.

மாநிலக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் காங்கிரசோ, பா.ஜ.க.வோ, மத்தியில் அமைச்சரவை அமைக்க முடியாது என்ற நிலை வந்த பிறகும் காங்கிரஸ் ஏதோ, அகில இந்திய அளவில் செல்வாக்குள்ள கட்சி போல கற்பனைக் கனவில் மிதந்து கொண்டிருக்கிறது. உண்மையில் சோனியா காந்தி, இப்படி ஒரு கற்பனையில் மூழ்க்கிக் கிடந்தவர்தான். 1999 ஆம் ஆண்டு வாஜ்பாய் அரசு நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் கவிழ்ந்தபோது சோனியா, தன்னிடம் 272 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு இருப்பதாகக் கூறி, ஆட்சி அமைக்க முன் வந்தார். பா.ஜ.க.வை எதிர்க்கும் மாநிலக் கட்சிகள் எல்லாம், காங்கிரஸ் பின்னால் அணி வகுக்கும் என்று நம்பினார். முலாயம் சிங்கின் மாநிலக் கட்சியான சமாஜ்வாடி கட்சி, பா.ஜ.க.வை எதிர்த்தாலும் கண்மூடித்தனமாக காங்கிரசுக்கு ஆதரவு தர மறுத்துவிட்டது. இதேபோல் 2004 ஆம் ஆண்டு வரை பா.ஜ.க.வும், மாநிலக் கட்சிகளை அங்கீகரிக்காமல் ஏதோ தங்களுக்கு அகில இந்திய செல்வாக்கு இருப்பதுபோல் கற்பனையில் மிதந்தது. அதற்குப் பிறகு தான் அந்தக் கட்சி, தனது போக்கை மாற்றிக் கொண்டது. நிலைமையைப் புரிந்து கொண்ட சோனியாவும் பா.ஜ.க.வை மத்தியில் வீழ்த்துவதற்கு மாநிலக் கட்சிகளில் ஆதரவைப் பெற்றே தீர வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். 2009 ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்கு மாநிலக் கட்சிகளையே சார்ந்து நிற்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியது. உண்மை இவ்வாறு இருக்க, மாநில ஆட்சிகளைக் கலந்து ஆலோசிக்காமல், ப.சிதம்பரங்கள், இப்படிப்பட்ட முயற்சிகளில் அதிகார மமதையில் ஆட்டம் போடுகிறார்கள். சில்லறை விற்பனைக் கடைகளைத் திறக்க பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பதற்கு மன்மோகன் சிங் ஆட்சி, மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்காமலே தன்னிச்சையாக முடிவெடுத்தது.

கடும் எதிர்ப்பால், அத் திட்டம், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது, நினைவு கூரத்தக்கது.

முதல் பக்கத் தொடர்ச்சி

11. சட்ட விரோதமான ஆயுதம் தாங்கிய குழுக்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க வேண்டும்.
12. நிலப் பிரச்சனை தீர்க்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியான நில உரிமைப் பட்டாவை வழங்க வேண்டும்.
13. போர் பாதிப்புப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும்.
14. பெண்கள், குழந்தைகள், முதியோர், ஊனமுற்றோர் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான நிர்வாக காவல்துறை மற்றும் தொடர்புடைய துறையினரைக் கொண்ட அமைப்பு ஒன்றை அமைக்க வேண்டும்.
15. நிலம் தொடர்பான பிரச்சனைகளுக்காக தேசிய வாரியம் ஒன்றை அமைக்க வேண்டும். குறுகிய அரசியல் நலனுக்கு இதைப் பயன்படுத்தக் கூடாது.
16. போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதிப்புகளை கணக்கெடுத்து நிவாரணம் வழங்கப்பட வேண்டும். முன்னாள் விடுதலைப்புலிகளுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இது பொருந்தும்.
17. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ராணுவத்தை சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடாது. தனியார் நிலங்களை ராணுவம் பயன்படுத்துவதற்கு காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும்.
18. 1990 ஆம் ஆண்டு நடந்த இலங்கை போலீஸ் படுகொலை சம்பவம் தொடர்பாக கருணா, பிள்ளையான் ஆகியோர் பங்கு குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.
19. ஈழ ஜனநாயக முன்னணி (டக்ளஸ் தேவானந்தா அமைப்பு) என்ற அமைப்பு நடத்திய ஆள் கடத்தல் பற்றி முழுமையான விசாரணை வேண்டும்.
20. ராணுவத்தை கவசமாகப் பயன்படுத்தி மேஜர் சீலன் தலைமையில் செயல்பட்ட கும்பல் நடத்திய திருட்டு, கொள்ளை, கொலை போன்ற வன்முறைகளுக்கு நியாயம் வழங்கவேண்டும்.
21. காவல்துறை நடத்தும் விசாரணைகள் கைதுகள் குறித்து முறையான ஆலோசனைகளை வழங்கி வழிகாட்ட அரசு தலைமை வழக்கறிஞர் அலுவலகத்தில் தனிப் பிரிவை அமைக்க வேண்டும்.
22. அரசு வேலை வாய்ப்புகளில் தலையீடுகளைத் தவிர்க்க தேர்வாணையம் தேவை; தமிழர்களோடு மிகக் கூடுதலான அளவில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
23. சிங்களர் தமிழும், தமிழர் சிங்களரும் படிப்பதை பள்ளிகளில் கட்டாயமாக்க வேண்டும்.
24. அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ் பேசும் அதிகாரிகள் இடம்பெற வேண்டும். தமிழ் - சிங்கள குழந்தைகள் ஒன்றாக படிக்கும் பள்ளிகளை உருவாக்க வேண்டும்.
25. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் ஆட்சியாளர்கள் பேச வேண்டும். அவர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும்.
26. தமிழ், சிங்களம் இரு மொழிகளிலும் இலங்கை தேசிய கீதத்தை ஒரே நேரத்தில் பாட வேண்டும்.
27. சமூக நல்லிணக்கத்தைக் குலைக்கும் வெறுப்புக்குரிய பேச்சுகளைத் தடுக்கும் கடுமையான சட்டம் வேண்டும்.
28. பிப்.4 அம் தேதி தேசிய தினமாக அறிவிக்கப்பட்டு, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுடன் கரம் கோர்த்து... ஒன்றுபட்டு நிற்கிறோம் என்று உறுதி ஏற்க வேண்டும்.

- என்ற பரிந்துரைகளை இலங்கை அரசு நியமித்த ஆணையம் முன் வைத்துள்ளது. அரசின் ராணுவப் போர்க் குற்றங்களை மூடி மறைக்க முயன்றாலும் முழுமையாக குற்றங்களை மறைக்க முடியாமல் ஒப்புக் கொள்ள நேரிட்டுள்ளது என்பதை ஆணையத்தின் அறிக்கை மற்றும் பரிந்துரையிலிருந்து அறிய முடிகிறது.

இலங்கை அரசு எந்தக் குற்றமும் செய்யவில்லை என்றும், எல்லாவற்றுக் கும் காரணம் விடுதலைப்புலிகள்தான் என்றும் தமிழ்நாட்டிலேயே காங்கிரஸ் உள்ளிட்ட தேசியவாதிகளும் பார்ப்பன ஏடுகளும் துரோக சக்திகளும் கூறி வந்தன. இலங்கை அரசே தனது குற்றங்கள் சிலவற்றை மறைக்க முடியாது திணறுவதைக் கவனிக்க வேண்டும்.

**(மறைக்கப்பட்ட உண்மைகள் - 3 ஆம் பக்கம்)**

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

## நெடுமானூரில் கழகக் கூட்டம்

விழுப்புரம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 12.2.2012 ஞாயிறு மாலை 6 மணியளவில் கழகக் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நெடுமானூரில் நடைபெற்றது. தெ.செ. நாவாப்பிள்ளை தலைமை தாங்கினார். மு. திரு நாவுக்கரசு, பெரியசாமி, ரா. சிவராமன், ச. வசந்தகுமார் ஆகியோர் முன்னலை வகிக்க, ச.கா. இளையராசா வரவேற்புரையாற்றினார். செ. பிரபு, திருமால், நா.வெற்றிவேல், ந. அய்யனார் ஆகியோர் கருத்துரையாற்றினர். இறுதியாக காவை இளவரசன் 'மந்திரமல்ல தந்திரமே' அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நிகழ்த்தினார். விழுப்புரம் கணேசன், பெரியார் வெங்கட், கி.ஆசைத்தம்பி, க.இராமர், கல்லை சங்கர் உள்பட ஏராளமான தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். அ.ரமேசு நன்றி கூறினார்.

விழுப்புரம், கடுவனூர் கிளை கழகத் தோழர்களால் உருவாக்கப்பட்டது திராவிடன் சடுகுடு குழு. 18.1.2012 புதன் அன்று பொங்கல் விழாவை முன்னிட்டு போட்டி நடத்தப்பட்டது. இந்த போட்டியில் 20 குழுவினர் பங்கேற்றனர். போட்டியில் வெற்றிப் பெற்ற அணியினருக்கு முதல் பரிசுத் தொகை ரூ.5000 - அதிமுக ஒன்றியக் குழு உறுப்பினர் திருமதி ஆர்.செல்வி ராதாகிருஷ்ணனும், இரண்டாம் பரிசுத் தொகை ரூ.4000 - ஊராட்சி மன்றத் தலைவர் ஆமல்லிகா இராசேந்திரனும், மூன்றாம் பரிசுத் தொகை ரூ.3000 - அ.தி.மு.க கிளை கழக செயலாளர் கே.சின்னக்கண்ணுவும், நான்காம் பரிசுத் தொகை ரூ.2000 - ஊராட்சி மன்ற உறுப்பினர் இரா. பழனிவேலுவும், ஆறுதல் பரிசை ம. செல்வராசும் வழங்கினார்கள். தி.சக்கரவர்த்தி, திராவிடன் குழுவினருக்கு நன்கொடை வழங்கினார். ரவி வர்மா, பி. சுப்ரமணியம் நடுவராக இருந்து நிகழ்ச்சியை நடத்தினர்.

## கழகத் தோழர் இரா. டேவிட் - இரா. தீபாஶ்ரீ வாழ்க்கைத் துணை ஏற்பு விழா

22.1.2012 அன்று காலை 11.30 மணிக்கு சேலம் மேற்கு மாவட்டசெயலாளர் தோழர் இரா.டேவிட் - இரா.தீபாஶ்ரீ இணையரின் வாழ்க்கைத் துணை ஏற்பு விழா ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமையேற்க, கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். இவ்விழாவில் ம.தி.மு.க சேலம் மாவட்ட செயலாளர் தாமரைக் கண்ணன், சேலம் சங்கீதா மெடிக்கல் பாலசுப்ரமணியன், சேலம் மேற்கு மாவட்ட கழகத் தலைவர் சக்திவேல், சேலம் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.


## பனிமலர்-சதீஷ் சாதி மறுப்பு மணவிழா

கோவை தெற்கு மாவட்ட துணைத்தலைவர் இரா.பன்னீர்செல்வம் - தமிழ்ச் செல்வி ஆகியோரின் மகளும், சூலூர் கழகத் தோழர் வீரமணியின் தங்கையுமான ப.பனிமலர் - இரா.சதீஷ் நாராயணன் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா 27.2.2012 அன்று பேராசிரியர் சரசுவதி தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்க்கைத் துணை ஏற்பு நிகழ்வை நடத்தி வைத்தார். பொதுச் செயலாளர்கள் விடுதலை இராசேந்திரன், கு.இராமகிருட்டிணன், பேராசிரியர் புரட்சிக்கொடி, சூலூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவர் சூ.ர. தங்கவேலு, வழக்கறிஞர் தடா சந்திரசேகர், வழக்கறிஞர் மகாலட்சுமி, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இது ஒரு சாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணமாகும். மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 8th March 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மார்ச் 15, 2012 | புரட்சி 11 | முழக்கம் 09 | விலை: ரூ.2.50


## கேரளாவில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகிறார்கள்

# கருவறை பார்ப்பன ஆதிக்கம் ஒழிகிறது!

கேரளாவில் கோயில் கர்ப்பகிரகத்துக்குள் பார்ப்பனர் ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிட்டது. பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகராக முடியும் என்ற 'பிறப்பு ஆதிக்கம்' ஒழிந்து, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் அமைதிப் புரட்சி நடந்து முடிந்துள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் கேரள தேவஸ்வம் போர்டு காலியாக இருந்த 100 அர்ச்சகர் பதவிகளில் 50 பார்ப்பனரல்லாதாரை அர்ச்சகராக நியமனம் செய்துள்ளது. கேரள தேவஸ்வம் போர்டு சார்பாக அர்ச்சகர் பதவிக்கு அனைத்து சாதியினரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. பிறகு அவர்கள் நேர்முகப் பேட்டிக்கு அழைக்கப்பட்டனர். மொத்தம் 199 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் 40 சதவீதம் பேர் பார்ப்பனரல்லாத அனைத்து சாதிப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள். கேரள கூடுதல் தலைமை செயலாளர் கே.ஜெயக்குமார் கூறுகையில்:

"ஒருவர் உள்ளத்தாலும் செயல்களாலும் தான் 'பிராமணர்' ஆக முடியுமே தவிர, பிறப்பால் அல்ல இதைத்தான் பழங்கால புனித நூல்கள் கூறுகின்றன" என்றார்.

மலையாள இந்துவாகவும் 'தந்திர சாஸ்திரங்கள்' - பூசை முறைகள் பற்றி தெரிந்தவர் களாகவும் உள்ளவர்கள் இந்த வேலைக்கு தேர்வு செய்யப் பட்டதாக தேர்வுக் குழு உறுப்பினராக இருந்த கிருஷ்ணன் நம்பூதிரி கூறினார்.


Kerala temples 'caste' out purity phobia

NO LONGER TWICE BORN

மூத்த அர்ச்சகர் ஒருவரிடமிருந்து இதற்கான சான்றிதழ் பெறவேண்டும்.

"பல பார்ப்பனரல்லாதவர்கள் வேத மந்திரங் களை வியக்கும்படி மிகச் சிறப்பாகக் கூறி, தங்களது திறமையை வெளிப்படுத்தினார்கள்" என்றும் அந்த நம்பூதிரி கூறினார்.

பரம்பரை வழியாக இதே தொழிலில் இருந்த பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதாரை அர்ச்சக ராக்கியதை விரும்பவில்லை. இதே தொழிலில் இருந்தவர்களுக்கு கோயில்களிலேயே வேறு வேலைகள் வழங்க வேண்டும் என்று விஷ்ணு நாராயணன் நம்பூதிரி என்ற பார்ப்பன கவிஞர் கூறினார்.

தேவஸ்வம் போர்டு கட்டுப்பாட்டின் கீழ் கேரளாவில் 2000 கோயில்கள் உள்ளன. 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு (மார்ச் 12 இந்த செய்தியை வெளியிட்டுள்ளது).

ஏற்கனவே கேரளாவில் ஈழவர் ஒருவர், அர்ச்ச கராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து, பார்ப்பனர் தொடர்ந்த வழக்கில், பார்ப்பனர் மட்டுமே அர்ச்சகராக இருக்க வேண்டும் என்பது அரசியல் சட்டம் வழங்கியுள்ள சமத்துவ உரிமைக்கு எதி ரானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. நாடு சுதந்திரம் பெற்று அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, பிறப்பின் அடிப்படையில் பாகுபடுத்தக் கூடிய பழமையான செயல்பாடுகளை ஏற்க முடியாது என்று உச்சநீதிமன்றம் அந்தத் தீர்ப்பில் கூறியது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று, இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றி, முறையான அர்ச்சகர் பயிற்சி வகுப்புகளைத் தொடங்கி, பயிற்சி அளித்த பிறகும், பார்ப்பனரல்லாதார் அர்ச்சகராக முடியவில்லை. பழக்க வழக்கங்களில் அரசு தலையிடக் கூடாது என்று கூறி, பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றத்தில் தடை வாங்கிவிட்டனர்.

இப்போது கேரளாவில் கோயில்களில் நிலை நாட்டப்பட்டிருந்த "சூத்திர-பஞ்சம்" இழிவு ஒழிக்கப்பட்டிருக்கிறது. ✦

## சென்னை பல்கலையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அன்னை சரோஜினி நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு

சென்னை பல்கலைக் கழகம் தமிழ் இலக்கியத் துறையில் அன்னை சரோஜினி நினைவு அறக்கட்டளை சார்பில் 7.3.2012 அன்று பிற்பகல் 3 மணியளவில் பவள விழாக் கலையரங்கில் சிறப்பு சொற்பொழிவு நடந்தது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியாரின் மனித நேயம்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவரும், பெரியார் நாத்திகக் கருத்துகளில் தீவிர ஈடுபாடு கொண்டு பணி ஓய்வு பெற்ற பிறகு தனது இல்லத்தில் மாதம் தோறும் மனித நேய பகுத்தறிவுக் கூட்டங்களை நடத்தியவருமான மருத்துவர் பேராசிரியர் கே. நடராசன், தனது துணைவியார் நினைவாக நிறுவிய அறக்கட்டளையே அன்னை சரோஜினி நினைவு அறக்கட்டளையாகும்.

தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அரசு வரவேற்புரையைத் தொடர்ந்து, விடுதலை இராசேந்திரன் ஒரு மணி நேரம் உரையாற்றினார். ஆன்மீகவாதிகள், அறநெறியாளர்கள், சான்றோர்கள் என்று எல்லோரும் மனித நேயத்தை வலியுறுத்தினாலும், பெரியாரின் மனித நேயம் உள்ளடக்கத்திலும் பண்புகளிலும் முற்றிலும் மாறுபட்டதையும், மனித நேயத்தின் உச்சமாக சுயமரியாதையை முன்னிறுத்தியும் பெரியாரின் கருத்துகளிலிருந்தே எடுத்துக்காட்டி உரையாற்றினார். மாணவ மாணவியர்கள் கழகத் தோழர்கள் ஏராளமாக குழுமியிருந்தனர். மருத்துவர் நடராசன் - சரோஜினி குடும்பத்தினரும் பங்கேற்றனர்.

## 8 நாட்கள் 84 பகுதிகளில் மரண தண்டனைக்கு எதிராக பரப்புரைப் பயணம்

மரணதண்டனைக்கு எதிராக வடாற்காடு மாவட்டம் சோலையார் பேட்டை, திருப்பத்தூர், வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் தொகுதிகளில் உள்ள 84 ஊர்களில் பரப்புரைப் பயணம் நடந்தது. பிப்.15 இல் தொடங்கி பிப். 22 வரை 8 நாட்கள் நடந்த பரப்புரை பயணத்தில் மூன்று தமிழர் தூக்குத் தண்டனைக்கு எதிராக முன் வைத்த கருத்துகளை நியாயங்களை பல்லாயிரக்கணக்கான மக்கள் செவிமெடுத்தனர். பரப்புரைப் பயணம் பற்றிய செய்தித் தொகுப்பு:

தோழர்கள் சிவலிங்கம் மற்றும் குட்டிமணி (பா.ம.க. ஒன்றிய செயலாளர்) ஆகியோர் வழிகாட்டுதலில் எட்டு நாட்கள் தெருமுனைப் பிரச்சாரப் பயணம் திருப்பத்தூர், சோலையார்பேட்டை, வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் ஆகிய நான்கு தொகுதிகளில் பல்வேறு சிற்றூர், பேரூர் மற்றும் நகரங்களில் சிறப்பாக நடந்து முடிந்தது.

குமரேசன் மற்றும் சின்னத்தம்பி ஆகியோர் நிதியும், கே.சி.காமராஜ் திருமண மண்டபமும், வ.கி.அருணா மகிழுந்தும், ப.அன்பழகன் (தி.மு.க.) ஓய்விட அறையும் கொடுத்துதவினர்.

உணவு வழங்கியோர்: வ. கண்ணதாசன் (ம.தி.மு.க.), திருப்பத்தூர்அய்யம்பேட்டை பாலு (விடுதலை சிறுத்தைகள்), சா.பெரியார்தாசன் (அ.இ.அ.தி.மு.க.), கந்திலி அன்பு (அ.இ.தி.மு.க.), நாட்டறம்பள்ளி மலர் காமராஜ் (ஓய்வு, தமிழாசிரியர்), சோலையார்பேட்டை இல.குமரன், இன உணர்வாளர்கள் பெரிய மோட்டூர் சின்னத்தம்பி, சோலை சின்னக்கோடியூர், த. இளங்கோ, பூங்குளம் வேலரசு (திராவிட தமிழர் இயக்கம்), கே.டி.எஸ். சிவபிரகாசம் (தே.கா.க.), வாணியம்பாடி என். ஜெயசந்திரன் (நாம் தமிழர் கட்சி), வாணியம்பாடி உதயேந்திரம், தங்கப் பிரகாசம் (இன உணர்வாளர்), ஆம்பூர் ரவிக்குமார் (ம.தி.மு.க.), பள்ளிகொண்டா சுமதி ஆகியோர். பொது மக்கள் பலர் ஆங்காங்கு பிஸ்கட், பழம், தேநீர் முதலானவற்றைக் கொடுத்து மகிழ்வித்தனர்.

15.2.12 புதன் முற்பகல் சோலையார்பேட்டை பேருந்து நிறுத்தத்திலுள்ள தந்தை பெரியார், கடமைவீரர் காமராசர், அண்ணல் அம்பேத்கர் ஆகியோர் சிலைகளுக்கு மலர் மாலை அணிவிக்கப் பெற்றுப் பரப்புரை துவங்கியது.

காஞ்சி மக்கள் மன்றத் தோழர் பாலு தலைமையில் பறையடித்து முழக்கம் எழுப்பினர். சந்தனக்காடு புகழ் இயக்குநர் கவுதமன், பா.ம.க. மாவட்டத் தலைவர் பொறியாளர் பொன்னுசாமி, பெரியார் திராவிடர் கழக காஞ்சி மாவட்ட செயலாளர், பரப்புரைக் குழுத் தலைவர் டேவிட் பெரியார், வழக்கறிஞர் தேன்மொழி, திருமலை (நாம் தமிழர் கட்சி), கலைமதி, மகேந்திரவர்மன் இமயம் சரவணன், சோலைப்பிரியன் (திராவிடத் தமிழர் இயக்கம்) முதலான பரப்புரைக் குழுவினரும் சோலையார் பேட்டைத் தொகுதி ஊர்களில் பரப்புரை நிகழ்த்தினர்.

எந்தவித முன் விளம்பரமும் செய்யாமலேயே இந்த முயற்சி வெற்றியைத் தந்தது குறிப்பிடத்தக்கது.

16.2.2012 வியாழன் அன்று, திருப்பத்தூர் பகுதிகளில் நடந்த பரப்புரையில் டி.கே.ராஜா, சுபாஷ் சந்திர போஸ் (விடுதலை சிறுத்தைகள் கட்சி), பேராசிரியர் பார்த்திப ராஜா ஆகியோர் உரை யாற்றினர். சமர்பா குமரன் இசைப் பாடல் பாடினார்.

பிப்.17,18 தேதிகளில் வாணியம்பாடி பகுதியிலும், பிப்.19 அன்று - சோலையார்பேட்டை பகுதிகளிலும், பிப்.20, 21, 22 தேதிகளில் ஆம்பூர் பகுதிகளிலும் பரப்புரை நடந்தது.

4 ஆம் பக்கம்

தலையங்கம்

## தேசிய கட்சிகள் விடை பெறுகின்றன!

இந்தியாவில் அய்ந்து மாநிலங்களின் சட்டசபை தேர்தல் முடிவுகள் காங்கிரஸ், பா.ஜ.க. இரண்டு தேசியக் கட்சி களுக்கும் எதிராகவே வந்துள்ளன. உ.பி.யில் பகுஜன் சமாஜ் கட்சியை வீழ்த்தி, சமாஜ்வாடி கட்சி அதிகாரத்தைப் பிடித்துள்ளது. இராகுல் காந்தி களமிறங்கியும் உ.பி.யில் காங்கிரஸ், நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டுவிட்டது. பஞ்சாபில் அகாலிதளத்தின் பிரகாஷ்சிங் பாதல், ஆட்சியை மீண்டும் தக்க வைத்துக் கொண்டுள்ளார். பா.ஜ.க., அகாலிதளத்தின் கூட்டணி கட்சியாகும். கடந்த முறை ஊழல் புகார்களில் பா.ஜ.க. அமைச்சர்கள் பதவி விலகிய நிலையிலும் ஆட்சியின் எதிர்ப்புகளை காங்கிரஸ் கட்சியால் அறுவடை செய்ய முடியவில்லை. முலாயம்சிங் மகன் அகிலேஷ், உ.பி. தேர்தலுக்கு பொறுப்பேற்றதுபோல் பஞ்சாபில் பிரகாஷ் சிங் பாதல் மகன் சுக்பீர்சிங் பாதல் தேர்தல் பொறுப்பை ஏற்று செயல்பட்டார். இந்து வாக்கு வங்கி, பா.ஜ.க.வுக்கும் ஜாட் சீக்கியர் வாக்கு வங்கி அகாலிதளத்துக்கும், பிற்படுத்தப்பட்ட சீக்கியர், ஜாட் அல்லாத சீக்கியர், தலித் சீக்கியர் வாக்கு வங்கி காங்கிரசுக்கும் இருந்த நிலையை மாற்றி, சுக்பீர்சிங், அகாலிதளத்தில் ஜாட் அல்லாதவர்களுக்கும் போட்டியிடும் வாய்ப்புகளை வழங்கினார். அகாலிதள எதிர்ப்பு ஓட்டுகள் காங்கிரசுக்குப் போகாமல், அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்று போட்டியிட்ட பஞ்சாப் மக்கள் கட்சிக்குப் போய்விட்டது. 1966 ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலம் உருவான பிறகு, எந்த ஒரு ஆட்சியும் இரண்டாவது முறை பதவியில் நீடித்த வரலாறு இல்லை. இப்போது தான் நடந்திருக்கிறது. உத்தரகாண்ட்டில் ஆட்சி செய்த பா.ஜ.க.வின் அதிருப்தி ஓட்டுகளை காங்கிரஸ் பெற்று முன்னணியில் இருந்தாலும், ஆட்சி அமைப்பதற்கு போதுமான பலம் இல்லை. பா.ஜ.க. 31 இடங்களையும், காங்கிரஸ் 32 இடங்களையும் பெற்றுள்ளது. ஆட்சி அமைக்க காங்கிரசுக்கு இன்னும் 4 இடங்கள் தேவைப்படுகிறது. கோவாவில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ், பா.ஜ.க.விடம் அதிகாரத்தைப் பறிகொடுத்துவிட்டது. 40 உறுப்பினர்களடங்கிய கோவா சட்டமன்றத்தில் ஆட்சியிலிருந்த காங்கிரசுக்கு கிடைத்த இடம் 9 மட்டுமே. பா.ஜ.க. – எம்.ஜி.பி. கூட்டணிக்கு 24 இடங்கள் கிடைத்துள்ளன. கோவாவில் காங்கிரஸ் குடும்ப அதிகாரத்தில் மூழ்கிக் கிடந்தது. போட்டியிட்ட 12 முன்னாள் அமைச்சர்களில் 8 பேர் தோல்வியை தழுவினர். குடும்ப அரசியல் நடத்தியதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

மணிப்பூரில் மூன்றாவது முறையாக காங்கிரஸ் அதிகாரத்தைத் தக்க வைத்துள்ளது. மொத்தமுள்ள 60 இடங்களில 42 இடங்களை காங்கிரஸ் பிடித்துள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் 7 இடங்களிலும, காங்கிரஸ் அல்லாத கட்சிகள் உருவாக்கிய மக்கள் ஜனநாயகக் கூட்டணி ஒரு இடத்தையும், மற்ற இடங்களை சுயேச்சைகளும் கைப்பற்றியுள்ளன. காங்கிரசின் உயர்மட்டத் தலைவர்கள் எவரும் மணிப்பூர் தேர்தல் களத்தைத் திரும்பிப் பார்க்கவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும், மணிப்பூரில் காங்கிரஸ் கட்சி கடும் நெருக்கடிகளையே சந்திக்க வேண்டியிருக்கிறது. மணிப்பூரில் தனிநாடு கேட்டு ஆயுதம் ஏந்தி போராடும் 7 போராளிக் குழுக்கள் ‘கோர்கோம்’ என்ற பெயரில் ஒருங்கிணைந்து, காங்கிரஸ் கட்சியை தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவித்துள்ளன. இந்திய ஆட்சி அதிகாரத்தில் உட்கார்ந்து கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்கும் இதே காங்கிரஸ் ஆட்சி, மணிப்பூரில் அதிகாரத்தைப் பிடித்தும், போராளி இயக்கங்களால் தடை செய்யப்பட்ட கட்சியாகவே இருக்கிறது. அதன் காரணமாகவே காங்கிரசின் உயர்மட்டத் தலைவர்கள் இங்கே பிரச்சாரத்துக்கு வரவில்லை. மலைப் பகுதியிலும் இம்பால் பள்ளத்தாக்கு பகுதியிலும் காங்கிரஸ் வேட்பாளர்கள் ஓட்டு கேட்பதற்கு போராளிகள்அமைப்புகள் தடை செய்துவிட்டன.

காங்கிரஸ் – பா.ஜ.க. இரண்டு ‘தேசிய’ கட்சிகளையும்விட மாநில உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கட்சிகளிடமே மக்கள் செல்வாக்கு தங்கியுள்ளது என்பதை தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. வர இருக்கும் குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் வெற்றிப் பெற முடியுமா என்ற கேள்விக் குறி எழுந்துள்ளது.

இந்தியாவிலும் ஒரே கட்சி ஆட்சி என்ற காலம் முடிந்துவிட்டது. மாநில கட்சிகளின் ஆதரவின்றி எந்த தேசியக் கட்சியும் பதவிக்கு வந்துவிட முடியாது.

இந்த அரசியல் உண்மையை கவனத்தில் கொள்ளாமல், மத்திய ஆட்சி, மாநில உரிமைகளைப் பறிக்கும் சட்டங்களை வரிசையாகக் கொண்டுவர முயற்சிப்பது மோசமான எதிர் விளைவுகளையே உண்டாக்கும்.

இங்கிலாந்தின் ஆட்சி செயற்கையாக உருவாக்கிய ‘இந்தியா’ என்ற கட்டமைப்பு கடும் நெருக்கடிக்கு உள்ளாகி வருகிறது. இங்கே ‘இந்தியர்’ என்ற உணர்வுடன் எவரும் இல்லை. எனவேதான் தேசியக் கட்சிகளும் அதன் முக்கியத்துவத்தை இழந்து நிற்கின்றன.

தேசிய இனங்களின் விடுதலைக்குப் போராடும் இயக்கங்கள், மக்கள் ஆதரவுத் தளத்தைக் கட்டி எழுப்பி, கூர்மைபடுத்துவதற்கு சரியான அரசியல் களம் உருவாகி வருகிறது. இது வரலாற்றுக் கட்டாயமும் கூட!

# திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (2)

***1913*** சென்னை அய்க்கிய சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா நடேசனார் மருத்துவமனைத் தோட்டத்திலேயே சிறப்பாக நடைபெற்றது. ஓரிருவரைத் தவிர அனைத்து உறுப்பினர்களும் ஆண்டு விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டதானது பார்ப்பனர் தம் ஆதிக்கம் ஏனையோரை எந்த அளவுக்கு பாதிப்புக்குள்ளாக்கியிருந்தது என்பதைக் காட்டியதுடன், பார்ப்பனரல்லாதார் எனும் உணர்வின் ஒருமித்த வலிவையும் உணர்த்தியது. “சென்னை அய்க்கிய சங்கம்” என்ற பெயர் இச்சங்கத்தின் நோக்கத்தையும், ஆற்றும் பணியையும் குறிக்கும் வகையில் இல்லாமல், பொருத்தமற்றதாகக் காணப்படுவதால் ‘பார்ப்பனர் அல்லாதார் சங்கம்’ என்ற பெயர் முன்மொழியப்பட்டு விவாதிக்கப்பட்டது. பார்ப்பனரல்லாதார் என்று ஏன் எதிர்மறைப் பெயரால் குறிக்க வேண்டும்? திராவிடர் சங்கம் என்றே பெயரிடலாம் என்ற கருத்து பெரும்பான்மையோரால் முன்மொழியப்படவே சென்னை அய்க்கிய சங்கம் என்ற பெயரானது, ‘திராவிடர் சங்கம்’ என்று பெயர் மாற்றம் பெற்றது. சென்னைக்கு வருகை தந்த ராயல் கமிஷனின் முன் அன்றைய அரசுத் தலைமைச் செயலாளராயிருந்த அலெக்ஸாண்டர் கார்டியூ சென்னை மாகாணத்தில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் பார்ப்பனர் ஆதிக்கம் பற்றி புள்ளி விவரத்துடன் எடுத்துக் கூறினார்.

***1914*** திராவிடர் சங்கத்தின் புகழ் நாடெங்கும் பரவியது. இச்சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 500 ஆக உயர்ந்தது. இச்சங்கத்தைத் ‘திராவிடத் தந்தை’ என்று புகழப்பட்ட நடேசனார் சிறப்புற நடத்திச் சென்றார். திராவிடர் சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளி மாடியில் உள்ள கூடத்தில் நிகழ்ந்தது. பார்ப்பனரல்லாத பட்டதாரிகளுக்கு ஒரு வரவேற்பு நிகழ்ச்சியும், இவ்விழாவின் ஓர் அங்கமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க இருந்த வெங்கடகிரி மகாராஜா உடல்நிலை சரியில்லாமல் வர இயலாமற் போகவே, நீதிபதி சி.கிருஷ்ணன் தலைமையேற்று சிந்தனையைத் தூண்டும் அறிவுரை ஆற்றினார். இவ்விழாவில் டாக்டர் டி.எம்.நாயர் (தரவாத் மாதவன் நாயர்) ஆற்றிய உரை பார்ப்பனரல்லாதாரை வீறு கொள்ளச் செய்யும் வகையில் எழுச்சி மிக்கதாக அமைந்தது. தனது உரையின் முடிவில் பார்ப்பனரல்லாத இளைஞர்களை நோக்கி, ‘விழி! எழு! இன்றேல் என்றென்றும் வீழ்ந்துபடுவாய்!’ என எழுச்சிக் குரல் எழுப்பினார்.

‘திராவிடர் சங்கம்’ இன எழுச்சியைத் தூண்டும் வண்ணம் அடிக்கடி கூட்டங்களை நடத்தி வந்ததோடு இலக்கியக் கூட்டங்களையும் நடத்தி வந்தது. இக்கூட்டங்கள் அனைத்தும் நடேசனார் மருத்துவமனைத் தோட்டத்திலேயே நடைபெற்றன. உதாரணமாக, மே 15 இல் ‘நமது சமுதாயத்திற்கு இன்றைய தேவை’ என்ற பொருளில் மா.சிங்காரவேலு அவர்களும், ஜுலை 25 இல் ‘இந்திய இதிகாசங்களின் சரித்திரப் பின்னணி’ என்ற தலைப்பில் ஜி.ரங்கநாத (முதலியாரும்), ஆகஸ்ட் 22 இல் ‘பரோபகாரம்’ என்ற பொருளில் ஸ்ரீமத் பாம்பன் குமர குருதாச சாமிகளும், செப்டம்பர் 5 இல் ‘திராவிடரின் தற்கால நிலை’ என்ற பொருள் குறித்து அலமேலு மங்கம்மாள் அவர்களும், அக்டோபர் 3 இல் ‘அப்பர் திருமுறை’ என்ற பொருளில் இ.என்.தணிகாசல (முதலியாரும்) சொற்பொழிவு ஆற்றினர். மேலும், இது போன்ற கூட்டங்களில் திரு.வி.க., நாயர், தியாகராயர், எல்.டி. சாமிக்கண்ணுப் பிள்ளை போன்ற பார்ப்பனரல்லாத தலைவர்கள் சொற்பொழிவு ஆற்றினர்.

இக்கூட்டங்களில் எல்லாம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுவது, ஆண்டுதோறும், கல்லூரிப் பட்டம் பெற்ற திராவிட மாணவப் பட்டதாரிகளுக்கு வரவேற்பும், விருந்தும் அளித்து புகழுரையும், நல்லுரையும் புகன்று ஊக்கமும் உற்சாகமும் அளித்து பாராட்டு வழங்கும் விழாக்களேயாகும். இந்த ஆண்டு விழாக் கூட்டங்களில் கூடும் பட்டதாரி மாணவர்களுக்கு, திராவிட உணர்ச்சியையும் வீரத்தையும் ஊட்டி, பார்ப்பனர்களோடு போட்டியிட்டு முன்னுக்கு வரும்படி ஊக்குவித்து, அவர்களிடையே சுயமரியாதை உணர்வு பொங்கி எழும்படி தலைவர்கள் எழுச்சியுரை ஆற்றினர். எஸ்.ஜி.ரங்கராமானுஜ (முதலியார்), எஸ்.ஜி.மணவாள ராமானுஜம் (பின்னாளில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்), எஸ்.சடகோப (முதலியார்), ஆர்.கே. சண்முகம் (செட்டியார்) பின்னாளில் இந்திய அரசு நிதி அமைச்சர் போன்ற பெருமக்கள் எல்லாம் இச்சங்கத்தில் உறுப்பினராக இருந்து பிறகு உலகுக்கு அறிமுகமானவர்களே ஆவர். திராவிடர் சங்கமான பொதுவாக, பார்ப்பனர் அல்லாதாருக்குத் தலைமைப் பாதுகாவல் இடம் போன்று இயங்கியது என்றால் மிகையாகாது. இத் திராவிடர் சங்கத்தின் வியக்கத்தக்கப் பணியால் ஈர்க்கப்பட்ட முதுபெருந் தலைவர்களான தியாகராயரும், நாயரும், இதைவிட வன்மையும் ஆற்றலும் வாய்ந்த நாடு தழுவிய ஓர் இயக்கத்தின் தேவையை உணரத் தலைப்பட்டனர்.

**(தொடரும்)**

**கழக வெளியீடான ‘திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம்’ நூலிலிருந்து**

## புரட்சிப் பெரியார் முழக்கம் சந்தா சேர்ப்பு: சென்னை மாவட்டக் கழகம் தீவிரம்

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தாக்கள் சேர்க்கும் பணியில் சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் முனைப்பாக செயல்பட்டு வருகின்றனர். 500 சந்தாக்களை இலக்கு வைத்து செயல்பட்டு வருகிறார்கள். முதல் கட்டமாக பிப்.23 அன்று தலைமை அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் 100 சந்தாதாரர்களுக்கான தொகை, முகவரிப் பட்டியலை தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, கழகத் தலைவரிடம் வழங்கினார். மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள் பெருமளவில் பங்கேற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் திராவிடர் இயக்க நூற்றாண்டு கருத்தரங்குகளை மாநாடுபோல் நடத்துவது என்றும், புரட்சிக் கவிஞர் விழாவை பகுத்தறிவு தமிழ் உணர்வாளர்களை அழைத்து, அறிவியல் தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழர் புரட்சிப் பண்பாட்டு விழாக்களாக நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் வடசென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் கேசவன், வழக்கறிஞர் குமாரதேவன், தென்சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தபசி குமரன் உள்ளிட்ட தோழர்கள் பலரும் கருத்தினைக் கூறினர்.

### புழல் சிறைக் கைதியின் கடிதம்

கடந்த சில மாதங்களாக சிறையில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார ஏட்டைப் படித்து வருகிறோம். வெளியில் நடக்கும் செய்திகளை அறிந்து மிகவும் உற்சாகம் பெற்று வருகிறோம். 19.1.2012 இதழில் வெளிவந்த ‘25 ஆண்டுகளாக நடக்கும் கூடங்குளம் எதிர்ப்பு இயக்கம்’ என்ற கட்டுரை மிகச் சிறப்பாக உண்மைகளை விளக்கியது. கூடங்குளம் எதிர்ப்பு திடீரென்று தோன்றியதாக பொய்ப் பிரச்சாரம் செய்து வரும் தரகு முதலாளிகளுக்கு சேவகம் செய்து வரும் ஏடுகளுக்கு இந்தக் கட்டுரை சரியான பதிலாக இருந்தது.

**– வே. சுந்தரமூர்த்தி, புழல் மத்திய சிறை**

# திராவிடர் இயக்கம்: படிப்பினையும் தேவையும்

*திராவிடர் இயக்கம் குறித்து 'இந்தியா டுடே' இதழுக்கு (மார்ச் 14) கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய கட்டுரை இது. சில சிறு மாற்றங்களுடன் 'இந்தியா டுடே' வெளியிட்டுள்ளது. இதழுக்கு அனுப்பிய முழுமையான கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம்.*

தமிழ்நாட்டின் சமூக வரலாற்றிலிருந்து திராவிடர் இயக்கத்தைப் பிரித்துப் பார்க்க இயலாது. இப்போது மீண்டும் திராவிடர் இயக்கம் பற்றிய விவாதங்கள் தொடங்கியுள்ளன. உண்மையில் 'திராவிடர் இயக்கம்' - அன்று சென்னை மாகாணத்தில் கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகள் மறுக்கப்பட்ட பார்ப்பனரல்லாத மக்களுக்கு நீதி கேட்டு உருவானதுதான். தென்னாட்டில் அடங்கியிருந்த கேரளா, ஆந்திரா, கருநாடக மாநிலங்களை உள்ளடக்கி எழுந்தது அல்ல. இஸ்லாமியர், கிறிஸ்தவர் உட்பட, பார்ப்பனரலலாதவர்கள் உரிமைக் குரல் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே தனி மனிதர்களின் குரலாக ஒலிக்கத் தொடங்கியது. 1909 ஆம் ஆண்டில் சென்னையில் புருஷோத்தம (நாயுடு), சுப்பிரமணியம் என்ற இரு வழக்கறிஞர்கள், பார்ப்பனரல்லாத மாணவர்களின் 'கல்வி நலன் வாழ்வுநிலை உயர்வுக்கு' பார்ப்பனரல்லாத அரசு ஊழியர்களைக் கொண்டு 'சென்னை அய்க்கிய சங்கம்' என்ற அமைப்பை 1912 இல் தொடங்கினார்கள். இந்த அமைப்புதான் அதற்கு அடுத்த ஆண்டு டாக்டர் நடேசனார் மருத்துவ மனைத் தோட்டத்தில் நடைபெற்ற அதன் முதலாம் ஆண்டு விழாவில் 'திராவிடர் சங்கம்' (மெட்ராஸ் திராவிடியன் அசோசியேஷன்) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப்படி ஒரு பெயரை சூட்டும் ஆலோசனையை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே 'மெட்ராஸ் மெயில்' நாளேட்டில் (6.5.1909) வாசகர் ஒருவர் கடிதமாக எழுதியிருந்தார்.

தமிழர்களிடையே 'திராவிடம்' என்ற கருத்தியலுக்கு வலிமை சேர்த்தவர், அயர்லாந்திலிருந்து மதத் தொண்டாற்ற தமிழகம் வந்து, தமிழ் மொழியைப் பயின்று, திராவிட மொழிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்து 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற ஆய்வு நூலை 1856இல் எழுதிய கால்டுவெல் வடமொழியிலிருந்து தமிழ் மாறுபட்டது; அது தனித்து இயங்கும் ஆற்றல் கொண்டது என்ற மொழி ஆய்வையும், "திராவிடர் என்று அழைக்கப்பட்ட மக்கள் ஆரியப் பார்ப்பனர்கள் தங்களிடையே வந்து வாழத் தொடங்குவதற்கு முற்பட்ட காலத்திலேயே நாகரீக வாழ்வினராக இருந்தனர்" என்ற பண்பாட்டு ஆய்வையும் அவர் முன் வைத்தார்.

பார்ப்பனரல்லாதார் திராவிடர் அடையாளத்தோடு தங்களை அமைப்பாக்கிக் கொள்வதற்கான தேவை, அன்றைய வரலாற்றுச் சூழலிலிருந்து எழுந்தது. "மிகத் தொல் பழங்காலம் முதல் 19 ஆம் நூற்றாண்டின் துவக்க காலம் வரை இந்தியாவின் சமுதாய நிலை மாற்றமின்றி தேக்க நிலையிலேயே இருந்தது" என்று இந்தியாவைப் பற்றி எழுதிய காரல் மார்க்ஸ், பிரிட்டிஷ் ஆட்சியின் தொழிற்சாலைகள் - ரயில் இணைப்பு போன்ற நடவடிக்கைகளால் சமுதாயத்தின் தேக்கம் உடையத் தொடங்கியது என்றார். இதுவே பார்ப்பனரல்லாதாரின் விழிப்புக்கும் எழுச்சிக்கும் அடித்தளமாகியது என்று கூறலாம்.

அன்றைய சென்னை மாகான சமூக நிலையை 1901 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கை இவ்வாறு படம் பிடித்தது. "ஒரு மனிதனின் வாழ்வை, வேலையை, இருப்பிடத்தை, சமூக அந்தஸ்தை, உணவை, பெயரை, உடையை, சாதியே தீர்மானித்தது."

1911 ஆம் ஆண்டில் சென்னை பல்கலைக் கழகத்தில் இளம் கலைப் பட்டம்பெற்ற 15,209 பேரில் 10,269 பேர் பார்ப்பனர்கள்; முதுகலை பட்டம் பெற்ற 511 பேரில் 389 பேர் பார்ப்பனர்கள்; சட்டம் படித்த 54 பேரில் 48 பேர் பார்ப்பனர்கள்; பொறியியல் படித்த 160 பேரில் 121 பேர் பார்ப்பனர்கள்; 1498 ஆசிரியர்களில் 1094 பேர் பார்ப்பனர்கள். இந்த பின்னணியில் தோற்றமெடுத்ததே திராவிடர் இயக்கம். 'திராவிடர் சங்கம்' அரசியலமைப்பாக உருவெடுப்பதற்கு வித்திட்டது. அன்று அன்னிபெசன்ட் தொடங்கிய சுயாட்சி (Home Rule) இயக்கம்; காங்கிரசில் இருந்து கொண்டே 'ஸ்மார்த்த பிராமணர்களின்' ஆதரவோடு, சமஸ்கிருத வளர்ச்சி, இந்துமதப் பிரச்சாரத்தை முன் வைத்து, 'இந்தியர்' என்ற ஒற்றை அடையாளத்தோடு அன்னிபெசன்ட் அரசியலில் களமிறங்கியதால் தங்களுக்கு பாதிப்பு வந்துவிடும் என்று அஞ்சிய பார்ப்பனரல்லாத தலைவர்கள் முதலில் 'தென்னிந்திய மக்கள் சங்கம்' என்ற பதிவு பெற்ற நிறுவனத்தைத் தொடங்கி, பிறகு அதன் சார்பில் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற அரசியல் கட்சியை 1916 இல் தொடங்கினர்; தேர்தல் அரசியலில் அக்கட்சி ஈடுபட்டது.

பிரிட்டிஷ் ஆட்சி அறிமுகப்படுத்திய பிரிட்டிஷ் நிர்வாகத்துக்கு உட்பட்ட இரட்டை ஆட்சி முறையின் கீழ் 1921 லிருந்து 1926 வரையிலும், 1930லிருந்து 1934 வரையிலும் இரண்டு முறை ஆட்சியிலிருந்தது அக்கட்சி. 'ஜஸ்டிஸ்' என்று அது நடத்திவந்த நாளேட்டின் பெயராலேயே அக்கட்சி 'ஜஸ்டிஸ் கட்சி' என்று வெகு மக்களால் அழைக்கப்பட்டது. காங்கிரசு கட்சியும் நேரடியாக தேர்தலில் போட்டியிடாமல் 'சுயராஜ்ய கட்சி' என்ற பெயரில் தேர்தல் களத்துக்கு வந்தது. நீதிக்கட்சி தனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு சமூகப் பிரிவினருக்கு அரசுப் பதவிகளில் ஒதுக்கீடு வழங்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம். அதுவரை தனியார், புரோகிதர் வசமிருந்த கோயில்களின் உடைமைகளை அரசு கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்த இந்து அறநிலையத் துறை சட்டம். (அதன் பிறகு தான் கோயிலில் பக்தர்கள் குவித்த நிதி - மக்கள் நலப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டது) சென்னை




பல்கலைக்கழக சீர்திருத்த சட்டம்; ஆந்திர பல்கலை மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழக உருவாக்கம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பெண்கள் கல்விக்காக தொழிலாளர் நலத்துறை உருவாக்கம்; தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர் பிற சமூகத்தினருடன் சேர்ந்து படிக்கும் திட்டம; கல்வி உதவித் தொகை; கட்டணச் சலுகை; தாய்மொழி வழிக் கல்வி என்று ஏராளமான சாதனைகளை செய்தது இந்த ஆட்சி.

அதிகாரத்துக்கு வந்த நீதிக்கட்சி நேர்மையாக ஆட்சி நடத்தினாலும், பல்வேறு முற்போக்கு சட்டங்களைக் கொண்டு வந்தாலும், அதில் இடம் பெற்றிருந்த தலைவர்கள், சமூகத்தின் மேல் மட்டத்திலிருந்த வசதிப் படைத்தவர்களாகவே இருந்தனர். அடித்தள மக்களிடம் அவர்களுக்கு தொடர்பில்லை. அன்று பொது வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கவே முடியாத வாழ்நிலையில், சாமான்ய மக்கள் இருந்தார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நீதிக்கட்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பல சட்டங்களைக் கொண்டு வந்தாலும், அதைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையை எட்ட முடியாது. அவர்கள் வலிமையற்றவர்களாகவே இருந்தார்கள். 1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறையில் இருந்தபோது நீதிக்கட்சி, தலைவர் பதவியை பெரியாரிடம் வழங்கியது. அதுவரை நீதிக்கட்சியில் பெரியார் உறுப்பினர் இல்லை. அக் கட்சியை கண்மூடித்தனமாகவும் பெரியார் ஆதரிக்கவில்லை. அவர்களிடையே நிலவிய உட்கட்சி சண்டைகளையும் சொந்த வாழ்க்கையில் பின்பற்றிய வைதீக கலாச்சாரங்களையும் பெரியார் சாடியே வந்தார். 1920 முதல் 1925 வரை 5 ஆண்டுகாலம் அவர் காங்கிரசில் தலைவராகவும் செயலாளராகவும் இருந்தாலும் கட்சிக்குள்ளே வர்ணாஸ்ரமத்தை எதிர்த்தும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கோரியும் போராடி வெளியேறினார்.

அவர் தொடங்கிய 'குடிஅரசு' வார ஏடு, பெரும் அதிர்வலைகளை உருவாக்கியது. பெரியாரின் சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சியிலிருந்து மாறுபட்ட பண்புக் கூறுகளைக் கொண்டிருந்தது. 1925 ஆம் ஆண்டு முதலே அவர் சுயமரியாதைக் கொள்கைகளை பரப்பி வந்தாலும், 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டிலே கூட்டிய முதல் மாநாட்டுக்கு சமூகத்தின் கீழ் மட்டத்தில் உழலும் பல்வேறு மக்கள் பிரிவினர், காங்கிரஸ், நீதி கட்சியைச் சார்ந்த பிரமுகர்கள், பெண்கள், கணவனை இழந்தவர்கள் என்று பல்வேறு பிரிவினரும் திரண்டனர் என்று 'குடிஅரசு' பதிவு செய்துள்ளது. மதம், சாஸ்திர புராண எதிர்ப்பு, வர்ண பேத எதிர்ப்பு, சாதி தீண்டாமை எதிர்ப்பு, சாதிப் பட்டங்களைக் கைவிடுதல், தாய்மொழி வழிக் கல்வி, கட்டாய பெண் கல்வி, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அடிப்படை வசதியுடன் கட்டாயக் கல்வி, பெண்களுக்கு சொத்துரிமை என்று அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அன்றைய காலகட்டத்தில் சமுதாயத்துக்கு அதிர்ச்சியூட்டியவைகளாகவே இருந்தன. 10 ஆண்டுகால சுயமரியாதை இயக்கத்தின் தொடர்ச்சியாக நீதிக்கட்சித் தலைவர் பதவி பெரியார் தோள் மீது வந்து விழுந்தபோது, மிட்டா மிராசுதார்களின் கட்சியை வெகு மக்கள் கட்சியாக மாற்ற முயன்றார். அப்போது உருவானதுதான் 'திராவிடர் கழகம்'. நீதிக்கட்சித் தலைவர்களின் 'பிரபுத்துவ' பண்புக் கூறுகளை ஏற்க மறுத்தது திராவிடர் கழகம். பிரிட்டிஷ் ஆட்சி வழங்கிய 'சர்', 'ராவ்பகதூர்' பட்டங்களைத் துறக்க வேண்டும்; பெயருக்குப் பின்னால் சாதியைப் போடக்கூடாது; தேர்தல் அரசியலிலிருந்து விலக வேண்டும் என்ற தீர்மானங்கள் சுயமரியாதை இயக்கப் பாதையிலேயே பெரியார் பயணத்தை விளக்குகிறது. சாதி எதிர்ப்பு, வகுப்புவாரி பிரதிநிதித்துவம், பெண்ணடிமை எதிர்ப்பு, பகுத்தறிவு சிந்தனை - அதற்கு எதிரான மத மூடநம்பிக்கைகள் எதிர்ப்பு என்ற வழியில், நடைபோட்டதுதான், திராவிடர் இயக்கம்!

பெரியார் காங்கிரசிலிருந்து விலகியதும்; சுயமரியாதை இயக்கம் கண்டதும்; நீதிக்கட்சியை ஆதரித்ததும்; விமர்சித்ததும்; அக்கட்சியில் பண்பு மாற்றத்தை உருவாக்கியதும் கொள்கையின் அடிப்படையில்தான். ஆனால், 1949 இல் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்தபோது கொள்கை மாறுபாடுகளை முன்வைக்கவில்லை; பெரியாரின் திருமணம் முன் வைக்கப்பட்டது. பெரியார் இனத்தின் அடிப்படையில் தொடங்கிய இயக்கம் (திராவிடர்) நிலத்தின் அடிப்படையிலான (திராவிட) கழகமாகியது. தேர்தல் அரசியலை நோக்கி தி.மு.க. பயணப்பட்டதால், பெரியார் இயக்கத்தின் கொள்கைகள் ஒன்றன்பின் ஒன்றாக கை நழுவி, 'இடஒதுக்கீடு' கொள்கை ஒன்று மட்டுமே எஞ்சி நிற்கும் நிலை!

அதிகாரத்தில் இருந்த மற்றொரு கட்சியான அ.இ.அ.தி.மு.க. வைதீக எதிர்ப்பு, சாதி மத மூடநம்பிக்கை எதிர்ப்புகளையே முழுமையாக கைவிட்டு, இந்துத்துவ கட்சியாகி இடஒதுக்கீடு கொள்கை ஒன்றை மட்டுமே வைத்திருக்கிறது. தலைமையும் பார்ப்பனரிடம் வந்துவிட்டது.

பெரியார் கொள்கையின் நேரடியான எதிரிகளாக பா.ஜ.க.வுடனும், காங்கிரசுடனும் அரசியல் அதிகாரத்துக்காக கைகோர்க்கும் திராவிட கட்சிகளை திராவிடர் இயக்கத்தின் முழுமையான வழித் தோன்றல்களாகக் கருத முடியுமா என்ற கேள்வி எழவே செய்கிறது.

தமிழர்களின் உரிமைக்கு குரல் கொடுத்த பெரியார், 'திராவிடர்' என்ற அடையாளத்தை ஆரிய எதிர்ப்புக்காக முன் வைத்தார். கேரளா, ஆந்திரா, கருநாடக மாநிலங்களை ஒருங்கிணைக்கும் 'திராவிட'த்துக்காக அவர் இயக்கம் நடத்தவில்லை. 'திராவிடர்' என்ற அடையாளத்துக்குள் உரிமை பறிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய, கிறிஸ்தவப் பிரிவினர் அனைவரையும் ஒன்றிணைக்க முடியும் என்று அவர் கருதினார். 'திராவிடர்' என்பது வடமொழிச் சொல் என்பது தனக்குத் தெரியும் என்றும், அதற்கு மாற்றாக பார்ப்பனிய எதிர்ப்பைக் குறிக்கும் குறிச்சொல் ஏதாவது இருந்தால், எவராவது கூறினால், ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக கூறினார். தாம் இனத் தூய்மைக்காக 'திராவிடர்' உரிமை பேசவில்லை என்று கூறிய பெரியார், சமூக ஒருங்கிணைப்புக்கு தடையாக நிற்கும், 'இழிவுகளை' வேதங்களை எதிர்ப்பதற்காகவே என்று தனது நிலையை விளக்கினார். இப்போது சிலரால் திராவிடக் கட்சிகளின் மீதான குறைகளை திராவிடர் இயக்கத்தின் குற்றங்களாக்கி விமர்சிக்கப்படுகிறது.

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# உலகம் – உயிர் – சாதி தோன்றியது, இப்படித்தான்!

ஆதாரங்களுடன் அறிவியல் கூறும் ஆராய்ச்சி முடிவுகளின்படி பிக்பேங்க் என்ற பெரிய வெடிச் சிதறல் காரணமாக இந்த ‘அண்டம்’ என்னும் பிரபஞ்சம் தோன்றி 1500 கோடி ஆண்டுகள் ஆகின்றது. அதன் தொடர்ச்சியாக விண்மீன் (நட்சத்திர) மண்டலங்களும் (கேலக்ஸி), அவற்றின் விண்மீன்களும் தோன்றின. இந்த அண்டத்தில் கோடானுகோடி விண்மீன்களை உள்ளடக்கிய கோடிக்கணக்கான விண்மீன் மண்டலங்கள் உள்ளன என்பதைத் தெளிவாக நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு உருவான விண்மீன் மண்டலங்களில் ஒன்றுதான் நமது கதிரவ விண்மீனை (சூரிய நட்சத்திரத்தை) உள்ளடக்கிய பால்வெளி விண்மீன் மண்டலம் (மில்கி வே கேலக்ஸி) ஆகும். நமது இந்தப் பால்வெளி விண்மீன் மண்டலத்தில் மட்டும் நம் கதிரவனைப் போன்ற 20000 கோடி விண்மீன்கள் உள்ளன. பால்வெளி விண்மீன் மண்டலத்திலுள்ள நம் கதிரவ விண்மீன் தோன்றி இன்றைக்கு 500 கோடி ஆண்டுகள் ஆகின்றது. இன்னும் 600 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு நமக்கு ஒளி தந்து நம் உயிருக்கு ஆதாரமாக இருக்கும் இந்தக் கதிரவன் மூலப் பொருள்களின்றி அழிந்து போகும் என்பது அறிவியல் உண்மை! கதிரவத் துகள்களிலிருந்து உருவான நம் உலகம் தோன்றி ஏறக்குறைய 475 கோடி ஆண்டுகள் ஆகின்றது. இதுதான் உலகம் தோன்றிய வரலாறு.

### உயிர் தோன்றி மனிதன் உருவான வரலாறு

475 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவான நம் உலகில் முதல் 150 கோடி ஆண்டுகளுக்கு எந்த உயிரினமும் உண்டாகவில்லை. பின் முதன்முதலாக பல கோடி ஆண்டு வேதியியல் மாற்றங்களின் காரணமாக கடலுக்கடியில் ஒரு செல் உயிரினம் உண்டானது. அந்த முதல் உயிரினம் ஏதோ ஒரே நாளில் இயற்கைக்குப் புறம்பான தெய்வீக சக்தியால் உருவாக்கப்பட்டது என்று யாராவது கருதுவீர்களானால் அவர்கள் மீது நாம் அனுதாபப்பட முடியுமேயல்லாது வேறொன்றும் செய்ய இயலாது. 150 கோடி ஆண்டு வேதியல் மாற்றங்களின் (Organic Evolution) விளை பொருள்தான் அந்த முதல் உயிரினம். இப்படியாகக் கடலில் உருவான ஒரு செல் உயிரினம் கோடிக்கணக்கான ஆண்டு படிநிலை வளர்ச்சியின் காரணமாகப் பலசெல் உயிரினமாகி பின் நீரில் மட்டும் வாழக்கூடிய மீனினமாகி (Fishes) அதன் பிறகு இன்னும் கோடிக்கணக்கான ஆண்டு படிநிலை மாற்றத்தின் விளைவாக நீரிலும் நிலத்திலும் வாழ வல்லமையுள்ள தவளையினம் உருவாயிற்று. தவளையினத்திலிருந்து பாம்பு பல்லி போன்ற ஊர்வன இனம் (Reptiles) தோன்றிற்று. கோடிக்கணக்கான ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த டைனோசார் விலங்குகள் இந்த ஊர்வன வகையைச் சேர்ந்தவையே! இன்னும் கோடி கோடி ஆண்டுகள் உயிர் வேதியியல் படிநிலை மாற்றங்களின் காரணமாகப் பாலூட்டி இனமும் பறவையினமும் ஊர்வன இனத்திலிருந்து உருவானது. பாலூட்டிகளின் படிநிலை மாற்றத்தின் ஒரு நிலையில் குரங்கு இனம் உண்டானது. அந்தக் குரங்கு இனத்திலிருந்து படிநில மாற்றம் அடைந்து இன்றைக்குச் சுமார் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பாக மனித இனம் உண்டானது. இவையெல்லாம் ஊடகமான செய்திகள் அல்ல. உடற்கூறியல், உடலியக்கவியல், உயிர்வேதியியல், இரத்த வகை ஒற்றுமை, மரபணுவியல், தடவியல் மற்றும் புதை பொருள் ஆராய்ச்சி, கதிரியக்கவியல் போன்ற பல்வேறு அறிவியல்கள் வழி கண்டறிந்த உண்மைகள்.

### போலியான மதம் தோன்றிய வரலாறு

ஆக 475 கோடி ஆண்டு வரலாற்றுக்குச் சொந்தமான உலகில் மனிதனின் வரலாறு வெறும் 20 இலட்சம் ஆண்டுகளே! இந்த 20 இலட்ச மனித வரலாற்றில் 4500 ஆண்டுகளுக்கு முன்பு வரை மனித இனத்துக்கு மதம் கிடையாது! இன்றைக்கு மனித இனத்தை மத அடிப்பையில் பிளவுபடுத்தி உலக அமைதியைக் கெடுத்து உலக அழிவுக்குக் காரணமாக நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற அனைத்து மதங்களும் 4500 ஆண்டுகளுக்குள் சில தன்னலக் கும்பல்களால் மக்களின் அச்சம் அறியாமை போன்ற பலவீனங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டவையே! இடி, மின்னல், நிலச்சரிவு, வெள்ளம், எரிமலை, நிலஅதிர்வு, காட்டுத் தீ, ஆழிப் பேரலை போன்ற இயற்கைச் சீற்றங்களுக்கான அறிவியல் உண்மைகளை அறிந்திராது அச்சத்தால் நடுங்கியிருந்த மனித குலத்தை உண்மைகளுக்குப் புறம்பான காரணங்களை அவைகளுக்குக் கற்பித்து பொய்யான மதங்களை உருவாக்கி அடிமைப்படுத்தியது அந்தத் தன்னலக் கூட்டம். அறிவோடு எதிர்த்துப் பேசிய பகுத்தறிவுவாதிகள் அழிக்கப்பட்டனர்.

(தொடரும்)

முதல் பக்கத் தொடர்ச்சி

வெள்ளக்குட்டை கஜேந்திரன் (சமத்துவ மக்கள் கட்சி மாவட்ட அமைப்பாளர்), கவிஞர் தமிழேந்தி (மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சி), வேங்கடேசன் (பா.ம.க.), தனபால் (விவசாய சங்கத் தலைவர்), பிரதாபன் (புரட்சிகர விடுதலை முன்னணி), சௌந்தர் (விடுதலை சிறுத்தைகள் கட்சி), கிருஷ்ணமூர்த்தி (பா.ம.க.), பேராசிரியர் அப்துல்லா (எ) பெரியார் தாசன் அஸ்லாம் பாஷா, ச.ம.உ. (மனித நேய மக்கள் கட்சி), ரவிக்குமார் (ம.தி.மு.க.), சாமுவேல் செல்லபாண்டியன் (பா.ம.க.), ரவி (ம.தி.மு.க.), தினேஷ் (நாம் தமிழர் கட்சி) முதலானோர் கருத்துரையாற்றினர். பேரறிவாளனின் தாய் அற்புதம் அம்மையார் வந்திருந்தார்.

### பரப்புரைக் குழு

பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் சென்னை டேவிட் பெரியார் தலைமையில் சேகர், சிபி, செல்வம், கலைமதி, இமயம் சரவணன், நாத்திகன், நாம் தமிழர் கட்சி பாக்ஸர் பாஸ்கர், காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள் மகேந்திரவர்மன், பாலு, ரஜினி, பால்பாண்டியன், முருகன், கடாபி, செந்தாமரை, ஓட்டுநர் சுகுமார் ஆகியோர் சிறப்பாக எல்லா இடங்களிலும் பரப்புரையாற்றினர்.

துண்டு அறிக்கைகளையும், தூக்குத் தண்டனையை நீக்கக் கோரும் “தவறிய அழைப்பு” (மிஸ்டு கால்) (9282221212) எண்ணுடன் கூடிய நாட்காட்டியும் கூடியிருந்த மக்களுக்குக் கொடுத்து, அந்த எண்ணுக்கு தவறிய அழைப்பு அனுப்பக் கேட்டுக் கொண்டனர். பேரறிவாளன், ராபர்ட் பயாஸ் மற்றும் முருகன் எழுதிய நூல்கள், ஈகி செங்கொடி பற்றிய நூல், ஒலிப்பதிவு வட்டு ஆகியன விற்கும் தொண்டில் சிலரும் உண்டியல் ஏந்திடும் தொண்டில் சிலரும் ஈடுபட்டனர்.

சோலையார்பேட்டை வ.கி.அருணா, புலவர் பூபதி (தமிழாசிரியர், ஓய்வு), வ.கண்ணதாசன் (ம.தி.மு.க.), ஆஞ்சி (தே.மு.தி.க.), கே.டி.காமராஜ், கார்த்திகேயன், எரான்ராஜ், சோலை சிவா, திருப்பத்தூர் பாலு, கோகுல் (விடுதலை சிறுத்தைகள் கட்சி), வாணியம்பாடி நாம் தமிழர் கட்சி ஜெயசந்திரன், மேகநாதன், அருள்செல்வன், மோகன், ஆம்பூர் பன்னீர்செல்வம், ஆம்பூர் ரவி (தி.க.), ஏலகிரி சந்திரசேகரன் (பா.ம.க.), திருப்பத்தூர் நாம் தமிழர் கட்சியினராகிய சக்கரவர்த்தி, பெரியார் செல்வம், லெனின் மறவன் (திராவிடர் தமிழர் இயக்கம்) ஆகியோர் உதவிகளை நல்கினர்.

பரப்புரைக்கான வேன், பல்வேறு வண்ணங்களில் மரண தண்டனைக்கு எதிராக காந்தியார், அம்பேத்கார் வி.ஆர். கிருஷ்ணய்யர் சொன்ன கருத்துகளையும், தமிழர் மூவர் உயிரைக் காக்க தீயினுக்கு இறையான ஈகி செங்கொடியின் உருவப் படத்தை முகப்புக் கண்ணாடியிலும், தூக்கு மேடையில் நிற்க வைக்கப்பட்டுள்ள மூன்று தமிழர்களின் படங்களையும் பதித்திருந்த புதுவிதமான வண்டியின் காட்சி மக்களை ஈர்த்துப் படிக்கச் செய்தது.

இதுநாள்வரை உண்மை அறியா மக்கள் உண்மையை அறிந்து வியந்தனர். உடனே செல்பேசியில் ‘தவறிய அழைப்பு’ (மிஸ்டு கால்) செய்தனர். எட்டு நாட்களில் சற்றொப்ப 9000 அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளது கண்டு பரப்புரைக் குழுவினர் உற்சாகம் பெற்றனர். ஆதரவாளர்கள் மகிழ்ந்தனர். இந்தப் பணியைத் தொடர மேலும் ஊக்கம் பெற்றனர். முனைப்புடன் அடுத்த மாவட்டங்களுக்குச் செல்லத் தொடங்கிவிட்டனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29,
பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 99416 13535

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**
**பத்திரிகையின் உரிமை விளக்க அறிவிக்கை**
படிவம் 4 (8வது விதி காண்க)

1. வெளியாகும் இடம் : 15, மயிலப்பர் தெரு, அயன்புரம், சென்னை–23.
2. வெளியாகும் காலம் : வாரம் ஒரு முறை
3. அச்சடிப்பவர் பெயர் : எஸ். தீமாஸ்
   இனம் : தமிழர்
   முகவரி : லில்லி சூசை ஆப்செட், 8 முகமது உசேன் சந்து, சென்னை–14.
4. பதிப்பாளர் பெயர் : ஆனூர் செகதீசன்
   இனம் : திராவிடர்
   முகவரி : 15, மயிலப்பர் தெரு, அயன்புரம், சென்னை–23.
5. ஆசிரியர் பெயர் : விடுதலை இராசேந்திரன்
   இனம் : திராவிடர்
   முகவரி : 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, சென்னை–41.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரிகை உரிமையாளரும் கூட்டாளிகளும் பெயரும் முகவரியும் : இல்லை

நான் இதன் மூலம் மேலே காணப்படும் விவரங்கள்யாவும் எனக்குத் தெரிந்த வரை முற்றிலும் உண்மையென நம்பகமாக அறிவிக்கிறேன்.

(ஒப்பம்)
நாள்: 15–3–2012 ஆனூர் ஜெகதீசன்
இடம்: சென்னை. வெளியிடுபவர் கையொப்பம்

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

திராவிடர் இயக்கம் முன் வைத்த சாதி எதிர்ப்பு, இடஒதுக்கீடு, பகுத்தறிவு, பெண்ணுரிமை மற்றும் தேசிய இன உரிமை என்று திராவிடர் இயக்கக் கொள்கைகளை கைவிட்ட திராவிட கட்சிகள், எப்படி திராவிடர் இயக்கமாக முடியும்? திராவிடர் இயக்கம் பேசிய இந்தக் கொள்கைகள் தான் தமிழ்நாட்டையும், தமிழர்களையும் சீரழித்துவிட்டதா என்ற கேள்வியை கேட்க வேண்டியிருக்கிறது.


பெரியார் தொடங்கிய காலத்தில் உள்ள சமூகம், உலக ஒழுங்கு இப்போது இல்லை. உலகமயமாக்கல் கொள்கையினால் பன்னாட்டு நிறுவனங்கள், அரசியல், பொருளாதார அதிகாரங்களோடு வலம் வருகின்றன. பண்பாட்டு தளங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், புதிய நெருக்கடிகளை உருவாக்கியுள்ளன. இவைகளுக்கு முகம் கொடுப்பது அவசியமாகிறது. சாதியத்தின் ஒடுக்குமுறை வடிவங்கள் மாறினாலும், சாதியமைப்பு நீடிக்கிறது. பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் சமூக நீதியை மறுக்கின்றன. தேசிய இனங்களில் பிரச்சனைகள் கூர்மையடைந்து வருகின்றன. மதவாத அரசியல் வலிமையடைகிறது. பெரியார் கண்ட திராவிடர் இயக்கம் முன் வைத்த கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் தேவைகளையுமே, இவை உணர்த்தி நிற்கின்றன.

**விடுதலை இராசேந்திரன்**
**பொதுச் செயலாளர், பெரியார் திராவிடர் கழகம்**
1.03.2012

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 15th March 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மார்ச் 22, 2012 | புரட்சி 11 | முழக்கம் 10 | விலை: ரூ.2.50


# அடக்கு முறையில் திணிக்கப்படும் அணுமின் நிலையம்

எதிர்பார்த்தது நடந்து விட்டது. கூடங்குளம் அணுமின் நிலையத்தை அப்பகுதி மக்கள் எதிர்ப்பையும் மீறி துப்பாக்கி முனையில் இயங்கச் செய்வதற்கு தமிழக அமைச்சரவை முடிவெடுத் துள்ளது.

ஒரு அணுஉலை அமைப்பதற்கு மேற்கொள்ளப் பட வேண்டிய அடிப்படையான ஆய்வுகளைப் புறக்கணித்துவிட்டு, பன்னாட்டு ஒப்பந்தத்தை பன்னாட்டு நிறுவனங்களின் மின்சாரம் தேவைக்காக இந்தியப் பார்ப்பன பனியா ஆட்சி, மக்கள் மீது திணிப்பதற்கு இப்போது மாநில ஆட்சியும் துணை போகிறது.

அணு உலை தேவையா இல்லையா என்ற விவாதங்கள் ஒரு பக்கம் இருக்கட்டும்; ஒரு அணு உலை அமையப் போகும் இடத்தின் நிலவியல் என்பது மிக முக்கியமாக ஆய்வுக்கு உட்படுத்தியாக வேண்டும். அதற்காக அணுசக்தித் துறை வி.ஆர். வென்குலேர்ச்சர் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அக்குழு 1972 ஆம் ஆண்டு அறிக்கை சமர்ப்பித்தது. நிலவியல் அமைப்பு, அதன் நிலைத்த தன்மை (Geological stability) கட்டாயம் ஆராயப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை வலியுறுத்திய பல்வேறு அம்சங்களில் முக்கியமானதாகும்.

கூடங்குளத்தில் நிலவியல் அமைப்பு முறை எப்படி உள்ளது? கூடங்குளம் அணுஆலை அமைந்திருக்கும் இடத்திலிருந்து 90 கிலோ மீட்டர் தூரத்தில் அதாவது மன்னார் வளைகுடாவில் நிலச்சரிவு வழியாக சுனாமியை உருவாக்கக்கூடிய இரண்டு வண்டல் குவியல்கள் (Slumps) இருக்கும் ஆபத்தை, வில்லியம் வெஸ்டால் மற்றும் ஆலன் பவுரீ என்ற இரண்டு ஆய்வாளர்கள் ஆய்வு செய்து, 1982 ஆம் ஆண்டிலேயே அறிக்கையாக வெளியிட்டனர். கூடங்குளத்தை ஆதரிக்கும் "நிபுணர்கள்" இதை மூடி மறைத்தனர். போராட்டக் குழுவின் வல்லுனர்கள் இதை வெளிக் கொணர்ந்த பிறகு ஆதரவு விஞ்ஞானிகள் தடுமாறிப் போனார்கள். உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டிய நிலை. "சுனாமிகள் வரலாம்; வாய்ப்பு இருக்கிறது; ஆனால் அணு உலையைப் பாதிக்காது" என்று சமாதானம் கூறுகிறார்கள்.

1982 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட இந்த 'வண்டல் குவியல்' 2004 ஆம் ஆண்டு நிகழ்ந்த 'சுனாமி'க்குப் பிறகு எத்தகைய மாற்றங்களைப் பெற்றிருக்கிறது என்பதைக் கண்டறியும் ஆய்வுகள் எதையும் மேற்கொள்ளப்படவில்லை. 'சுனாமி'க்குப் பிறகு அவை மேலும் உறுதியற்றவைகளாகி மிகப் பெரும் நிலச் சரிவுகளை உருவாக்கக்கூடிய ஆபத்துகளையும் ஒதுக்கிவிட முடியாது.

- அணுஉலை அமைக்கும் பகுதி ஒரே சீரான கடினமான பாறைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், கூடங்குளத்தில் அப்படி இல்லை என்று அய்.அய்.டி. பேராசிரியர் பூமிநாதன், 2004 இல் சர்வதேசப் புகழ் பெற்ற 'கரண்ட் சயின்ஸ்' பத்திரிகையில் ஆய்வுக் கட்டுரை எழுதினார். கூடங்குளத்தில் 2001 இல் அணுசக்தித் துறை நடத்திய ஆய்வு ஒரே சீராகவே பாறைகள் இருப்பதாகக் கூறியதை இந்த ஆய்வு மறுத்தது.
- நிலவியல் சுற்றாய்வுத் துறை ஆய்வாளர் ஆர். ராமசாமி, இந்தப் பகுதியில் நடத்திய ஆய்வில் பல்வேறு வகை எரிமலைப் பாறைகள் இருப்பதைக் கண்டறிந்து வெளியிட்டார்.
- திருவனந்தபுரம் பல்கலைக்கழக நிலவியல் பேராசிரியர்கள் டாக்டர் பிஜு லாங்கினோஸ் மற்றும் முன்னாள் பேராசிரியர் ராமசாமி ஆகியோர் 1990களில் கூடங்குளம் பகுதியில் விரிவான ஆய்வு நடத்தி சமர்ப்பித்த ஆய்வறிக்கை அப்பகுதி நிலவியல் பற்றி அதிர்ச்சியான தகவல்களைத் தந்தது. "கூடங்குளம் பகுதியில் கடினப் பாறைகளை சுண்ணாம்புப் பாறைகள் மூடி மறைத்துள்ளன. அவற்றின் ஊடாக 'மக்மா' எரிமலைப் பாறைகள் பல இடங்களில் ஊடுருவியிருப்பதைக் காண முடிகிறது" என்று அந்த அறிக்கை கூறியது.
- 2010 செப்டம்பர் மாதம் 20, 26 தேதிகளில் அமெரிக்காவின் உட்டா மாநிலத்தில் மேவாட் என்ற நகரில் உலக நிலவியல் ஆய்வாளர்கள் மாநாடு நடந்தது. அதில் திருவனந்தபுரம் நிலவியல் விஞ்ஞானி பிஜீலாங் கினோவ் என்பவர், கூடங்குளம் பற்றி சமர்ப்பித்த ஆய்வறிக்கை இவ்வாறு கூறுகிறது:

  "கூடங்குளம் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளின் நிலவியல் அமைப்பு, பிற தென் கிழக்கு கடலோரப் பகுதிகளின் நிலவியல் அமைப்பிலிருந்து அடிப்படையில் வேறுபட்டது. அணுமின் நிலைய 30 கிலோ மீட்டர் பகுதியில் நிலக் காந்தவியல் ஆய்வு நடத்தியபோது பாறைகளுக்குள் எரிமலைப் பொருள்கள் ஊடுருவி நிற்பதைக் கண்டறிய முடிந்தது. வெளியே தெரியாமல், சுண்ணாம்பு கற்களும், மணற் கற்களும் மறைத்து நிற்கின்றன" என்று கூறியுள்ளார். இந்த ஆய்வை திருவனந்தபுரம் நில இயல்பியல் ஆய்வு மய்யம், புவியியல் ஆய்வு மய்யம் ஆகியவற்றின் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்று நடத்தியுள்ளார். தனது ஆய்வின் முடிவுகளை நிலவியல் விஞ்ஞானிகள் மித்தா ராஜாராம் மற்றும் முனைவர் எஸ்.பி.ஆனந்த் ஆகியோரிடம் கலந்து ஆலோசித்து செழுமைப்படுத்தியுள்ளார்.



போராட்டக் குழுவினரை கைது செய்ய காவல்துறை வரப் போகிறது என்ற வதந்தி பரவியவுடன், ஆவேசத்துடன் இடிந்தகரை எல்லை நோக்கி திரண்ட மக்களின் போர்க்கோலம்!

- அணுஉலைகள் அமைந்துள்ள பகுதியிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் சுற்றுப் பகுதியில் வேறு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது; அது அணுமின் நிலைய நிர்வாகக் கட்டுபாட்டில் இருக்க வேண்டும். இது அணுசக்திக் கட்டுப்பாடு அமைப்பு மக்களின் பாதுகாப்பு கருதி உருவாக்கியுள்ள அடிப்படை விதியாகும். இந்த விதிக்கு மாறாக 'இந்தியா சிமெண்ட்ஸ்' நிறுவனம், சுண்ணாம்புக்கல் சுரங்கத்தை எந்தத் தடையுமின்றி நடத்தி வருகிறது.
- ஜெர்மன் நாட்டைச் சார்ந்த புவியியல் ஆய்வாளர் ஹெல்முட் ப்ருக்னர் 1987 ஆம ஆண்டு இறுதியில் கூடங்குளம் வந்து நடத்திய விரிவான ஆய்வு; சென்னை பல்கலை நிலவியல் துறை பேராசிரியர் டி.ஆர்ம்ஸ்பிரங் ஆல்ட்ரின் சாம் மற்றும் எஸ். இராமசாமி, 1998 இல் நடத்திய ஆய்வுகள் கூடங்குளம் அணு மின் திட்டம் அமைப்பதற்கேற்ற நிலவியல் அமைப்பு கொண்ட பகுதியல்ல; ஆபத்தானவை என்றே கூறின.
- அணு மின் திட்டம் அமையும் பகுதியில் மக்களின் கருத்துகளைக் கேட்க வேண்டும் என்ற விதிகளும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. அப்பகுதி மக்களுக்கு ஆபத்துகள் வந்தால் உயிர் தப்பிப்பதற்கான 'பேரிடர் மேலாண்மை' பயிற்சிகளை வழங்க வேண்டும் என்ற விதியையும் அரசு நிறைவேற்றவில்லை.
- கூடங்குளத்தை தேர்வு செய்வதில் ரஷ்ய விஞ்ஞானிகளுக்கே கருத்து வேறுபாடு இருந்தது. இந்திய விஞ்ஞானிகளிடம் கருத்து மாறுபாடு ஏற்பட்டு பல ஆண்டுகாலம் இவை நீடித்தது. பிறகு ரஷ்ய விஞ்ஞானிகள் மூன்று பேரும் தங்கள் நாட்டில் விமான விபத்தில் பலியானார்கள். அதன் பிறகே எதிர்ப்பு இல்லாமல், இந்திய விஞ்ஞானிகள் கூடங்குளம் திட்டப் பணிகளைத் தொடர்ந்தனர்.

கூடங்குளம் பகுதி அணுஉலைக்கு ஏற்ற பகுதி தானா என்ற அய்யங்களைத் தீர்க்காமல் அது தொடர்பான ஆய்வுகளைப் புறக்கணித்துவிட்டு துப்பாக்கி முனையில் அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய மாநில அரசுகள் திணிக்கின்றன.

வெல்லப் போவது அரசு அடக்குமுறையா? மக்கள் சக்தியா? தமிழகம் மட்டுமல்ல; உலகமே, இதை கூர்ந்து கவனிக்கிறது.

தமிழக போராட்ட வரலாற்றில் கூடங்குளம் மக்கள் போராட்டம், புதிய அத்தியாயத்தை எழுதியிருக்கிறது.

## 'அச்சம்' போக்க வேண்டும் என்ற ஜெயலலிதா 'அச்சுறுத்தி' திணிக்கிறார்

மக்களின் அச்சத்தைப் போக்கிய பிறகே கூடங்குளம் அணுமின் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்றார், முதல்வர் ஜெயலலிதா. அச்சத்தைப் போக்கும் வரை, திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதினார். ஆனால், தமிழக முதல்வர் நியமித்த விஞ்ஞானிகள் குழு, கூடங்குளம் இடிந்தகரை பகுதி மக்களை சந்திக்கவே மறுத்தது. மக்களின் அச்சம் அப்படியே நீடிக்கிறது. இப்போது முதலமைச்சர் ஜெயலலிதா, மக்களை அச்சுறுத்தி, 5000 போலீசையும், துணை ராணுவப் படைகளையும் குவித்து, போராட்டக் குழு தலைவர்கள் மீது தேச விரோதம் உள்ளிட்ட கொடூரமான சட்டப் பிரிவுகளில் வழக்கு தொடர்ந்து, கைது செய்து சிறையிலடைத்து, கூடங்குளம் அணு உலையைத் திறக்கப் போகிறது.

ஈழத்தில் தமிழர்களை ஒழிக்கத் திட்டமிட்ட இலங்கை ராணுவம், அவர்களை முல்லைத் தீவு நோக்கி நெருக்கித் தள்ளியதுபோல், இடிந்தகரை மக்களும் இப்போது துப்பாக்கி முனையில் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும் என்று நாடகமாடிய ஜெயலலிதா –

இப்போது மக்களை அச்சுறுத்தி கூடங்குளம் அணுமின் திட்டத்தைத் திணிக்கிறார்.

உலகம் முழுதும் நடக்கும் அணுஉலை எதிர்ப்பு இயக்கத்தில் புதிய அத்தியாயங்களை இடிந்தகரை மக்கள் உருவாக்கியுள்ளனர்.

இந்த மக்களின் போராட்டம் வெல்வது உறுதி! உறுதி!

## ராஜபக்சே நடத்தும் 'ரவுடி அரசு': அய்.நா. அதிகாரி கூறுகிறார்

"ராஜபக்சே தனது அரசை ரவுடிகளின் நிறுவனமாக மாற்றியமைத்துள்ளார். (Rogue Institution) அப்படி மாற்றிக் கொண்ட சித்திரவதை, ஆள் கடத்தல் படுகொலைகளை அரசு நிறுவனங்களைப் பயன்படுத்தி, பெரிய அளவில் செய்து வருகிறார்" - இப்படி அய்.நா.வின் சித்திரவதைகளுக்கு எதிரான அய்.நா.வின் சிறப்புப் பிரதிநிதியே குற்றம் சாட்டியுள்ளார். இத்தகவலை மக்கள் சிவில் உரிமைக் கழகத்தைச் சார்ந்த வழக்கறிஞர்கள் வி.சுரேஷ் மற்றும் டி.கே.நாகசாய்யா, 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டில் எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளனர். (மார்ச் 16, 2012)

எந்த ஒரு குறிப்பிட்ட அரசுக்கும் எதிராக கண்டன தீர்மானம் வருவதை இந்தியா ஆதரிக்காது என்று இந்திய அரசு எடுத்துள்ள நிலையை அவர்கள் கேள்விக்குள்ளாக்குகிறார்கள். மனித உரிமை மீறல் என்பதற்கான விளக்கம் என்ன? ஏதேனும் ஒருவர் அக்குற்றத்தை செய்கிறார்; அவர் இராணுவத்தினராக இருக்கலாம்; போலீசாக இருக்கலாம். மனித உரிமை மீறலுக்கு உள்ளாகிறவர், பொது மக்கள்; ஆயுதமற்ற நிராயுதபாணிகள். இவை எல்லாமே எப்படி நிகழ்கின்றன? சூன்யத்திலா? ஏதேனும் ஒரு நாட்டில் தானே? போர்க் குற்றங்களைத் தண்டிக்க வேண்டும் என்றால், அதில் தொடர்புடைய குறிப்பிட்ட நாட்டைக் கண்டிக்காமல் அது எப்படி சாத்தியமாகும்? - என்ற கேள்வியை கட்டுரையில் அவர்கள் எழுப்பியுள்ளனர்.

மன்மோகன்சிங் ஆட்சி, இப்பிரச்சினையில் பொய் பேசுகிறது; சந்தர்ப்பவாத நிலை எடுத்துள்ளது என்பதற்கு - இலங்கை அரசு தனக்குத் தானே நியமித்துக் கொண்ட ஆணையத்திலேயே (எல்.எல்.ஆர்.சி.) பதில் இருக்கிறது. சட்ட விரோத கொலை, காணாமல் போதல், பாலியல் வன்முறைகளை - அந்த ஆணையத்தின் அறிக்கையே ஒப்புக் கொண்டிருப்பதை, கட்டுரையில் வழக்கறிஞர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அய்.நா. பொதுச் செயலாளர் பான்கிமூன் நியமித்த மூவர் குழுவின் அறிக்கை இவ்வாறு கூறுகிறது:

"இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்ளாமல் தவிர்த்து விடக் கூடாது; அப்படி செய்தால், உண்மையான குற்றங்களைத் தண்டிக்காமல் தவறவிட்டதாகிவிடும். அதன் விளைவு நியாயமான அமைதிக்கு ஊறுவிளைவித்து விடும். இலங்கை அரசு இப்போதும் தமிழர்களை அன்னியர்களாகப் பார்க்கும் கொள்கை, போர்க்கால நடவடிக்கைகளைத் தொடருதல், ஊடகங்களை கட்டுப்படுத்துதல் போன்றவற்றைக் கைவிடவேண்டும்" என்று அமெரிக்கா குறிப்பிட்டிருப்பதை கட்டுரையில் குறிப்பிட்டுள்ளனர்.

அய்.நா. குழு தீர்மானத்தின் வழியாக தாம் அம்பலமாகிவிடுவோமோ என்று, இலங்கை அரசு எதிர்ப்பது, எதிர்பார்க்க வேண்டியதுதான். ஆனால், அணி சேரா நாடுகளுக்கு தலைமையேற்ற இந்தியாவும், இப்படி ஒரு நிலையை எடுப்பது நியாயமா என்று கேள்வி எழுப்புகிறது, அக்கட்டுரை.

## டெல்லி பல்கலையில் 'இந்து' ராம் திணறல்; மாணவர்கள் அதிரடி கேள்விகள்

ஈழத் தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எதிராக நஞ்சை கக்கி எழுதியவரும், ராஜபக்சேயின் தமிழகப் பிரதிநிதியாக செயல்பட்டவருமான 'இந்து' ராம் டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலையில் மாணவர்களின் கடும் எதிர்ப்பை சந்தித்தார். கடந்த 14.3.2012 அன்று மாலை ஜவகர்லால் நேரு பல்கலை விடுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் அமைப்பு சார்பில் 'ஊடகங்களின் ஒழுங்கு' என்ற தலைப்பில் உரையாற்ற வந்திருந்தார். உரை முடிந்தவுடன், மாணவர்கள் கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்தனர். "நீங்கள் ஊடக ஒழுங்கைக் காப்பாற்றினீர்களா? ஈழத் தமிழர்களின் போராட்டத்தில் பத்திரிகை ஒழுங்கைப் பின்பற்றாமல், ராஜபக்சேயின் முகவராக செயல்பட்டது தான், ஊடக ஒழுங்கா? கண்மூடித்தனமாக சீனாவை விமர்சனமின்றி ஆதரிப்பது சரியா? 'இலங்கா ரத்னா' விருதை இலங்கை அரசிடமிருந்து பெற்றது ஏன்? கொலைக் குற்றம் சாட்டப் பட்ட இளைய சங்கராச்சாரி விஜயேந்திரனை ஆந்திராவிலிருந்து தமிழகத்துக்கு வரும்போது எல்லையில் நீங்களே காரில் சென்று அழைத்து வரலாமா? என்ற கேள்விகளை சரமாரியாகத் தொடுத்தனர்.

"போருக்குப் பிறகு தமிழர் பகுதியில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதை நான் பார்த்தேன்; நீங்கள் போய்ப் பாருங்கள்" என்று 'இந்து' ராம் கோபத்துடன் கூறினார்.

"ராஜபக்சே உங்களை அனுமதிப்பார்! எங்களை அனுமதிப்பாபரா?" என்று மாணவர்கள் திருப்பிக் கேட்டனர்.

பல கேள்விகளுக்கு பதில் கூற முடியாமல் திணறிய 'இந்து' ராம், தொங்கிய முகத்துடன் வெளியேறினார். அவரது வாழ்நாளில் இப்படி ஒரு எதிர்ப்பை சந்தித்திருக்க மாட்டார் என்று மாணவர்கள் கூறினர்.

**– நமது செய்தியாளர்**

# திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (3)

## அன்னிபெசன்ட் எடுத்த 'ஆரிய அவதாரம்'

**1915** பார்ப்பனரல்லாத இளைஞர்களின் இன எழுச்சியின் வெளிப்பாடாக திராவிடர் சங்கத்தின் சார்பில் 'திராவிடப் பெருமக்கள்' மற்றும் பார்ப்பனரல்லாதார் கடிதங்கள் ஆகிய இரு வெளியீடுகள் வந்தன. பார்ப்பனர் அல்லாதாரின் கல்வியை ஊக்குவித்தும், பார்ப்பனருடன் போட்டியிட்டு முன்னேறும் வகையில் ஒன்று சேர்ந்து உழைக்கும்படி தூண்டும் வகையில் அமைந்த 21 கடிதங்களைக் கொண்டது, 'பார்ப்பனர் அல்லாதார் கடிதங்கள்' என்ற நூலாகும். இவ்விரு நூல்களும், எஸ்.கே.என். என்னும் சுருக்கப் பெயர் (முழுப் பெயர் தெரியவில்லை) உள்ளவரால் எழுதப்பட்டு, 'இந்தியன் பாட்ரியாட்' எனும் இதழாசிரியர் சி.கருணாகரமேனனால் வெளியிடப்பட்டவை ஆகும்.

செப்டம்பர் 25 இல் 'ஹோம் ரூல்' இயக்கத்தைத் தொடங்கிய அன்னிபெசன்ட் அம்மையார், அதனை முற்றிலும் பார்ப்பனர் நலனுக்கே அர்ப்பணித்தமையினை உணர்ந்த பார்ப்பனரல்லாத தலைவர்கள் மேலும் விழிப்புற்றுக் கிளர்ந்தெழுந்தனர். ஏற்கனவே காங்கிரசில் ஈடுபட்டு உழைத்து வந்த தியாகராயர், நாயர் ஆகியோர், தென்னாட்டுப் பார்ப்பனர்களும் வடநாட்டு ஆதிக்கமும் ஒன்று சேர்ந்து தென்னிந்திய திராவிடர்களுக்கு அநீதி இழைத்து வரும் ஓர் அமைப்பே காங்கிரஸ் என்று உணர்ந்து அதனின்றும் விலகியிருந்தனர். இந்நிலையில் 'ஹோம் ரூல்' என்ற புதிய போர்வையில் 'சுய ஆட்சி' வேண்டி பார்ப்பனியம் அன்னிபெசன்ட் உருவில் அவதாரம் எடுத்திருப்பதைக் கண்டு வெகுண்டு சுய ஆட்சி என்பது பார்ப்பன ஆட்சியே (Home Rules is Brahmin Rule) என்று கூறி நாடெங்கும் இதனை அம்பலப்படுத்தினர். காங்கிரசில் உறுப்பினராய்ச் சேர்ந்து அதன் உள்ளே இருந்து கொண்டே 'ஹோம் ரூல்' இயக்கத்தை அன்னிபெசன்ட் நடத்தினார். ஸ்மார்த்தப் பார்ப்பனர்களின் ஆதரவினைப் பெற்ற அன்னிபெசன்ட் நால்வருணக் கொள்கையை ஆதரித்து, சமஸ்கிருத வளர்ச்சி, இந்து மதப் பிரச்சாரம் ஆகியவற்றை முன்னின்று நடததினார். ஆரிய கலாச்சாரத்தைக் காக்க வந்த அவதாரமாக தன்னை நினைத்துக் கொண்டு செயல்பட்டார்.

**(தொடரும்)**

**கழக வெளியீடான 'திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம்' நூலிலிருந்து**

# உலகம் - உயிர் - சாதி தோன்றியது, இப்படித்தான்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஏன், எதற்கு எப்படி? என்று எதையுமே ஆராய்ச்சி செய்து பார் என்று ஏதென்சு நகரத்து இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டிய அறிஞர் சாக்ரடீசு நஞ்சு கொடுக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். பகுத்தறிவு பேசிய இத்தாலி நாட்டைச் சேர்ந்த புரூனோ என்ற பகுத்தறிவாதி 16.2.1600 இல் ரோமன் சர்ச்சில் வைத்து உயிரோடு எரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட வரலாற்றையும் நாம் மறந்து விடுவதற்கில்லை! போலியான மதக் கருத்துகளை யாரும் எதிர்க்கத் துணியவில்லை! துணிந்த ஒரு சிலரோ மக்கள் கூட்டத்தின் முன்பாக எரிக்கப்பட்டனர்.! கல்லால் அடித்துக் கொல்லப்பட்டனர்! தூக்கிலிடப்பட்டனர்! கை கால்கள் துண்டிக்கப்பட்டனர்! இத்தகைய கொடுமையான தண்டனைகளை நேரில் கண்டபின் யாருக்கு போலி மதக் கருத்துகளை எதிர்க்கத் துணிவுண்டாயிருக்கும்? இவ்வாறு அறிவியல் உண்மைகளுக்குப் புறம்பான கருத்துகளை தங்கள் மத நூல்களில் கொண்டுள்ள அனைத்து மதங்களும் மக்களின் அறியாமை அச்சம், மூடநம்பிக்கை போன்றவைகளை அடித்தளமாகக் கொண்டு அழகாகவும், உறுதியாகவும் மனித சமுதாயத்தில் நிலைநிறுத்தப்பட்டன. உலகில் உள்ள அத்தனை மத நூலகளிலும் அறிவியல் உண்மைகளுக்குப் புறம்பான செய்திகள்தான் பிரபஞ்சத்தைப் பற்றி, அதன் தோற்றத்தைப் பற்றி, மனித குலம் உருவான வரலாற்றைப் பற்றிக் காண முடிகின்றது. தெய்வீகமானதென்றும், புனிதமானதென்றும், மத நம்பிக்கையாளர்களால் போற்றப்படுகின்ற அனைத்து மத நூல்களும் பொய் மூட்டைகள் எனும்போது அவை கூறும் கருத்துகளும் அவை காட்டும் சொர்க்கம், நரகம் போன்றவையும் எவ்வளவு போலியானவை என்பது நான் கூறாமலேயே உங்களுக்கு விளங்கும். எனவேதான் தெளிவாக உறுதியாக ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகின்றேன். இன்றைய மனித குலத்துக்குத் தேவை மத நல்லிணக்கமல்ல! மாறாக மதமற்ற ஒரு நிலை! உண்மைக்குப் புறம்பான போலிக் கருத்தோடு உடன்பாடும் தேவையில்லை! இணக்கமும் தேவையில்லை! மதங்களற்ற மனித சமுதாயமே இன்றைய மானுட அமைதி வாழ்விற்கு மகத்தான் தேவை!

**சாதிகள் தோன்றிய வரலாறு**

உலகில் எந்த மதத்திற்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு இந்து மதத்திற்கு உண்டு! அதுதான் சாதீயத்தை இந்து மதமும் அதன் கடவுள்களும் அங்கீகரிக்கின்ற அருவருக்கத்தக்க செயல்! இந்து மதத்தின் ரிக் வேதம் தொடங்கி, மகாபாரதம், இராமாயணம் போன்ற அதிகாசங்களிலும் பகவானால் அருளப்பட்டதாகக் கதைக்கப்படும் பகவத் கீதையிலும் மனித குலத்தை இழிவு படுத்தும் சாதீயம் வலியுறுத்தப்பட்டு நியாயப்படுத்தப்படு கின்றது! இந்து மதத்தின் முதன்முதல் வேதமாகிய ரிக்வேதத்திலேயே பிரம்மாவின் நெற்றியில் பிறந்தவர்கள் சமுதாயப் படிக்கட்டில் மிக உயர்ந்த சமூகமாகவும், அடுத்து தோளில்,தொடையில் மற்றும் பாதத்தில் பிறந்தவர்கள் அடுத்தடுத்து தாழ்ந்த சமூகங்களாகவும் திட்டமிட்டு எழுதப்பட்டுள்ளது! இந்தியாவில் ஆயிரக் கணக்கான சாதிகள் உருவாகி மனிதகுல ஒற்றுமைக்கு எதிரான சாதிச் சண்டைகளும் கலவரங்களும் உருவாகக் கருவான இந்த மனிதகுல விரோதக் கருத்தை பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் பகர்கிறாராம்!

**பகவத் கீதை அத்தியாயம் 4 - பாடல் 13 இவ்வாறு கூறுகிறது:**

"மனிதர்களின் நான்கு வர்ணங்களையும் குணத்தின் மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில் நான்தான் படைத்தேன். படைத்த என்னாலேயே இந்த அமைப்பை மாற்ற முடியாது."

கடவுள் மனித குலத்தின் நான்கு பிரிவுகளையும் குணத்தின் மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில்தான், தான் படைத்ததாக வாக்குமூலம் தருவதோடு படைத்த தன்னால்கூட இந்த அமைப்பை மாற்ற முடியாது என்று ஆணித்தரமாக அடித்துக் கூறினால் மனித குலத்தின் ரீதியிலான பிரிவுகளை எவ்வளவு ஆழமாக இந்துமதம் வலியுறுத்துகின்றது என்பதை மனிதநேயச் சிந்தனையாளர்களின் முடிவுக்கே விட்டு விடுகின்றோம். 20 இலட்ச ஆண்டுகள் மனித வரலாற்றிலே எந்த நாட்டிலும் சாதிகள் தோன்றவில்லை. இந்தியாவில் மட்டும் ஒரு தன்னல சக்திகளால் 3000-4000 ஆண்டுகளுக்கு முன்பாக வேதங்கள் கற்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் செயற்கையாகத் திணிக்கப்பட்டதுதான் சாதி எனும் சமதாய நோய்! நம் தமிழகத்தை எடுத்துக் கொண்டோமேயானால் 2000 ஆண்டுகள் முன்பு வரை சாதிகள் கிடையாது. ஒரே இனமாக வாழ்ந்து வந்த நம் தமிழகத்தில், வடநாட்டு பார்ப்பன உயர்சாதியினர் புகுந்து, நம் மன்னர்களைப் புரியாத மொழி (சமஸ்கிருதம்) மூலம் ஏமாற்றி, தம்மை ஆட்சி ஆலோசகர்களாக நியமிக்கச் செய்து, அவர்களின் நச்சுக் கருத்துகளின்படி நம் மன்னர்களை ஆட்சி நடத்தச் செய்தார்கள்; அன்று முதல் பற்றிக் கொண்டு வேகமாகப் பரவி இந்தச் சமுதாயத்தைச் சீரழித்து வருவதுதான் இந்த சாதீய நோய்!

## ‘ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்’ அறிக்கையால் மேலும் நெருக்கடி


# போர் முடிந்த பிறகு இலங்கையின் கொடூரமான மனித உரிமை மீறல்கள்

***இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்ந்து வெளிவரத் தொடங்கியுள்ளன. ‘ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்’ எனும் சர்வதேச மனித உரிமை அமைப்பு, போர் முடிந்த பிறகு இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களை, கடந்த 13 ஆம் தேதி அய்.நா.வின் அறிக்கையாக சமர்ப்பித்தது. இலங்கை அரசுக்கு உலக அரங்கில் மேலும் நெருக்கடிகளை உருவாக்கியுள்ள அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் இவை:***

சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் 9வது பிரிவு, “எந்த ஒரு நபரையும் சட்ட விரோதக் காவலிலோ, கைது செய்தோ, அடையாளம் தெரியாத ரகசிய இடத்திலோ தடுத்து வைக்கக் கூடாது” என்று திட்டவட்டமாக கூறுகிறது. இது சர்வதேச சட்டமாக ஏற்கப்பட்டுள்ளது. எல்லா அரசு களையும் இது கட்டுப்படுத்தும்; சாக்கு போக்குகள் எதையும் கூறி அரசு இந்த பிரகடனத்திலிருந்து விலகி நிற்க முடியாது.

ஆனால், சட்ட விரோதமாக பல்வேறு அடக்கு முறை சட்டங்களின் கீழ் காவலில் தடுத்து வைப்பது சிறீலங்காவில் தொடர் கதையாகும். 1971 ஆம் ஆண்டு முதல் அந்த நாட்டில் அசர நிலை பிரகடனம் அமுலில் இருந்தது. போருக்குப் பிறகு 2011 ஆக. 30 ஆம் தேதி தான் இது விலக்கிக் கொள்ளப்பட்டது. ஆனால், ‘பயங்கரவாத தடுப்புச் சட்டம்’ தொடர்ந்து அமுலில் உள்ளது. அவசர நிலை பிரகடனத்திலுள்ள பல்வேறு கடுமையான சட்டப் பிரிவுகள் இந்த சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. விடுதலைப் புலிகள் மீதான தடையும் நீடிக்கிறது. புலிகளின் ஆதர வாளர்கள் என்ற சந்தேகத்தினால், ஆயிரக்கணக்கில் சட்ட விரோத காவலில் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர். அவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படவில்லை. வழக்கு விசாரணையும் இல்லை. பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் காவலில் வைத்த பிறகு விடுதலை செய்யப்பட்டவர்கள் புலனாய்வுத் துறையில் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறார்கள். காவல் நிலையத்தில் அவர்கள் கையெழுத்திட வேண்டும். தமிழர்கள் வாழும் வடக்குப் பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. சிவில் நிர்வாகம் இராணுவத்திடமே உள்ளது. (உணவுப் பொருள் வினியோகம், மருத்துவமனை கண்காணிப்பு, குறிப்பாக அலைபேசிகளுக்கு சிம்கார்டு வாங்குதல்; அலைபேசியைப் பயன்படுத்த முன் பணம் செலுத்து வதற்கே ராணுவத்தினரிடம் தான் செல்ல வேண்டும் - ஆர்) தொடர்ந்து மனித உரிமை மீறல்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் சிறப்பு அதிரடிப் படை இலங்கை முழுதும் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. மனித உரிமை செயல்பாட்டாளர்கள் மீதே மனித உரிமை மீறல்கள் நிகழ்கின்றன.

1. 2009 மே மாதத்தில் கொழும்பில் உள்ள மனித உரிமைகள் மற்றும் மேம்பாடு நிறுவனத்தின் அதிகாரியாக பணியாற்றிய ஸ்டீபன் சுந்தர்ராஜ், ராணுவ உடை தரித்திருந்த சிலரால் கடத்தப் பட்டு, கொழும்பில் மூன்று மாதம் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டார். இப்போது காவல் நிலையத்திலும் அவர் இல்லை. அவர் என்ன ஆனார் என்பது தெரியவில்லை. சட்ட விரோத மாகக் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த போது, அவரது மனைவி தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் விடுதலை செய்ய உத்தரவிட்டது. (மே 7, 2009) நீதிமன்றத்திலிருந்து தனது மனைவி யுடன், தமது வழக்கறிஞரின் ‘மோட்டார் பைக் கில்’ வந்த சுந்தர்ராஜை உளவுப் பிரிவினர் பின் தொடர்ந்தனர். நண்பர் ஒருவர் வீட்டில் இருந்த குழந்தைகளை அழைத்துச் செல்லும் நோக்கத் தோடு வந்து கொண்டிருந்தபோது, வெள்ளை நிற கார் ஒன்று வழி மறித்தது. மோட்டார் பைக்கில் இருந்த சுந்தர்ராஜை துப்பாக்கி முனையில் மிரட்டி, இழுத்துத் தள்ளி, காரில் ஏற்றிப் பறந்தனர். மோட்டார் பைக்கில் பின் தொடராமல் சாவியையும் பறித்துக் கொண்டனர்.
2. சட்ட விரோத காவலை எதிர்ப்பவர்கள் தாக்கப் படுகிறார்கள்; அவர்களும் காவலில் தடுத்து வைக்கப்படுகின்றனர். 2011 டிசம்பர் 9 ஆம் தேதி யாழ்ப்பாணத்தில் காரணமின்றி கைது செய்து காவலில் வைக்கப்பட்டோரின் குடும்பத்தில் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்ய பேரணி ஒன்றுக்கு திட்டமிட்டனர். இதற்கான ஏற்பாடுகளை செய்த இரண்டு செயல்பாட் டாளர்கள் பேரணிக்கு செல்லும் வழியிலேயே




தடுத்து நிறுத்தப்பட்டு கடத்தப்பட்டனர். அவர்கள் என்ன ஆனார்கள் என்பதே தெரிய வில்லை.

3. ‘ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்’ (சர்வதேச பொது மன்னிப்பு சபை) அமைப்புக்கு கிடைத்த புகார்களிலிருந்து கீழ் வரும் உண்மைகள் கண்டறியப்பட்டன. கைது செய்வதற்கான ஆணை எதுவுமின்றி சாதாரண உடையில் அடையாளம் தெரியாத நபர்கள் கடத்திச் சென்று, ரகசிய இடங்களில் விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தப்படு கிறார்கள். தங்களைக் கடத்தி வந்தது காவல் துறையா, இராணுவமா, அதிரடிப் படையா, யார் என்பதுகூட, தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு தெரிவதில்லை. கைது செய்த அதிகாரிகள் பெயரும் தெரிவதில்லை.
4. தேடப்படுவோரின் குடும்ப உறுப்பினர்கள், துன்புறுத்தப்படுகிறார்கள். அலைக்கழிக்கப்படு கிறார்கள். அவர்கள் பகுதியிலேயே தடுத்து வைக்கப்படுவதும் நிகழ்கிறது.
5. எதற்காகக் கைது செய்யப்பட்டுள்ளோம் என்பதே பலருக்கும் தெரியாது. எவ்வளவு காலம் காவலில் இருப்பார்கள் என்பதும் தெரியாது. நெடும் தொலைவிலுள்ள இவர்களின் குடும்பத்தினருக்கு எந்த சட்டத்தின் கீழ் ஏன் கைது செய்யப்பட்டார்கள் என்பது குறித்த எந்த தகவலும் தெரிவதில்லை.
6. குடும்பத்தினரை சந்திக்கவும் அனுமதிப்பதில்லை. காவலில் தடுத்து வைக்கப்படும் இடங்களும் அவ்வப்போது மாற்றப்படுகின்றன.
7. பல மாதங்கள், வாரங்கள் வரை கைது செய்யப் பட்டவர்களுக்கு சட்ட ஆலோசனைகள் பெறும் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. விசாரணையில் அடைத்து வைக்கப்படும்போது தங்களுக்கு வழக்கறிஞர் உதவிகோரும் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாகவே கைதான வர்களில் சிலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.
8. தங்கள் கைதை எதிர்த்து நீதிமன்றம் செல்வதற்குக் கூட அபூர்வமாகவே அனுமதி வழங்கப்படுகிறது. அப்படியே நீதிமன்றம் போக அனுமதித்தாலும் நீதிமன்ற நடைமுறைகள் கைதுக்கு ஒப்புதல் வழங்குவதாகவே உள்ளன.
9. காவலில் வைக்கப்பட்டவர்கள் மோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கடுமையாக நடத்தப்படுகிறார்கள். கொடூரமாகத் தாக்கப்படு கிறார்கள். ராணுவம் அரசுக்கு ஆதரவாக செயல்படும் குழுவினர், சிறைக் கைதிகள், சிறைக் காவலர்கள் எல்லோரும் இணைந்து கைது செய்தவர்களை அவமதிப்பதும் இழிவாகப் பேசுவதும் தொடருகிறது.
10. விடுவிப்பதற்கு ராணுவமும் போலீசும் கையூட்டு கேட்கிறது.
11. விடுவிக்கப்படும் தனி நபர்கள் தொடர்ந்து ராணுவத்தால் கண்காணிக்கப்படுகிறார்கள். சில நேரங்களில் மீண்டும் கைது செய்யப்படுகிறார் கள். தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை களை வெளியே சொல்லக் கூடாது என்று மிரட்டப்படுகிறார்கள். இலங்கைக்கு வெளியே வேறு நாட்டிலிருந்து ‘ஆம்னஸ்டி இன்டர் நேஷனலை’ தொடர்பு கொண்டு பேசும் அனை வருமே, இதனால், இலங்கையில் தங்கள் குடும்பத் தினர், மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்று அஞ்சு கிறார்கள்.
12. பூசா தடுப்பு மய்யத்திலிருந்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அடைக்கப் பட்டிருந்தவர்களில் 118 பேர் 2011 மார்ச் மாதம் விடுவிக்கப்பட்டு கைதிகளை விடுதலை செய்து விட்டதாக அரசு பெரிய விளம்பரங்களை செய்தது. உண்மையில் விடுதலை செய்யப் பட்டதாக அறிவிக்கப்பட்ட அவர்களை மீண்டும் பூந்தோட்டம் அகதிகள் முகாமுக்குக் கொண்டு போய் இரண்டு ஆண்டுகள் வெளியே வர முடியாத ‘அவசரகால’ப் பிரிவு சட்டத்தின் கீழ் அடைத்து விட்டனர். வழக்குப் பதிவு செய்யாமல், நீதிமன்ற விசாரணையும் இன்றி, அவர்கள் இப்போதும் முகாமுக்குள்ளே அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். (தடுப்புக் காவலில் வைக்கப்படும் இடங்களுக்கு ‘முகாம்கள்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளன.)
13. 2011 மே மாதத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பற்றிய தகவல்களைக் கேட்டு ‘ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்’ இலங்கையின் சிறைத் துறை ஆணையருக்கு கடிதம் எழுதியது; இதுவரை பதில் இல்லை.
14. **2011 ஆகஸ்ட் இறுதியில் இலங்கை அவசர நிலை பிரகடனத்தை நீக்கம் செய்தது. நீக்கம் செய்த, 24 மணி நேரத்துக்குள் அதிபர், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திலேயே அவசர நிலை பிரகடனத்திலுள்ள பிரிவுகளை இணைத்து அறிவித்தார்.**
15. ஆனால், இலங்கையின் அவசரகால சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் செப்.1, 2011-க்குப் பிறகு (அந்தச் சட்டம் நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பிறகு) என்ன ஆனார்கள் என்பதே தெரியவில்லை. (இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை அரசு அவசர நிலையை நிறுத்தி விட்டதாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது. - ஆர்) சர்வதேச மனித உரிமை சமூகத்துக்கு விடை தெரியாத உள்ளத்தை அழுத்தும் பிரச்னையாக இது இருக்கிறது. ஊடகங்கள் வழக்கறிஞர்கள் வழியாகக் கிடைக்கும் தகவல்கள் அதிர்ச்சி தருகின்றன. அவர்களை விடுதலை செய்வதாக அல்லது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் நிறுத்தப் போவதாக இலங்கை அரசு அறிவித்தது. ஆனால், அதைச் செய்ய வில்லை. அவர்கள் அரசின் ரகசியப் பிடியில் சிக்கிக் கிடக்கிறார்கள். தடுப்புக் காவலில் உள்ளவர்கள் பற்றி எந்தப் பதிவுகளும் அரசிடம் இல்லை.
16. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதிகபட்ச தண்டனைக் காலம் முடிந்த பிறகு பயங்கரவாத புலனாய்வு விசாரணைத் துறைக்குக் கொண்டு செல்லப் பட்டு, தடுப்பு முகாம்களில் வைக்கப்படுகிறார்கள்.
17. தடுப்புக் காவலில் வைப்பதற்கு இலங்கை அரசு ‘புனர் வாழ்வு’ என்று பெயர் சூட்டியிருக்கிறது. ராணுவத்திடம் சரணடைவதை தாமாக விரும்பி சரணடைந்தவர்கள் என்று கூறுகிறது. மயில் வாகனம், வினோதலிங்கம், 2009 இல் போர் முடிந்தவுடன் விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு, 2012 ஜனவரி வரை 3 ஆண்டுகள் புலனாய்வுத் துறை விசாரணைக் காவலில் வைக்கப்பட்டார். ஜனவரியில் நீதிபதி முன் நிறுத்தப்பட்டார். எவ்வளவு காலம் “புனர் வாழ்வு” (காவல்) மய்யத்தில் இருக்க வேண்டும் என்று நீதிபதியிடம் கேட்டதற்கு அதை முடிவு செய்யும் அதிகாரம், புனர் வாழ்வுத் துறையிடம் தான் உள்ளது என்று நீதிபதி கூறி விட்டார். இலங்கை அரசியல் சட்டம், சட்ட விரோத காவல், சித்திரவதை, மனித விரோத அடக்கு முறைகள் போன்றவை கடுமையான குற்றம் என்று தெளிவாகக் கூறு கிறது. ஆனால், இந்த சட்டங்கள் செயல்படாமல் முடக்கப்பட்டுவிட்டது.
18. இலங்கை ராணுவம் மக்களுக்கு எதிராக செயல் படுவதை விமர்சித்த, இலங்கை பத்திரிகையாளர் ஜெ.எஸ். திசநாயகம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். விசாரணையில் அவர் தந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்று நீதிமன்றம் அவருக்கு 20 ஆண்டு சிறை தண்டனை வழங்கியது. தன்னிடம் கட்டாயப்படுத்தி அச்சுறுத்தி வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் என்று ஜெஎஸ். திசநாயகம் கூறியதை நீதிமன்றம் ஏற்கவில்லை. உலகம் முழுதுமிருந்தும் கண்டனம் வெடித்ததால், அவரக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. பிறகு அவர் தலைமறைவாகிவிட்டார்.

(தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# சர்ச்சையைக் கிளப்பும் அமெரிக்கத் தீர்மானம்: முதலில் சர்வதேச விவாதம் தொடங்கட்டும்!

அமெரிக்க தீர்மானத்தின் மீது கடைசியாக நாடாளுமன்றத்தில் வாய் திறந்த பிரதமர் மன்மோகன் சிங், அய்.நா.வில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தின் இறுதி நகல், தம்மிடம் இல்லை என்றும், அதை ஆதரிக்கும் மனப்போக்கில் இந்தியா இருப்பதாகவும் (Inclined to vote) கூறியுள்ளார். போருக்குப் பிறகு இலங்கை அரசு நியமித்த விசாரணை ஆணையமும் அந்த ஆணையத்தின் பரிந்துரையை இலங்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ததும் அவசர நிலை அங்கே தளர்த்தப்பட்டதும், உள்ளாட்சித் தேர்தலுக்கு இலங்கை அரசு தயாராகி வருவதும் உறுதியான நடவடிக்கைகள் என்று மன்மோகன் சிங் கூறுகிறார். இலங்கை அரசின் மீது எந்த ஒரு குற்றச்சாட்டையும் முன் வைக்க மன்மோகன் சிங் தயாராக இல்லை.

இது பற்றி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, "பிரதமர் உரையில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டது பற்றி எதையுமே குறிப்பிடவில்லை. மனித உரிமை மீறலுக்காக இலங்கை அரசு கண்டிக்கப்படும் என்றும் கூறவில்லை. இது மழுப்பலான, பயனில்லாத பதில்" என்று கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் 'மென்மையான' தீர்மானம் உலகம் முழுதும் இணையதளங்களில் வலம் வந்து கொண்டிருக்கிறது. பிரதமர் அலுவலகத்தின் பார்வைக்கு மட்டும் அது வராமல் போய்விட்டது போல் மன்மோகன் பேசுவது அவர் தப்பிக்க முயல்வதையே காட்டுகிறது.

அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானம்கூட அப்படி ஒன்றும் 'அழுத்தமானதாக' இல்லை என்பது உண்மைதான். இப்படி ஒரு தீர்மானம் வந்து விட்டதாலேயே ஈழத் தமிழருக்கு என்ன பயன் கிடைத்து விடும் என்ற கேள்வியைக்கூட ஈழ விடுதலை ஆதரவாளர்கள் சிலர் எழுப்புகிறார்கள்.

இலங்கை அரசை குற்றக் கூண்டில் நிறுத்தி தண்டித்துவிட்டால் தமிழர்களுக்கு மறுவாழ்வு கிடைத்துவிடுமா என்ற கேள்வி முன் வைக்கப்படுகிறது. தமிழர்களின் மறுவாழ்வு மற்றும் அரசியல் தீர்வுகளுக்கும் இலங்கை அரசு மீதான பன்னாட்டு விசாரணைக்கும் உள்ள தொடர்புகளைத் துண்டித்துவிட்டு, இப்பிரச்சினையை பார்க்க முடியாது. போர்க் குற்றத்திலிருந்து இலங்கை தப்பித்துவிட்டால் மீண்டும் தமிழர்கள் தங்கள் வாழ்வுரிமையை 'காவு' கொடுக்கும் நிலைதான் உருவாகும். தமிழர்களுக்கான அரசியல் தீர்வுகள் அது தனி நாடாக இருந்தாலும் அதிகாரப் பகிர்வு என்றாலும் இலங்கை அரசே தீர்மானிக்கப் போகிறதா? அல்லது சர்வதேச அழுத்தங்களினால் தலையீடுகளால் உருவாகப் போகிறதா என்பதே முக்கிய கேள்வி.

இலங்கையின் குருதி படிந்த இனப் படுகொலையை அந்த ஆட்சிக்கு வெளியே அதன் அதிகார வரம்பிலிருந்து வெளியே இழுத்து சர்வதேச அரங்கிற்குக் கொண்டு வருவதைத் தவிர வேறு வழி இல்லை என்பதே எதார்த்தம். மக்கள் கவிஞர் இன்குலாப் ஒரு கவிதையில் கூறியதுபோல் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைப் பூச்சிகளிடமிருந்து இரத்த தானம் கேட்க முடியாது!

இந்தப் பின்னணியில் அய்.நா.வின் மனித உரிமைக் குழுவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவின் தீர்மானத்தைப் பார்க்க வேண்டும். இனப்படுகொலையை 'உள்நாட்டுப் பிரச்சனை'யாகவே மூடி மறைத்து விடலாம் என்று மனப்பால் கொண்டிருந்த இலங்கை அரசு இப்போது அதிர்ச்சி அடைந்து நிற்கிறது. "அதிபர் ராஜபக்சேயையும் அவரது சகோதரர் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபய ராஜபக்சேயையும் குறி வைத்தே இத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது" என்று அலறுகிறார் இலங்கை இராணுவ தளபதி ஜெயசூரியா.

2009 ஆம் ஆண்டு போர் முடிந்தவுடன் இதேபோல் இலங்கை அரசுக்கு எதிராக அய்ரோப்பிய நாடுகள் தீர்மானம் கொண்டுவந்தபோது அதை இந்திய ஆதரவுடன் மிக எளிதாக இலங்கையால் முறியடிக்க முடிந்தது. அந்தச் சூழல் இப்போது இல்லை.

டப்ளின் தீர்ப்பாயம் - அய்.நா. மூவர் குழு அறிக்கையைத் தொடர்ந்து சேனல் 4 தொலைக்காட்சி இலங்கையில் இறுதிப் போரில் நடந்த போர்க் குற்றங்களை தொடர்ந்து அம்பலப்படுத்தியது. இவை அனைத்தும் சர்வதேச விவாதங்களையே தவிர்த்து விடலாம் என்ற சிறீலங்காவின் கனவை தகர்த்துவிட்டது.

அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானம், இலங்கையின் விசாரணை ஆணைய அறிக்கையை இலங்கை அரசே நிறைவேற்ற வேண்டும் என்பதுதான், சர்வதேச சுதந்திரமான விசாரணையை அது வலியுறுத்தவில்லை. முதலில் அமெரிக்கா அறிமுகப்படுத்திய தீர்மானத்தின் நகல், பிறகு மேலும் மென்மையாக்கப்பட்டது. ஆனாலும், இலங்கை அய்.நா.வின் ஆலோசனை தொழில்நுட்ப உதவிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் இலங்கை அரசு மேற்கொள்ளவிருக்கும் தமிழர் நலன் - உரிமை தொடர்பான செயல்பாடுகளை அய்.நா. மனித உரிமைக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதுபற்றி அய்.நா. மனித உரிமைக் குழு தனது கருத்தை 20வது அய்.நா. கூட்டத் தொடரில் முன் வைக்க வேண்டும் என்றும் தீர்மானம் கூறுவதை இலங்கையால் செரிமானம் செய்ய முடியவில்லை. இதை மேலும் மென்மையாக்கவே இப்போது இந்தியா தீவிரம் காட்டுகிறது. முதன்முறையாக இலங்கையின் எதேச்சதிகார நடவடிக்கைகளுக்கு இதன் வழியாக அய்.நா. தனது பிடியை இறுக்கத் தொடங்கியிருக்கிறது என்பதே இலங்கை அரசின் அச்சம்.

இந்தத் தீர்மானம், இலங்கை அரசுக்கே சாதகமானது என்ற ஒரு கருத்தை ஈழ விடுதலை ஆதரவாளர்கள் சிலரால் முன் வைக்கப்படுகிறது.

தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்த தீர்மானத்தை இது பிரதிபலிக்கவில்லை என்பது அவர்கள் வாதம். தீர்மானத்தின் உள்ளடக்கத்தை ஆய்வுக்கு உட்படுத்தி கருத்து தெரிவிப்பதில் தவறில்லை; அத்தகைய பார்வை அவசியமானதுதான். ஆனால், தீர்மானமே பயனற்றது; தோற்றே போகட்டும்; இந்தியாவின் ஆதரவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு தமிழ் ஈழ ஆதரவாளர்கள் வந்து விட முடியுமா என்பதுதான் கேள்வி. ஈழத் தமிழர்கள் விடுதலைக்கு எதிராக தொடர்ந்து விஷம் கக்கி வரும் 'துக்ளக்' சோ பார்ப்பனர், ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில், இந்தத் தீர்மானம் பயனற்றது என்றே கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ். நடத்தும் 'ஆர்கனைசர்' ஏடும் சுப்ரமணியசாமியும் அமெரிக்க தீர்மானத்தை எதிர்க்கிறார்கள்.

**சர்வதேச விசாரணை வந்தாக வேண்டும். அதற்கு முன் சர்வதேச விவாதம் வரும் வாய்ப்புகளை நாம் பயன்படுத்த வேண்டுமா? இல்லையா?** 'இடி பாடுகள்' - 'இழுபறிகளுக்குள்' சிக்கி சிக்கித்தான் தேசிய இனங்களின் பிரச்சனைகள் நேர்மையற்ற ஏகாதிபத்திய உலக அமைப்பில் பயணிக்க வேண்டியது தவிர்க்க இயலாதாகிவிட்டது. இந்தியா அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிப்பதில் உறுதி காட்டுமா? உறுதியான முடிவுக்கு வர முடியவில்லை. இதுவே இதை எழுதும்போது உள்ள நிலை. சர்வதேச விவாதம் ஒன்று வருவதையே இலங்கை அரசும் அவரது ஊதுகுழல்கள் எடுபிடிகளும் தவிர்த்துவிட துடிக்கிறார்கள்.

மன்மோகன் சிங்கின் நாடாளுமன்ற பேச்சு இலங்கைக்கு ஆதரவான இந்தியாவின் நிலைப்பாட்டையே மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்பது மட்டும் உண்மை.

இது தமிழகத்தில் எழுந்த ஒன்றுபட்ட அழுத்தத்துக்குக் கிடைத்த வெற்றி. அமெரிக்க தீர்மானம் தோற்றாலும் வென்றாலும் ஈழத் தமிழர் பிரச்சனை சர்வதேச தளத்துக்கு நகர்த்தப்பட்டுவிட்டதை இனி தடுத்து நிறுத்த முடியாது.

**– இரா**

## நன்கொடை

### ஜே. சுதாகர் – ஆர். ரம்யா காமாட்சி வாழ்க்கை ஒப்பந்த விழா

திருவாரூர் மாவட்டம், பள்ளிவர்த்தி கிராமத்தைச் சேர்ந்த ஜே. சுதாகர் - ஆர். ரம்யா காமாட்சியின் வாழ்க்கை ஒப்பந்தம், சென்னை பதிவாளர் அலுவலகத்தில் பிப்.9 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது. தென்சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி மற்றும் தோழர்கள் உடனிருந்தனர். கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது.

### அமுதினி முதலாம் ஆண்டு பிறந்த நாள்

திருப்பூர் கழகத் தோழர் அகிலன்-சரண்யா இணையரின் மகள் அமுதினி முதலாம் ஆண்டு பிறந்த நாளை (29.3.2012) யொட்டி 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு ரூ.1500 நன்கொடையாக வழங்கப்பட்டது.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆர்.).

## அய்.நா. அலுவலகம் முன் தமிழர்களைத் தாக்கிய சிங்கள குண்டர்கள்

ஜெனிவாவில் நடக்கும் அய்.நா. கூட்டத்தில் பங்கேற்று வரும் மக்கள் உரிமை கண்காணிப்பக இயக்குனர் ஹென்றி டிஃபேன் ஜூனியர் விகடன் ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து:

"இலங்கை விவகாரத்தைப் பேசுவதற்காக ஒரு தனி அமர்வு இருந்தது. இலங்கையில் இருந்து வந்திருந்த மனித உரிமையாளர்கள் சுனிலா, நிமல்கா ஃபெர்னாண்டோ ஆகியோர் இலங்கையில் இறுதிக் கட்டப் போரின்போது நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்துப் பேசினார்கள். அமர்வுக்கு நேரில் வர முடியாத சரவணமுத்து என்பவர் 'ஸ்கைப்' மூலமாகப் பேசினார். அதே சமயம், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கக் கோரி ஐரோப்பாவைச் சார்ந்த தமிழ்ச் சமுதாயத்தினர் சுமார் 5000 பேர் மாநாட்டு அரங்குக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இலங்கை அரசும் அங்கே தனியாக ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தது. இதற்காக, இலங்கையில் இருந்து 126 பேரை அவர்களே அழைத்து வந்து இருந்தார்கள். இவர்கள் தவிர, அடியாட்களையும் அனுப்பி இருந்தது இலங்கை அரசு. கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த தமிழ் ஆர்வலர்கள், அந்த அடியாட்களால் தடுத்து விரட்டப்பட்ட சம்பவங்களும் நடந்தன. இலங்கைக்கான ஜெனீவா தூதர் தலையிட்ட பிறகே தாக்குதல் நிறுத்தப்பட்டது. அமர்வு தொடங்கியதுமே ஐ.நா.வுக்கான மனித உரிமை கவுன்சிலின் தலைவர், 'நேற்று நடந்த சம்பவங்கள் ஐ.நா. மன்றத்தையே அவமதிக்கக் கூடியது. அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். இனிமேல், இதுபோன்று நடக்காது' என்று வருத்தம் தெரிவித்தார்.

**– ஜீனியர் விகடன் 21.3.2012**

## திருவான்மியூரில் சுயமரியாதை சுடரொளிகள் படத்திறப்பு


குத்தூசி குருசாமி - குருவிக்கரம்பை வேலு சுயமரி யாதைப் பேரவை சார்பில் 1.4.2012 காலை 10 மணியளவில் திருவான்மியூரில் (பி.டி.இராபர்ட் இல்லம், 132 வால்மீகி தெரு, இரண்டாம் தளம்) சுயமரியாதை சுடரொளிகள் நாள் கருத்தரங்கு நடைபெறுகிறது. குத்தூசி குருசாமி, குருவிக்கரம்பை வேலு, சென்னை தே.மு.சண்முகம், த. லோகநாதன் படங்களை முறையே கவிஞர் தமிழேந்தி, முனைவர் வளர்மதி, ம.அருள்முகம், மருத்துவர் சவுந்தர பாண்டியன் திறந்து வைத்து உரையாற்றுகிறார்கள்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th March 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மார்ச் 29, 2012 | புரட்சி 11 | முழக்கம் 11 | விலை: ரூ.2.50


## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

# திராவிடர் இயக்க நூற்றாண்டில் சாதியக் கட்டமைப்புகளை எதிர்த்து கழகம் களமிறங்குகிறது

*இரட்டைக் குவளை, இரட்டை சுடுகாடு போன்று இரட்டை வாழ்விடங்களாக பிரிந்து கிடக்கும் 'ஊர் – சேரி'ப் பிளவுக்கு எதிராக கழகம் கள இறங்குகிறது. இது குறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை:*

திராவிட இயக்க நூற்றாண்டில் சாதியக் கட்டமைப்புகளுக்கு எதிரான பெரியார் திராவிடர் கழகம் பரப்புரைப் பயணம்.

"... நம்மவர்கள் தங்களுக்கு சூத்திரப் பட்டமும், தீண்டாதார், பஞ்சமர் என்கிற பட்டமும் வேறு யாராலோ கொடுக்கப்பட்டதாய் கருதி மற்றவர் பேரில் கோபப்படுவது வடிகட்டின அறிவீனமே யாகும். ஏனெனில் எவன் ஒருவன் தன்னை இந்து என்று சொல்லிக் கொள்ளுகின்றானோ அவனெல் லாம் சூத்திரப் பட்டமும், பஞ்சமப் பட்டமும் தானே எடுத்து தன் தலையில் சூட்டிக் கொண்டு திரிகின்றவனாவானே தவிர வேறில்லை.

இந்தியாவில் இந்துமதம் உள்ளவரை சூத்திரனும், பஞ்சமனும் ஒரு நாளும் மறைந்து போக மாட்டார்கள். அதுபோலவே இந்துமத வேதமும், சாஸ்திரமும், இராமாயண பாரதமும், பெரிய புராணம், சிவபுராணம், திருவிளையாடல் புராணம் முதலியவைகளும் உள்ள வரையில் சூத்திரப் பட்டத்தையும், பஞ்சமப் பட்டத்தையும் ஒழித்து விடுவது என்பது முடியவே முடியாது..." - பெரியார், 'குடிஅரசு' 25.10.1931

சாதி அடிப்படையில் மனிதர்களை இழிவுக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்கி, உரிமைகளைப் பறிக்கும் தீண்டாமைக் கொடுமைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உயிர்த் துடிப்போடு செயல் பட்டுக் கொண்டிருப்பதை சான்றுகளுடன் பட்டிய லிட்டு பல போராட்டங்களை நாம் முன்னெடுத் துள்ளோம்.

முதல் கட்டமாக திண்டுக்கல் மாவட்டத்தில் இரட்டைக் குவளை மற்றும் தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்து 2007 ஆம் ஆண்டு அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 அன்று பரப்புரைப் பயணத்தைத் தொடங்கினோம். சாதி ஆதிக்க வாதிகளால் தாக்கப்பட்டோம்.

இரட்டைக் குவளை மற்றும் தீண்டாமைக் கொடுமைகளால் அதிகமாகப் பாதிக்கப்பட்டு வரும் தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் 80 கிராமங் களில் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பரப்பரைப் பயணத்தை நடத்தினோம். தேநீர்க் கடைகளில் 'இரட்டைக் குவளைகளை உடைப் போம்' என்ற முழக்கத்துடன் களமிறங்கிய பெரியார் திராவிடர் கழகம் இரட்டைக் குவளைகளை வைத்திருந்த கடைகளின் பட்டியலைத் தயாரித்து கழக ஏடான "பெரியார் முழக்க"த்தில் வெளியிட்டு அரசின் கவனத்திற்குக் கொண்டுச் சென்றது. காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் நாள் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இரட்டைக குவளைகள் இருந்த கடைகள் முற்றுகையிடப்பட்டன. நூற்றுக்கணக்கான தோழர்கள் கைதானார்கள்.

1957 ஆம் ஆண்டு பெரியாரின் ஆணைப்படி சாதியை ஒழிக்க அரசியல் சட்டத்தையே கொளுத்தி 10000க்கும் மேற்பட்ட தோழர்கள் கைதாகிய நாளான நவம்பர் 26 ஆம் நாளில் 2007 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத் தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கிராமம் கிராமமாக நுழைந்து இரட்டைக் குவளைகளை உடைத்தெறிந்தனர். நூற்றுக்கணக்கான தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

நம்பியூரில் தாழ்த்தப்பட்டோருக்கு திருமண மண்டபங்களில் அனுமதி மறுக்கப்படுவதை எதிர்த்து களம் கண்டு வெற்றிப் பெற்றோம். கோவையில் அஞ்சல் நிலையத் தீண்டாமையை எதிர்த்து களமிறங்கிப் போராடினோம்.

திருச்சியில் கிறிஸ்தவர்களின் இரட்டைச் சுடுகாட்டையும், தமிழ்நாடு முழுவதும் அரசே கட்டியிருக்கும் இரட்டைச் சுடுகாடுகளையும் எதிர்த்து 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாளில் இருந்துமே 14 ஆம் நாள் வரை ஜாதி - தீண்டாமைக்கு எதிராக ஒரு மாத பரப்புரைப் பயணத்தை நடத்தினோம். இரட்டைச் சுடுகாடுகள் போன்ற பல தீண்டாமைக் கொடுமைகள் பற்றி விரிவான தகவல்களைக் கொடுத்தும் செயல்படாத தீண்டாமை ஒழிப்புக் காவல் துறை அலுவலகத்தை இழுத்து மூடும் போராட்டத்தை 2010 அக்டோபர் 2 ஆம் நாள் திருச்சியில் நடத்தினோம்.

இரட்டைக் குவளைகள் - இரட்டைச் சுடுகாடு கள் - தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்க மறுக்கும் மண்டபங்கள் - கோவில்கள் - முடிதிருத்தகங்கள் - உணவகங்கள் என ஆய்வுக் குழுக்கள் அமைத்து தேடித் தேடிக் கண்டுபிடிக்கப்பட்ட தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்து இதுவரை போராடி னோம். இந்த ஆண்டில், தேடி அலைய வேண்டிய அவசியமோ, புலனாய்வுக் குழுக்கள் அமைத்து நிரு பிக்க வேண்டிய தேவையோ இல்லாமல் தமிழ்நாட் டின் அனைத்து கிராமங்களிலும் நீங்காமல் நிலவி வரும் ஊர் - சேரி என்ற இரட்டை வாழ்விடத் தீண் டாமையை எதிர்த்தும் - அனைத்து வகையான சாதியக் கட்டமைப்புகளை எதிர்த்தும் களமிறங்க உள்ளோம்.

தமிழ்ப் பேரரசன் என்று புகழப்படும் இராஜராஜ சோழன் காலத்தில்தான் தமிழ்நாட்டில் ஊர் - சேரி என்ற இரட்டை வாழ்விடங்கள் உறுதியாக்கப்பட்ட தாக வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். அந்த இராஜராஜன் காலத்திற்குப் பிறகு எத்தனையோ தமிழ் மன்னர்களும், தெலுங்கு மன்னர்களும், இஸ்லாமிய மன்னர்களும், பிரிட்டிஷ், பிரெஞ்சு மன்னர்களும் இந்த நாட்டை ஆண்டிருந்தாலும் சேரித் தீண்டாமையை அகற்ற யாரும் முன்வரவில்லை.

மிக மிகப் பழைமையான - கிராமப் பாரம்பரியம், கிராமப் பண்பாடு என்று சொல்லத்தக்க அளவில் உள்ள சேரித் தீண்டாமையும், இன்னும் பல்வேறு தீண்டாமைக் கொடுமைகளும், இன்று வரை சராசரி மனிதனையோ, மனித உரிமையில் அக்கறையுள்ள எவரையுமோ கூனிக் குறுக வைக்கவில்லை. முற்போக்கு சிந்தனையாளர்களிடமேகூட செயல் அளவில் இல்லாவிட்டாலும் மனதளவில்கூட இது ஒரு பெருங் குற்றம் என்ற எண்ணம் இல்லை.

இந்தச் சூழலில் இந்து மதத்தாலும், மனுதர்மத்தாலும், சாஸ்திர - சம்பிரதாயங்களாலும் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களிடம் இந்த தீண்டாமைக் கொடுமைகளைத் தமது பண்பாடாக, கடைபிடிக்க வேண்டிய சம்பிரதாயமாக, வாழ்வியல் நெறியாக, சாதாரண இயல்பான விஷயமாக கருதிக் கொண்டுள்ள மக்களிடம் ஊர் - சேரி என்ற இரட்டை வாழ்விடத் தீண்டாமையையும், இரட்டைக் குவளைகள் - இரட்டைச் சுடுகாடுகள் - இரட்டை வழிபாட்டிடங்கள் - இரட்டை உணவகங்கள் என அனைத்து வகையான தீண்டாமைக் கொடுமைகளுக்கும் காரணம் என்ன? அகற்ற வேண்டிய அவசியம் என்ன? அழிக்கும் வழி என்ன? என்பவற்றை விரிவாக விளக்க பெரியார் திராவிடர் கழகம் பயணத்தைத் தொடங்குகிறது.

தமிழர் சமுதாய முன்னேற்றத்திற்காக திராவிடர் இயக்கம் ஆற்றிய பெரும் பணிகளை இளந்தலை முறையினருக்கு அறிமுகப்படுத்த வேண்டிய சூழலில், திராவிடர் இயக்க நூற்றாண்டில், திராவிட இயக் கங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை நோக்கியும் புறப்படுகிறது பெரியார் திராவிடர் கழகம்.

சாதி எதிர்ப்புக் களத்தில் தன் உயிரை ஈந்த மாவீரன் இம்மானுவேல் சேகரன் நினைவிடத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த ஏப்ரல் 14 ஆம் நாளில் பெரியாரின் பணி தொடங்குகிறது. சாதி எதிர்ப்புப் போராளி மேலவளவு முருகேசன் நினை விடம் வழியாக, சாதிப் போராளி செகுடந்தாளி முருகேசன் நினைவிடத்தில் புரட்சிக் கவிஞர் பிறந்த ஏப்ரல் 29 ஆம் நாளில் பயணம் நிறைவடைகிறது.

பெரியார் 1922 ஆம் ஆண்டில் "மனுதர்ம சாஸ்தி ரத்தையும், இராமாயணத்தையும் எரிக்க வேண்டும்" என்று முழங்கிய திருப்பூரில் பயணத்தின் நோக் கத்தை விளக்கியும், தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுவதற்கு அரசு ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் பயணத்தின் இறுதி நாளில் முடிவுகளை எடுப்போம்; பயணம் வெற்றிப் பெற கழகத் தோழர்கள் முனைந்து ஏற்பாடுகள் செய்து பயணக் குழுவினருக்கான

**(4 ஆம் பக்கம்)**

**(பயணத் திட்டம் 4 ஆம் பக்கம்)**

## விஞ்ஞானிகள்-உயரதிகாரிகள் அணுஉலை தடை கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு

*2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட அணு விபத்து இழப்பீட்டுச் சட்டம் அரசியல் சட்டத்துக்கு எதிராக இருப்பதால் அச்சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றும், அதுவரை, புதிய அணுஉலைகள் தொடங்க தடைவிதிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றத்தில் விஞ்ஞானிகள், உயர் பதவிகளில் இருந்த அதிகாரிகள் பொது நலன் வழக்கை தொடர்ந்துள்ளனர். உச்சநீதிமன்றம் கடந்த வாரம் வழக்கை விசாரணைக்கு அனுமதித்து விளக்கம் கேட்டு மத்திய அரசுக்கும் அணுசக்தி தொடர்பான அமைப்புகளுக்கும் தாக்கீது பிறப்பித்துள்ளது.*

*'பொது நலன்' அமைப்பின் இயக்குனர், 'பொது நல வழக்கு மய்ய'த்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஈ.ஏ.எஸ்.சர்மா (எரிசக்தித் துறை முன்னாள் செயலாளர்), டி.எஸ்.ஆர். சுப்ரமணியன் (முன்னாள் மத்திய அமைச்சரவை செயலாளர்), பேராசிரியர் டி.சிவாஜிராவ் (ஆந்திர மாநில மாசு கட்டுப்பாடு வாரிய முன்னாள் உறுப்பினர்), என்.கோபால்சாமி (முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர்), கே.ஆர்.வேணுகோபால் (பிரதமரின் முன்னாள் செயலர்), டாக்டர் பி.எம்.பார்கவா (தேசிய அறிவுசார் ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர்), அட்மிரல் லக்ஷ்மிநாராயணன் இராமதாசு (முன்னாள் கடற்படை தளபதி), சுர்ஜித் தாஸ் (உத்தரகாண்ட் மாநில முன்னாள் தலைமை செயலாளர்), டாக்டர் பி. விஷ்ணுகாமத் (பெங்களூர் பல்கலை வேதியல் பேராசிரியர்), டாக்டர் கே. பாபுராவ் (வேதிய தொழில்நுட்ப நிறுவன மூத்த விஞ்ஞானி), பேராசிரியர் என்.வேணுகோபால்ராவ் (முன்னாள் ஆந்திர விவசாய பல்கலை பேராசிரியர்), டாக்டர் என்.பாஸ்கர்ராவ் (ஊடக ஆய்வு மய்ய நிறுவனர்), எஸ்.கே. கவுசுபாட்சா (ஆந்திர விஞ்ஞான கழகம்) ஆகியோர் இணைந்த இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.*

தலையங்கம்

# அய்.நா. தீர்மானத்துக்குப் பிறகு....

அய்.நா. மனித உரிமைக் குழுவில் அமெரிக்கா-இலங்கைக்கு எதிராக கொண்டு வந்த தீர்மானம், மார்ச் 22 ஆம் தேதி ஓட்டெடுப்பு வழியாக நிறைவேறிவிட்டது. தீர்மானத்தை ஆதரித்து 24 நாடுகளும், எதிராக 15 நாடுகளும் வாக்களித்தன. 8 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்து நடுநிலை வகித்தன. இறுதிக் கடடத்தில் தீர்மானத்தை ஆதரிக்க முன்வந்த இந்தியா தீர்மானத்தின் நகலை திருத்த வேண்டும் என்று நிபந்தனை விதித்தது. அதன்படி தீர்மானத்தில் இலங்கை மீது சர்வதேசப் பிடிக்கு ஓரளவு வழிகுத்த வாசகங்கள் அகற்றப்பட்டன. இலங்கை அரசு தமிழர் பிரச்சனை தீர்வுக்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனித உரிமைக் கவுன்சிலுக்கு அவ்வப்போது தெரிவிக்க வேண்டும்; இலங்கை அரசே நியமித்த பாடம் கற்றல் மற்றும் நல்லிணக்க விசாரணை அறிக்கையின் போதாமையை சரி செய்து முழுமையான அறிக்கையாக்குவதற்கு அய்.நா.வின் ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை இலங்கைப் பெற வேண்டும் என்ற வாசகங்கள் தீர்மானத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. இந்தப் பிரச்சனைகளில் இலங்கை அரசின் சம்மதம், விருப்பம் இருந்தால் மட்டுமே, ய்.நா. தலையிட முடியும் என்று தீர்மான வாசகங்கள் மாற்றப்பட்டுவிட்டன. இதைக்கூட ஏற்க மறுத்த இலங்கை அரசு, தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கு "சாபம்" விடுவதுபோல் கருத்து தெரிவித்தது. உடனடியாக இந்தியாவின் பிரதமர் மன்மோகன்சிங் ராஜபக்சேவுக்கு கடிதம் எழுதி, தன்னிலை விளக்கம் அளித்துள்ளார்.

"அய். நா. கூட்டத்தில் (இலங்கைக்கு) சாதகமான வழிகாட்டும் முறைகளைப் பின்பற்றுமாறு, தங்களின் (ராஜபக்சே) கடிதம் கிடைத்த பிறகு, நான் (மன்மோகன்) அய்.நா. இந்திய பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தியிருந்தேன். அப்படி சாதகமான வழியைப் பின்பற்றும் எந்த வாய்ப்பையும் இந்தியா தவறவிடவில்லை என்பதை தாங்கள் அறிவீர்கள். அதன்படி, தீர்மானங்களில் இரு பக்கத்துக்கும் சமநிலையான தன்மையை புகுத்தியதை தாங்கள் அறிவீர்கள்" என்று எழுதி தீர்மானத்தை மாற்றியமைத்ததற்கு இந்தியாவே காரணம் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். அத்துடன் அத் தீர்மானத்தை இந்தியா எதிர்த்ததால் இலங்கையுடன் கொண்டுள்ள உறவு பாதிக்காது என்றும், போருக்குப் பிறகு தமிழர் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மிகச் சிறப்பாக நடந்து வருகிறது என்றும், இலங்கை அரசுக்கு நற்சான்றிதழும் வழங்கி விட்டார். இப்படியெல்லாம் சுற்றி வளைத்து வார்த்தைகளைத் தேடி அலைவதைவிட 'தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தமைக்கு இந்தியாவின் மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன்' என்றே மன்மோகன் சிங் வெளிப்படையாக எழுதியிருக்கலாம்.

உலகின் மனசாட்சியையே உலுக்கிவிடும் இனப்படுகொலைகளையும், போர்க்குற்றங்களையும் செய்து முடித்த கொடுமைகளைவிட இலங்கையின் நல்லுறவு பாதித்துவிடக் கூடாதே என்ற கவலைதான் பிரதமருக்கு மேலோங்கி நிற்கிறது. தமது ஆட்சியின் கீழ் ஒரு தேசிய இனமாக உள்ள தமிழர்களின் ஒருமித்த குரலை உணர்வைக்கூட மதிக்காமல், இராஜபக்சேயை 'தாஜா' செய்ய இந்தியாவின் பிரதமர் துடிப்பது, இந்தியாவின் மாண்புக்கு (அப்படி ஒன்று இருந்தால்) பெரும் அவமானமாகும். இந்தியாவின் தீர்மான ஆதரவு வெறும் கண் துடைப்புதான் என்று மன்மோகன் சிங் கூறுகிறாரா என்று கேட்க விரும்புகிறோம்.

தீர்மானத்துக்குப் பிறகு அமெரிக்க செனட்டில் இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பான விசாரணை அறிக்கைகள் விவாதிக்கப்பட இருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் நகல் வலுவற்றதாக இருந்தாலும் அரசின் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் சர்வதேச கவனத்துக்கு வந்து விட்டன என்பதுதான் இதில் முக்கியம். இலங்கை அரசு என்னதான் குற்றங்களை மறைக்க முயன்றாலும் சர்வதேச தலையீட்டை இனியும் தடுத்து நிறுத்த முடியாது என்ற எதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை அரசு மட்டுமல்ல, இந்தியாவும் தொடர்ந்து இலங்கையைக் காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டால், அதன் விளைவுகள் மோசமாகிவிடும். ஏதோ தமிழகத்தில் உருவான அழுத்தம் காரணமாக ஆதரவாக வாக்களித்தோம்; அத்துடன் முடிந்துவிட்டது என்று மன்மோகன் ஆட்சி கருதிடக் கூடாது. இந்த அழுத்தத்தின் பின்னால் உள்ள உணர்வுகளை புறந்தள்ளுவது தமிழக உணர்வுகளை அவமதிப்பதாகும் என்று எச்சரிக்கிறோம்.

முதலில், தமிழர் பகுதிகளில் இராணுவத்தின் ஆட்சியை விலக்கிக் கொள்வதற்கு இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும். அம்மக்கள் ஒவ்வொரு நாளும் அச்சத்தின் பிடியில் உழல்வதிலிருந்து விடுவிக்க வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட 90000 பெண்கள், கணவர்களை இழந்து விட்டார்கள். இவர்களில் பெரும்பாலோர் இளம் பெண்கள். இந்த சூழ்நிலையில் தமிழர் பகுதியில் நிர்வகத்தையே இராணுவம் நடத்துவதால், இந்தப்பெண்கள் கடும் நெருக்கடிகளை பாலுறவு வன்முறைகளை சந்திக்க வேண்டியிருக்கிறது. போருக்குப் பிறகு சட்டவிரோத கைதுகள் சித்திரவதைகள் தொடருவதை சர்வதேச மனித உரிமைகள் கழகம் (ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்) கடந்த 13 ஆம் தேதி அய்.நா.வில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் விரிவாகப் பதிவு செய்துள்ளது.

இலங்கை அரசு தமிழர்கள் பிரச்சினைக்கு உரிய தீர்வுகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன் வராவிட்டால் இத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த நாடுகள் அடுத்தகட்ட நகர்வுகளை மேற்கொள்வது கட்டாயமாகிவிடும். இந்தியா தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்ததால் ஆசிய நாடுகளின் "நெருப்பு வளையத்துக்குள்" இருப்பதாகவும் ஆசிய நாடுகள் அனைத்தும் இலங்கையைத்தான் ஆதரிக்கின்றன என்றும் உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் பேசியிருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.

இந்தியா இத் தீர்மானத்தை ஆதரிப்பதில் உண்மையாகவும் உறுதியாகவும் இருந்திருக்குமானால், ஆசிய நாடுகளின் ஆதரவைத் திரட்டியிருக்கலாம். அப்போது பல ஆசிய நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருக்கும் என்பது சர்வதேச அரசியலை குறிப்பாக ஆசிய புவிசார் அரசியலை அவதானிக்கும் அனைருக்குமே தெரியும். சொந்த நாட்டில் ஒரு தேசிய இனமாக உள்ள தமிழர்களின் ஒருமித்த உணர்வுகளைவிட ஆசியப் பகுதி அரசியலுக்கே இந்தியா முன்னுரிமை தருவது முக்கியம் என்றால் அப்படிப்பட்ட ஒரு இந்தியாவின் கீழ் தமிழர்கள் ஏன் ஒரு தேசிய இனமாக உழன்று கொண்டிருக்க வேண்டும் என்ற கேள்விதான் வெடித்துக் கிளம்பும். ப. சிதம்பரம் உள்துறை அமைச்சர் பதவி அதிகாரத்தில் கொலு வீற்றிருப்பதற்குக் காரணம் தமிழர்களே தவிர, இந்தியாவுக்கான ஆசிய அரசியல் மய்யம் அல்ல என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். பிரிட்டனிலே சீக்கியர் தலைப்பாகைக்கு தடை என்றால், கண்டனம் தெரிவிக்கும் மன்மோகன் சிங், தமிழர்களின் உரிமைக்கான உணர்வுகளை இப்படி எல்லாம் அலட்சியப்படுத்துவதை தமிழர்கள் மன்னிக்க மாட்டார்கள்.

## திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (4)

# பகுத்தறிவும் – ஆன்மீகமும் கைகோர்த்தது!

**1916** திராவிடர் சங்கத்தின் சாதனைகளில் ஒன்று, டாக்டர் நடேசனார் அவர்களின் பெருமுயற்சியால், பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு என அமைக்கப்பட்ட திராவிடர் இல்லம் எனும் விடுதியாகும். வெளியூரிலிருந்து சென்னைக்கு வந்து பட்டப் படிப்புப் படிக்க வரும் பார்ப்பனரல்லாத மாணவர்கள் உணவுக்கும் தங்குவதற்கும் விடுதி வசதியின்றி இடையூறுகளுக்கு ஆளாயினர். பார்ப்பன விடுதிகளில் இவர்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. எனவே, இவர்களின் நலன் காக்கும் பொருட்டு திராவிடர் இல்லம் எனும் விடுதியானது, ஜூலை மாதத்தில், திருவல்லிக்கேணி அக்பர் சாய்பு தெருவிலுள்ள விசாலமான கட்டடத்தில் நடேசனாரின் திறமையான நிர்வாகத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இந்த விடுதியானது வெளியூரிலிருந்து படிக்க வரும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு நல்லதொரு புகலிடமாக அமைந்தது.

பார்ப்பனரல்லாத தலைவர்களான நாயரும், தியாகராயரும் ஒருவருக்கொருவர் மன வேற்றுமைக்கு உட்பட்டிருந்தது வலிமை யுடன் கூடிய பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றுவதற்குத் தடையாக இருந்தது என்றே சொல்லலாம். இவர்கள் இருவரும் மனக்கசப்புக்கு ஆளானதற்குக் காரணமான, (சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த) பழைய சம்பவம் ஒன்று உண்டு. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் எதிரில் உள்ள தெப்பக்குளம் அசுத்தமாகி, நோய் பரப்பும் இடமாக இருந்து வந்ததால் அதனை மண்கொட்டி மூடி அங்கோர் பூங்காவை நிறுவலாம் என்று நாயர், சென்னை நகராட்சியில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். வைதீக நெறியில் ஆழ்ந்த பற்றுள்ள தியாகராயர் அதிர்ச்சியுடன் வெகுண்டு, நாயரை எதிர்த்துச் சாடியதோடு தீர்மானத்தைத் தோல்வியுறச் செய்தார். பகுத்தறிவுவாதியான நாயரும், தியாகராயரும் அன்று முதல் கீரியும் பாம்புமாக மாறினார்கள்.

பார்ப்பனரல்லாதார்இயக்க நலன் கருதி இவர்கள் இருவரையும் ஒன்று சேர்க்க நடேசனார் பெரிதும் முயன்று வந்தார். இதற்கிடை யில் பார்ப்பனியத்தின் நயவஞ்சகம், ஆணவம் ஆகியவற்றின் நேரடித் தாக்குதலுக்கு இவ்விரு தலைவர்களும் ஆளாக தேர்ந்த நிகழ்ச்சிகள் அவ்விருவரையும் எதிர்பாரா வகையில் ஒன்று சேர்த்தது! இவ்வாண்டு சென்னை சட்டசபையிலிருந்து ஒருவரை டில்லி சட்டசபைக்கு அனுப்ப வேண்டிய தேர்தல் வந்தது. நாயர் வேட்பாளராக நின்றார். பெரும்பான்மையாகவிருந்த பார்ப்பன உறுப்பினர்கள், கடைசி நேரம் வரை நாயரையே ஆதரிப்பதாக நடித்து, தேர்தலின்போது இவரை எதிர்த்து நின்ற வி.எஸ். சீனுவாச சாஸ்திரி என்ற பார்ப்பனரின் பெயரை முன் மொழிந்து தேர்ந்தெடுத்து, நாயரைத் தோற்கடித்தனர். பார்ப்பன சுயசாதிப் பற்றின் ஆழத்தையும் அகலத்தையும் எடைபோட அது ஓர் அரிய வாய்ப்பாக அவருக்கு அமைந்தது.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் கும்பாபிஷேகத்திற்கு மற்றெல்லாரையும்விட அதிகத் தொகையாகிய ரூ.10 ஆயிரம் நன்கொடையாக அளித்த தியாகராயரை, கும்பாபிஷேக விழாவுக்குச் சென்றபோது மேடையில் உட்கார வைக்காமல், கீழே உட்கார வைத் தார்கள். இவரின் அலுவலகத்தில் பணி புரியும் சிப்பந்திப் பார்ப்பனர் உட்பட பார்ப்பன ஜட்ஜுகள், அதிகாரிகள் மேடையில் இருக்க, தன்னை அலட்சியப்படுத்திய பார்ப்பன சாதித் திமிரை சகிக்க முடியாத தியாகராயர் அந்த இடத்தை விட்டு அகன்று நேரே நாயரின் பங்களா வுக்குக் காரை விடச் சொன்னார். டிரைவருக்கோ, ஆச்சரியம்! கீரியும் பாம்புமாக இருந்த இருபெரும் மேதைகளும், கட்டித் தழுவினர்! கண்ணீர் வடித்தனர்! பார்ப்பன எத்தர்களின் போக்குக்குச் சாவுமணி அடிப்பதைத் தவிர இனி வேறு பணியில்லை என்று முடிவு செய்தனர். திட்டம் தீட்டினர். நடேசனார் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கலானார்.

**(தொடரும்)**

**கழக வெளியீடான**

**'திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம்' நூலிலிருந்து**

## தூது போனாரா 'துக்ளக்' சோ?

தமிழக அரசு கூடங்குளம் விவகாரத்தில் இப்படியொரு முடிவை அறிவித்ததில், பத்திரிகையாளர் சோவின் பங்கும் உண்டு என்கிறார்கள். இந்த அணு உலையை இயங்க வைப்பதையே தனது ஒரே பணியாகக் கொண்டு சுழன்று வந்த பிரதமர் அலுவலக இணை அமைச்சர் நாராயணசாமி, தனது கடைசி அஸ்திரமாக சோவைத்தான் நம்பினாராம். இது சம்பந்தமாக அமைச்சரின் பிரதிநிதிகள் சோவைச் சந்தித்திருக்கிறார்கள். அதன் பின்னரே அரசின் நடவடிக்கையில் விறுவிறு மாற்றங்கள் ஏற்பட்டதாம்.

– 'குமுதம் ரிப்போர்ட்டர்' 29.3.2012

## போராட்டத்தில் கழகத் தோழர்கள்

நெல்லையில் நடைபெற்ற இடிந்தகரை நோக்கிய பயணத்தில் பங்கேற்க தமிழகம் முழுதுமிருந்தும் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் ஏராளமாக பங்கேற்றனர். பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், கோவை தோழர்களோடு கலந்து கொண்டார். சென்னையிலிருந்து 90 கழகத் தோழர்கள் இரயில் மூலமாக நெல்லைக்குச் சென்று போராட்டத்தில் பங்கேற்றனர்.

## ‘ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்’ அறிக்கையால் மேலும் நெருக்கடி

# போருக்குப் பிறகு சட்ட விரோத கைது–சித்திரவதைகள்


இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்ந்து வெளிவரத் தொடங்கியுள்ளன. ‘ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்’ எனும் சர்வதேச மனித உரிமை அமைப்பு, போர் முடிந்த பிறகு இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களை, கடந்த 13 ஆம் தேதி அய்.நா.வின் அறிக்கையாக சமர்ப்பித்தது. இலங்கை அரசுக்கு உலக அரங்கில் மேலும் நெருக்கடிகளை உருவாக்கியுள்ள அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் இவை:

19. *இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 9(1)ன் கீழ், எந்தக் குற்றமும் குறிப்பிடாது ஒருவரை 18 மாதம் காவலில் வைக்க முடியும். அதற்குப் பிறகு, அவர் விடுதலை செய்யப்பட்டால், அவரது நடமாட்டத்தை பாதுகாப்புத் துறை அமைச்சகம் முடக்க முடியும். இந்த நடவடிக்கைகளை கேள்வி கேட்கவோ அல்லது நீதிமன்றம் தலையிடவோ உரிமையில்லை என்று பயங்கரவாத தடுப்புச் சட்டம் கூறுகிறது. கைதுக்கான ஆணை இல்லாமலே போலீஸ் கைது செய்யலாம். 72 மணி நேரத்தில் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். கைது சட்டப்படி சரியானதுதானா என்று கேள்வி கேட்கும் உரிமை நீதிபதிக்குக் கிடையாது. வழக்கு விசாரணை முடியும் வரை நீதிமன்றக் காவலில் சிறையில் வைக்க, நீதிபதி உத்தரவிடுவதைத் தவிர, அவருக்கு வேறு உரிமை இல்லை. இப்படி கைது செய்யப்பட்டு குற்றச் சாட்டுகள் ஏதும் கூறப்படாமலேயே ஆண்டுக்கணக்கில் ஏராளமானவர்கள் சிறையில் அடைபட்டுள்ளனர். 15 ஆண்டுகளாக தண்டனை ஏதும் வழங்கப்படாமலேயே சிறையில் பலர் இருக்கிறார்கள். குறிப்பாக அனுராதபுரம் சிறையில் இந்த சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ள 63 பேரில், 23 பேர் மீது மட்டும், குற்றம்சாட்டப்பட்டிருக்கிறது. ஏனையோர் குற்றம் சாட்டப்படாமலேயே 6 ஆண்டுகள் வரை சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.*

*விடுதலைப் புலி என்ற சந்தேகத்தில் திருமகள் சித்திரனேசன் ராபர்ட் என்ற பெண், கொழும்பில் 1996, செப். 8 இல் கைது செய்யப்பட்டார். அவரது தாய் நீதிமன்றத்தை அணுகினார், பயனில்லை. 8 ஆண்டுகளுக்குப் பிறகு அய்.நா.வின் குழு (முறைகேடான தடுப்புக் காவல் கண்காணிப்புக் குழு) இதேபோல் 12 பேர் சட்டவிரோத காவலில் இருப்பதை அறிந்து, பெயர்களைக் குறிப்பிட்டு அறிக்கை விடுத்தது. இனப்பாகுபாட்டின் அடிப்படையில் தமிழர்கள் என்ற காரணத்தால், இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதையும் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமை பிரகடனத்துக்கு, இது எதிரானது என்றும் அய்.நா.வின் குழு அறிவித்தது.*

*பயங்கரவாத தடுப்புச் சட்டம் இலங்கையில் 1979 இல் கொண்டு வரப்பட்டது. 1982 ஆம் ஆண்டு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டு அந்தச் சட்டம் நிரந்தர சட்டமாக்கப்பட்டுவிட்டது. அவசர நிலை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான் காவலில் வைக்க முடியும். அவர்களின் காவல் கெடு முடியும்போது பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு மாற்றப்பட்டு விடுவார்கள். குற்றச்சாட்டுகள் எதுவும் குறிப்பிடப்படாமலே அவசர நிலை சட்டத்தின் கீழ் ஒருவரை ஓராண்டு காவலில் வைக்கலாம். ஓராண்டு காவல் முடியும்போது பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு மாற்றிவிட்டால், மேலும் கூடுதலாக 18 மாதங்கள் காவலில் வைக்கலாம். அதுவும் முடிந்தபிறகு நீதிபதி முன் கொண்டு போய் நிறுத்தி நீதிமன்ற காவலுக்கு மாற்றப்பட்டு விடுவார்கள். குற்றச்சாட்டு - குற்றப்பத்திரிகை ஏதும் தாக்கல் செய்ய வேண்டாம். அதை நீதிபதிகளும் ஏற்றுக் கொள்வார்கள். வழக்கு விசாரணை முடியவில்லை என்று கூறி, காலவறையின்றி சிறையில் வைத்து விடலாம். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள், காவல் துறை அதிகாரிகளிடம் தரும் வாக்கு மூலத்தை நீதிமன்றம் அப்படியே அச்சுறுத்தி, சித்திரவதை செய்து, ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாக நீதிமன்றத்தில் கூற முடியாது. அந்தப் புகாரை நீதிமன்றமும் ஏற்காது.*

- *பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகிறவர்களில் தமிழர்களே அதிகம். கைதான அனைவருமே சித்திரவதைக்குள்ளாவது நிச்சயம். விடுதலைப்புலிகளுக்கு உதவியதாக சில சிங்கள போலீசாரும் ராணுவத்தினரும்கூட கைது செய்யப்பட்டு, அவர்களும் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகிறார்கள். ஊடகங் களில் இவர்களுக்கு எதிரான பரப்புரை செய்யப்பட்டு, சிங்கள சமூகத்திலிருந்து தனிமைப் படுத்தப்படுகிறார்கள்.*




- *(போருக்குப் பிறகு) சண்டை நடந்த பகுதிகள் மட்டுமல்லாது, இலங்கை முழுதும் சந்தேகத்தின் அடிப்படையில் குற்றச் சாட்டுகள் ஏதுமில்லாமல் முறைகேடாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படுகிறார்கள். இறுதி கட்டப் போரில் வன்னியைவிட்டு உயிர் பிழைக்க வெளியேறிய தமிழர்கள், பிற இலங்கையர்களைவிட மிக மோசமாக நடத்தப்படுகிறார்கள். அவர்கள் ஒட்டு மொத்தமாக தற்காலிக முகாம்களிலேயே அடைக்கப்படு கிறார்கள். அவர்கள் அனைவருமே நாட்டுக்கு ஆபத்தை உருவாக்கக்கூடிய பிரிவினராகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் ஒரே பிரிவினராகக் கருதப்படுவதால் தனி மனித உரிமைகள் முற்றாக பறிக்கப்படுகின்றன. வழக்கமான நீதித் துறை அமைப்புகளின சேவைகளைப் பயன்படுத்த முடியாது. நீதிமன்றத்தில் வழக்கு தொடரவோ, பிணை கேட்டு மனு செய்யவோ மறுக்கப்படுகிறது. பல மாதங்களாக காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.*
- *இராணுவம், போலீஸ், துணை ராணுவப் படை (காட்டிக் கொடுக்கும் கூலிப்படை) இந்தத் தமிழர்களைக் கைது செய்யவும், அவர்களை விசாரணைக்கு உட்படுத்தவும், பயன்படுத்தப்படுகிறது. மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவினரும் இணைந்து செயல்பட பாதுகாப்பு அமைச்சகம் அனுமதித்துள்ளது. இராணுவம், போலீஸ் மற்றும் துணை இராணுவப் படையினர் சந்தேகப்படுவோரை (தமிழர்களை) தனித் தனியே மாறி மாறி இரகசிய இடங்களில் வைத்து துன்புறுத்தி, சித்திரவதை செய்கிறார்கள். இதனால் இந்த விசாரணை நீண்டகாலம் இழுத்தடிக்கப்படுகிறது.*
- *போரின் இறுதி நாட்களில் வன்னியிலிருந்து வெளியேறி ஓடியவர்கள் முல்லைத் தீவில் ராணுவத்தை சந்திக்க வேண்டியிருந்தது. அவர்கள் அனைவரும் சரணடைய வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உண்டு என்று ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் சித்திரவதை செய்து விசாரிக்கப்பட்டார்கள். விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உண்டு என்று ஒப்புக் கொண்டவர்கள் விசாரணைக்கு உடன்பட மறுத்தவாகள் அனைவரும் ‘கடும் போக்கு’ உடையவர்கள் அல்லது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்களாக கருதப் பட்டு, “மறுவாழ்வு” மய்யங்களில் வைக்கப் பட்டனர். வவுனியாவில் ‘மறுவாழ்வு மய்யம்’ என்று கூறப்படும் பகுதிக்குக் கொண்டு சென்று சித்திரவதை செய்யப்பட்டார்கள். அங்கிருந்து கொழும்பு கொண்டு செல்லப்பட்டு, இலங்கை இரகசிய போலீஸ் பிரிவால் மேலும் “விசாரணைக்கு” உள்ளாக்கப்பட்டனர். ‘பயங்கரவாத விசாரணைத் துறை’ என்ற ஒரு தனி அமைப்பு, இலங்கையில் செயல்படுகிறது. இந்தத் துறையில் விசாரணைக்கு உள்ளா வோருக்கு தனியாக தடுப்புக் காவல் முகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பூசா சிறைச் சாலைக்குள்ளேயே தனிப் பகுதியில் ஆயிரக்கணக்கில் இந்தத் துறையால் விசாரணை நடத்தப்பட்டவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரிவு சிறைத் துறை கட்டுப்பாட்டில் இல்லாமல் பயங்கரவாத விசார;ணைத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. ஆயிரக்கணக்கில் இப்படி அடைக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையினர் மீது எந்தக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படாமலே அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.*
- *இலங்கையின் மலையகப் பகுதியிலிருந்தும், (மலையகத் தமிழர்கள் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் பகுதி) 50 பேரை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் செயல்படத் தயாராக இருந்தவர்கள் என்று கூறி இந்தத் துறை கைது செய்துள்ளது. தேயிலைத் தோட்டத்தில் தொழிலாளர்களாக வேலை செய்யும் 6 இளைஞர்கள் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். 2008-லிருந்து 2010 வரை கைது செய்யப்பட்ட இவர்கள், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதுல்லா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.*
- *கொழும்பிலுள்ள சி.அய்.டி. போலீஸ் தலைமையகத்தில் சித்திரவதை மிக மோசமாக நடக்கிறது. இப்படி சித்திரவதைக்குள்ளான ஒரு தமிழர் கூறுகிறார்:*

  *“கொழும்புக்கு கொண்டு வரப்பட்டால் அவ்வளவுதான். மிக மிகக் கடுமையான சொல்லவியலாத சித்திரவதை... உடல் முழுதும் முழுமையான சித்திரவதை... அங்கே ஒரு மின்சார நாற்காலி உண்டு. நினைத்தாலே நடுங்குகிறது. விசாரணையில் பேசப்படும் சொற்கள் கொடூரம். இரண்டாவது தளத்தில் விசாரணை நடக்கும்.... நான்காவது தளம் சித்திரவதைகளோடு விசாரணை நடக்கும்... 6வது தளத்தில் நடக்கும் சித்திரவதைக்குப் பிறகு, உயிருடன் மீளவே முடியாது.”*
- *கொழும்பு சி.அய்.டி. அலுவலகத்தில் மட்டு மல்ல, பூசா சிறையில் தனியாக வைக்கப் பட்டுள்ள முகாம்களிலும் சித்திரவதைகள் நடத்தப்படுகின்றன. இந்த சித்திரவதைளை செய்வதற்காக அதில் கைதேர்ந்த அதிகாரிகள் இருக்கிறார்கள்.* **காவலில் வைக்கப்பட்ட குடும்பத்தினரிடமிருந்து லஞ்சம் பெற்றுத் தருமாறு கேட்டுத்தான், தொடர்ந்து மேலும் மேலும் கூடுதல் சித்திரவதைகள் செய்யப்படுகின்றன.**

*2012 ஆம் ஆண்டு காவலிலிருந்த ஒரு முன்னாள் காவல்துறை அதிகாரியிடம் 2012 ஜனவரியில் ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் பேட்டிக் கண்டது. அய்.நா.வின் சித்திரவதை எதிர்ப்பு சிறப்பு அதிகாயின் பதிவேட்டிலும் இது இடம் பெற்றுள்ளது.*

*இலங்கை அமைச்சர் ஒருவர் கொலையில் தொடர்புபடுத்தி, இலட்சுமண் கூரே என்ற காவல்துறை அதிகாரி, 2009 ஆகஸ்டில் காவலில் வைக்கப்பட்டார். 17 மாத காவலுக்குப் பிறகு, 2011 பிப். 7 இல் கொழும்பு உயர்நீதிமன்றம் அவரை குற்றவாளி என்று தீர்ப்பளித்தது. நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு அவரை சிறைக் கைதியாக சிறைக்குத்தான் அனுப்ப வேண்டும். அனால், நீதி மன்றமே இலங்கையில் தண்டனைச் சட்டத்துக்கு நேர்மாறாக “பயங்கரவாத விசாரணைத் துறை” கட்டுப்பாட்டில் உள்ள தடுப்புக் காவல் மய்யத்துக்கே திருப்பி அனுப்ப ஒப்புக் கொண்டது. அங்கே அவர் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவார் என்று வழக்கறிஞர் கூறியதை ஏற்க கொழும்பு உயாநீதிமன்றம் தயராக இல்லை. இத்தனைக்கும் இவர் உயர் பொறுப்பில் இருந்த காவல்துறை அதிகாரி, ஜூலை 2011இல் கூரே, இலங்கை உச்சநீதிமன்றத்தில் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்று வழக்கு தொடர்ந்தார். உச்சநீதிமன்றம் காவலில் வைத்துள்ளது சட்ட விரோதம் என்பதையும் சித்திரவதை நடத்தப்பட்டதையும் ஒப்புக் கொண்டதோடு, அதில் தொடர்புடைய புலனாய்வு அதிகாரிகள் பெயரையும் வெளியிட்டது. பயங்கரவாத விாசரணைத் துறை பொறுப்பு அதிகாரி பிரசன்னா டி.அல்விஸ், இலங்கை காவலதுறை தலைமை ஆய்வாளர், பாதுகாப்புத் துறை செயலாளர் மற்றும் அரசு தலைமை வழக்கறிஞர் ஆகியோர் இந்த சட்ட விரோத காவலுக்கு துணையாக இருந்ததாக இலங்கை உச்சநீதிமன்றம் கூறியது. கூரே விசாரணையின்போது எப்படியெல்லாம் சித்திரவதை செய்யப்பட்டார் என்ற விரிவான செய்திகளை இலங்கை ஊடகங்கள் வெளியிட்டன. அவரது தலையில் புத்தகங்களை அடுக்கி, அதன் மீது கற்களாலும் தடிகளாலும் தலையில் அடிக்கப்பட்டார். மேசை மீது படுக்க வைத்து உள்ளங்காலில் தடிகளால் அடிக்கப்பட்டார். ஆறு அடி ஒரு அங்குல உயரமுள்ள அந்த அதிகாரியை 6 அடி உயரமுள்ள குறுகிய கூண்டுக்குள் திணித்து அடைத்து வைத்தார்கள். உண்மையை ஒப்புக் கொள்ளாவிட்டால் கொன்று விடுவதாகவும், அவரது மனைவியை கைது செய்யப் போவதாகவும் மிரட்டினர். போலீசார் கூறுவதை அப்படி எழுதித் தர முடியாது என்று அவர் மறுத்ததால், அவரை ஒரு அறைக்குக் கொண்டு சென்று விரல்களிலும் கைகளிலும் உடல்களிலும் சிகரெட்டு புகை நெருப்பால் சுட்டனர், என்று ஊடகங்கள் எழுதின.*

**– தொடரும்**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## போராளிகள் இமானுவேல் சேகரன் - மேலவளவு முருகேசன் நினைவிடங்களில் உறுதி ஏற்று பரப்புரைப் பயணம் தொடங்குகிறது

**பரப்புரைப் பயணத் திட்டம்:**

போராளிகள் இமானுவேல் சேகரன் - மேலவளவு முருகேசன் நினைவிடங்களில் உறுதி ஏற்பு பரப்புரைப் பயணம் தொடங்குகிறது.

| | |
|---|---|
| 14.4.2012 சனி மாலை 5 மணி : நினைவிடம் | - பரமகுடி - இமானுவேல் சேகரன் - சாதி ஒழிப்பு உறுதியேற்பு பொதுக் கூட்டம் - இரவு தங்கல் |
| 15.4.2012 ஞாயிறு - பகல் 2 மணி : | - மேலவளவு - மேலவளவு முருகேசன் நினைவிடம் - சாதி ஒழிப்பு உறுதியேற்பு |
| மாலை 5 மணி | - மேலூர் |
| மாலை 6.30 மணி | - ஒத்தக்கடை |
| இரவு 8 மணி | - திருப்பரங்குன்றம் - இரவு தங்கல். |
| 16.4.2012 திங்கள் - மாலை 5 மணி | - செக்கானூரணி |
| மாலை 6.30 மணி | - சோழவந்தான் |
| இரவு 8 மணி | - உசிலம்பட்டி - இரவு தங்கல். |
| 17.4.2012 செவ்வாய் - மாலை 5 மணி | - பெரியகுளம் |
| மாலை 6.30 மணி | - வத்தலகுண்டு |
| இரவு 8 மணி | - ஆத்தூர் - இரவு தங்கல் |
| 18.4.2012 புதன் - மாலை 5 மணி | - சின்னாளப்பட்டி |
| மாலை 6.30 மணி | - கோபால்பட்டி |
| இரவு 8 மணி | - நத்தம் - இரவு தங்கல். |
| 19.4.2012 வியாழன் - மாலை 5 மணி | - காட்டூர் |
| மாலை 6.30 மணி | - திருவெறும்பூர் - இரவு தங்கல் |
| 20.4.2012 வெள்ளி - மாலை 5 மணி | - இலால்குடி |
| மாலை 6.30 மணி | - திருமானூர் |
| இரவு 8 மணி | - அரியலூர் - இரவு தங்கல் |
| 21.4.2012 சனி - மாலை 5 மணி | - குன்னம் |
| மாலை 6.30 மணி | - பேரணி |
| இரவு 8 மணி | - பெரம்பலூர் - இரவு தங்கல் |
| 22.4.2012 ஞாயிறு - மாலை 5 மணி | - துறையூர் |
| மாலை 6.30 மணி | - முசிறி |
| இரவு 8 மணி | - கிருஷ்ணராயபுரம் - இரவு தங்கல் |
| 23.4.2012 திங்கள் - மாலை 5 மணி | - கொடுமுடி |
| மாலை 6.30 மணி | - ஊஞ்சலூர் |
| இரவு 8 மணி | - கணபதி பாளையம் - இரவு தங்கல் |
| 24.4.2012 செவ்வாய் - மாலை 5 மணி | - திருச்செங்கோடு |
| மாலை 6.30 மணி | - குமாரபாளையம் |
| இரவு 8 மணி | - பவானி - இரவு தங்கல் |
| 25.4.2012 புதன் - மாலை 5 மணி | - பெருந்துறை |
| மாலை 6.30 மணி | - கொளப்பலூர் |
| இரவு 8 மணி | - கோபி - இரவு தங்கல் |
| 26.4.2012 வியாழன் - மாலை 5 மணி | - சத்தியமங்கலம் |
| மாலை 6.30 மணி - | அன்னூர் |
| இரவு 8 மணி | - கருமத்தம்பட்டி - இரவு தங்கல் |
| 27.4.2012 வெள்ளி - மாலை 5 மணி | - சூலூர் |
| மாலை 6.30 மணி | - பாப்பம்பட்டி |
| இரவு 8 மணி | - கிணத்துக்கடவு - இரவு தங்கல் |
| 28.4.2012 சனி - மாலை 5 மணி | - பொள்ளாச்சி |
| மாலை 6.30 மணி | - உடுமலை |
| இரவு 8 மணி | - பல்லடம் - இரவு தங்கல் |
| 29.4.2012 ஞாயிறு - காலை 10 மணி | - செகுடந்தாளி - செகுடந்தாளி முருகேசன் நினைவிடம் - சாதி ஒழிப்பு உறுதியேற்பு |
| பகல் 12 மணி | - சோமனூர் |
| மாலை 6.30 மணி | - திருப்பூர் பயண நிறைவு |

**சொற்பொழிவாளர்கள்:**

தூத்துக்குடி பால்.பிரபாகரன், பொள்ளாச்சி விஜயராகவன், திருச்சி புதியவன், பொள்ளாச்சி கா.ச.நாகராசு, வெள்ளமடை நாகராசு, கோபி வேலுச்சாமி, பழனி நல்லதம்பி, நங்கவள்ளி அன்பு, சூலூர் வீரமணி

**மந்திரமா தந்திரமா:**

சிற்பி இராசன், மடத்துக்குளம் மோகன், பெரம்பலூர் தாமோதரன், காவை இளவரசன்

**பாடல்:** மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழு - சமப்பா குமரன்.

**ஏற்பாடு: பெரியார் திராவிடர் கழகம்**

### முதல் பக்கத் தொடர்ச்சி

அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம் - என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

“ஒரு தீண்டப்படாதவனின் நிலைமை யூதனின் நிலைமையைவிட மிக மிக மோசமானது; பரிதாபத் திலும் பரிதாபத்திற்குரியது. யூதனுக்கு ஏற்பட்டுள்ள அவலங்கள் அவனே உருவாக்கிக் கொண்டவை. ஆனால், தீண்டப்படாதவனுக்கு ஏற்பட்டள்ள துன்ப, துயரங்களோ அப்படிப்பட்டவை அல்ல; அவற்றிலும் கொடுமையினும் கொடுமையானவை. இந்து மதத்தின் திட்டமிட்ட சதியே இதற்கெல்லாம் காரணம், நாகரிகமற்ற, காட்மிராண்டித்தனமான, முரட்டுத்தனமான வன்முறையைவிடவும் அதிக குரூரங்களை விளைவிக்க வல்லது, இந்த தீண்டாமை எனும் சாபக்கேடு.” - அம்பேத்கர், தொகுதி 17, பக். 9

# கூடங்குளம் மக்கள் போராட்டத்தை ஒடுக்காதே!

## தமிழக அரசுக்கு கடும் எதிர்ப்பு



கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராடும் இடிந்த கரை மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் பாளையங்கோட்டையில் மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இந்த ஆர்ப்பாட்டத்துக்கான அழைப்பு விடுத்திருந்தார். மார்ச் 23 ஆம் தேதி பாளையங்கோட்டை ஜவகர் திடலில் பெரியார் திராவிடர் கழகம் ம.தி.மு.க., நாம் தமிழர், விடுதலை சிறுத்தைகள், மனித நேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, த.தே.பொ.க., தமிழர் தேசிய விடுதலை இயக்கம், ஆதித் தமிழர் பேரவை, பா.ம.க., எஸ்.டி.பி.அய்., தமிழ்ப் புலிகள், காஞ்சி மக்கள் மன்றம், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், இந்திய தவ்ஹித் ஜமாத், அணுஉலை எதிர்ப்பு கூட்டமைப்பு அமைப்பினரும், அணுஉலை எதிர்ப்பாளர்களும் ஆயிரக்கணக்கில் திரண்டனர்.

பாளையங்கோட்டையிலிருந்து இடிந்தகரை நோக்கி பேரணியாக பெரியார் தி.க. தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் புறப்படத் தயாரானார்கள். முன்னதாக ஜவகர் திடலில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் வைகோ, கொளத்தூர் மணி, சீமான், வன்னிஅரசு உள்ளிட்ட பலரும் உரையாற்றினர். பேரணிக்கு அனுமதி மறுத்து ஆயிரத்துக்கும் அதிகமான தோழர்களை போலீசார் கைது செய்தனர். பொது மக்களுக்கு பீதியை ஏற்படுத்தும் வகையில் கூடங்குளம் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள துணை ராணுவம், போலீஸ் படையை திரும்பப் பெற வேண்டும்; கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வேண்டும்; கைது செய்யப்பட்ட அப்பாவி மக்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைள் முன் வைக்கப்பட்டன.

கூடங்குளம் எதிர்ப்புப் போராட்டத்துக்கு அமெரிக்காவிலிருந்து நிதி வருவதாக குற்றம்சாட்டிய மன்மோகன் சிங் ஆட்சி, அப்படி நிதி வருவதற்கான ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை என்று மாநிலங்களவையில் அறிவித்து விட்டது. இப்போது மாவோயிஸ்டுகள், நக்சலைட்டுகள், இந்தப் போராட்டத்தை நடத்துவதாக அடுத்தகட்ட பொய்யுரைகளை பரப்பி வருகிறது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று விடுதலையான பிறகு, விடுதலை சிறுத்தைகள் செய்தி தொடர்பாளர் வன்னியரசு, ‘தமிழக இளைஞர் எழுச்சிப் பாசறை’ அமைப்பைச் சேர்ந்த சதீஷ், ஈரோடு தோழர் முகிலன் ஆகியோரை கைது செய்து சிறையிலடைத்துள்ளது.

**உதயகுமார் உருக்கமான உரை**

போராட்டக்குழு தலைவர் உதயக்குமார், பல்லாயிரக்கணக்கான போராட்டக் குழுவினருடன் தொடர்ந்து பட்டினிப் போராட்டம் நடத்தி வருகிறார். சென்னையில் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் மாநில மாநாடு விளக்கப் பொதுக் கூட்டம் மார்ச் 25 மாலை சென்னை லயோலா கல்லூரி அரங்கில் நடந்தபோது அதில் பங்கேற்றுப் பேசுவதாக இருந்த உதயகுமார், அலைபேசி வழியாக கூடங்குளத்திலிருந்து பேசினார். அவரது உரை, ஒலிபெருக்கி வழியாக ஒலி பரப்பப்பட்டது. 6வது நாளாக பட்டினிப் போராட்டத்தைத் தொடர்ந்த நிலையில் கூடங்குளம் மக்கள் மீது, மத்திய மாநில அரசுகள் ஏவி விடும் அடக்குமுறைகளை எடுத்துக் கூறினார். ‘நக்சலைட்டுகள்’ போராட்டமாக காவல்துறை சித்தரிக்கும் முயற்சிகளை சுட்டிக்காட்டிய அவர், பட்டினிப் போராட்டம் நடத்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நிலை பற்றி மாநில அரசு எந்தக் கவலையும் எடுத்துக் கொள்ளவில்லை. போராடும் பகுதியில் பொது சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டு, தொற்று நோய் பரவும் ஆபத்துகள் உருவாகியுள்ள நிலையில் அரசு சுகாதார அமைப்புகள், திரும்பிப் பார்க்காமல் புறக்கணித்து வருவதோடு, ஒடுக்கப்பட்ட சாதி, ஏழை மக்களின் இந்த நியாயமான போராட்டத்தை அலட்சியப்படுத்தி புறக்கணித்து வருகிறது. உண்ணாவிரதம் தொடங்கியபோது, கடமைக்காக ஒரு மருத்துவரும், 4 உதவியாளர்களும் பரிசோதித்தனர். அதற்குப் பிறகு எந்த மருத்துவரும் திரும்பிப் பார்க்கவில்லை. இந்த ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்த ஏழை மக்கள் அப்படியே செத்துப் போகட்டும் என்ற முடிவுக்கே அரசு வந்து விட்டதாக கருத வேண்டியிருக்கிறது. ஆனாலும், போராட்டத்தை நாங்கள் உறுதியாக தொடருவோம்” என்றார் உதயகுமார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 29th March 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.